卐

பிர்மமே - ஸத்யம்.

கைவல்ய நவநீத சாரம்

அல்லது

எனது நிஜ சொரூபம்

(முதல் பாகம்)

★

நாங்கூர்,
ஆனந்தாஸ்ரமத் தலைவர், வேதாந்தகேசரி,
ஸ்ரீ-ல-ஸ்ரீ சுவாமி வாசுதேவானந்தா
அவர்கள்
இயற்றியருளியது.

★

திருவாரூர் - புலிவலம்,
பிர்ம வித்யா பீட வெளியீடு.

1983.

விஷயானந்தம்.

★

தொல்காப்பியத்தின் பொருளதிகாரத்திற்கு உச்சிமேற்புலவர்கொள் நச்சினர்க்கினியார் இயற்றி அருளிய உரையில்

"ஒத்த அன்பான் ஒருத்தனும், ஒருத்தியும் கூடுகின்ற காலத்து பிறந்த பேரின்பம் அக்கூட்டத் தின் பின்னர் அவ்விருவரும் ஒருவருக்கு ஒருவர் தத்தமக்கு புலனுக இவ்வாறிருந்ததென கூறப்படாத தாய் யாண்டும் உள்ளத்துணர்வே நுகர்ந்து இன் புறுவதோர்ப் பொருளாதலின் அதனை அகம் (நான்) என்ருர். எனவே அகத்தே நிகழ்கின்ற இன்பத்திற்கு அகம் என்றது ஓர் ஆகுபெயராம்"

என்று கூறியிருப்பதால் ஆத்மாவின் சொரு பானந்தமே விஷயானந்தமாய் தோன்றுகின்தே ஒழிய விஷயத்தில் ஆனந்தமில்லை என்பது தமிழ்மறையின் திரண்ட பொருளாம்.

卐

பிர்மமே - ஸத்யம்.

கைவல்ய நவநீத சாரம்

அல்லது

எனது நிஜ சொரூபம்

(முதல் பாகம்)

★

நாங்கூர்,

ஆனந்தாஸ்ரமத் தலைவர், வேதாந்தகேசரி,

ஸ்ரீ-ல-ஸ்ரீ சுவாமி வாசுதேவானந்தா

அவர்கள்

இயற்றியருளியது.

★

திருவாரூர் - புலிவலம்,

பிர்ம வித்யா பீட வெளியீடு.

1983.

பிர்மமே ஸத்யம்.

இந்நூலாசிரியர், நாங்கூர் - ஆனந்தாஸ்ரமத் தலைவர்



வேதாந்தகேசரி


ஸ்ரீ-ல-ஸ்ரீ சுவாமி வாசுதேவானந்தா

மறைவு : 25—10—81

卐

பிர்மமே - ஸத்யம்.

சுவாமி வாசுதேவானந்தா அவர்களின் சிஷ்யர்கள்



செ. முருகேசன், (நாங்கூர்)
வள்ளுவர் புத்தக நிலையம், சிங்கப்பூர்.

V. மாயழகு, (திருநாடன்பட்டி)
கேம்ப் : சிங்கப்பூர்.

திருவாரூர் - புலிவலம்,
பிர்ம வித்யாபீடத் தலைவர்,
பேரறிஞர் **சாது பிர்மானந்தா** அவர்களால்
வெளியிடப்பட்டது.

★


விலை ரூ. 3—50

★

அச்சிட்டோர்:
மனோகர் அச்சகம்,
திருவாரூர் - 610 001.



M. கணபதி (ராமநாதபுரம்)
கேம்ப் : சிங்கப்பூர்.



K. K. ஏகாம்பரம் (மாப்பிள்ளைக்குப்பம்)
கேம்ப் : சிங்கப்பூர்.

V. R. ஆறுமுகம் (நாங்கூர்)
கேம்ப் : சிங்கப்பூர்.

卐

பிரஹ்மமே - ஸத்யம்.
அதுவே நித்யம்.

மதிப்புரை.

★

குருர் பிரும்மா குருர் விஷ்ணு குருர் தேவோ மகேஸ்வர:
குரு சாக்ஷாத் பரப்பிரஹ்ம தஸ்மை ஸ்ரீ குருவே நம:

தெளிவு குருவின் திருமேனி காண்டல்
தெளிவு குருவின் திருநாமம் செப்பல்
தெளிவு குருவின் திருவார்த்தைக் கேட்டல்
தெளிவு குருவுரு சிந்தித்தல் தானே.

ஆர்வமுள்ள ஆன்மநேய ஆர்வலர்களே!

நம் யாவரின் மதிப்பிற்கும் மரியாதைக்கும் அணிகலனுக திகழ்ந்து, நம்மையெல்லாம் பேரின்ப கோட்டைக்கு இட்டுச் சென்று, எனது கடமைகள் யாவும் முடிந்துவிடவில்லை, அதைத் தொடர்ந்து செயலாற்ற பேறறிவு உங்களை தடுத் தாட்கொண்டுள்ளது என்று கூருமல் கூறிச்சென்றுள்ளார்கள் சுவாமி வாசுதேவானந்தா! அன்பர்களே! நமது குருபிரான் அவர்களின் எண்ணத்தை பூர்த்திசெய்ய வேண்டியது நமது தலையாயக் கடமை.

சுவாமி வாசுதேவானந்தா அவர்களின் பூதவுடல் மறைந்தாலும் புகழுடம்பு என்றென்றும் நமது செயல் யாவற்றிலும் உறுதுணையாக, நிகழ்ச்சிப்பொருளாக இருப்ப தாக நினைத்துக்கொண்டு செயலாற்றுவோம்; அதுவே நாம் செய்கின்ற குருத்தொண்டாகும்.

சுவாமி அவர்கள் கையேட்டுப் பிரதியாக விட்டுச்சென்ற வற்றை தெளிவுசெய்து, நமக்கும் நாட்டுக்கும் நலன் பயக்கக் கூடியவற்றை நாம் நூலாக வெளியிடவும், சுவாமி அவர் களின் எண்ணத்தை ஈடேற்றவும், அதற்கு உறுதுணையாக சுவாமி ஸாது பிர்மானந்தா அவர்கள் முன்னின்று முனைப் பாக செயல்புரிய பேரறிவு நமக்களித்த வரப்பிரசாதம் என்பதனை உணர்ந்து, சுவாமி ஸாதுபிர்மானந்தா அவர்களுக் கும் முழு ஒத்துழைப்புக் கொடுத்து "கைவல்யநவனீதசாரம்"

என்ற நூலினையும் அச்சேற்றி உலா வருவதற்கு உறுதுணை யாக நின்று கடனாற்றுவோம்.

கைவல்யம் இரு படலங்களாக உள்ளவை என்பது யாவரும் அறிந்ததே. இவ்விரு படலங்களையும் தற்கால மக்களின் வாழ்க்கை முறை அமைப்பிற்கேற்ப எளிய நடையில் வலிய க்ருத்துக்களையும் பசுமரத்தாணிபோல் வாசிப்போர் உள்ளங்களில் இலகுவாக பதியும் முறையில் தெளிந்த நடை, தேர்ந்த நடை என்பதனையும், வாசிப்போர் ஒவ்வொருவரும் உய்த்துணரலாம். அத்தகைய உயரிய பொருள் பதிந்த "கைவல்யநவனீதசாரம்" எனும் நூலினையும் சிறப்பான முறையில் முதல் பகுதியாக வெளிவருகின்றது. இதைத் தொடர்ந்து சுமார் நான்கு பகுதிகளாக கைவல்யசாரத்தையும் வெளியிட எண்ணியுள்ளோம். வாசக மெய்யன்பர்கள் வாங்கிப் படித்து உண்மை நிலையறிந்து, ஆத்மஞான சிகாமணிகளாக வாழ வேண்டும் என்பதே எங்கள் உள்ளக்கிடக்கை.

அந்த வகையில் நாம் உயர்ந்த எண்ணங்களை வளர்த்துக் கொள்வோம். உண்மை நெறிக்கு புறம்பானவற்றை உதறி தள்ளுவோம், உறுதியற்ற செயல்களில் முயன்று செயல் படாதிருப்போம், மனித குலத்திற்கு நன்மைதரும் செயல் பாட்டுடையோராக இருப்போம், பொறுமையோடு உறுதி யான மனம் படைத்தவர்களாக இருப்போம்.

உலக மக்களின் மேன்மைக்காக பாடுபடும் ஞானிகள், நீண்ட கால இடைவெளிக்கு பின்புதான் உலகில் பிறக்கின்றார்கள். அப்படிப்பட்ட ஞானிகளினால், நாம் வாழும் உலகம் நிறைய நிறைவான பலனைப் பயனைப் பெறுகிறது என்பது உலகப் பிரசித்தம்.

இதோ ஆதிசங்கரர் நல்லோரின் இணக்கத்தைப் பற்றி கூறுவதைப் படித்துப் பார்ப்போம்:

ஸத்ஸங்கத்வே நிஸ்ஸங்கத்வம்;
நிஸ்ஸங்கத்வே நிர்மோஹத்வம்,
நிர்மோஹத்வே நிஸ்சலதத்வம்
நிஸ்சலதத்வே ஜீவன்முக்தி.

இதன் பொருள் நீ உண்மையான பொருளை அறிந்து நல்லோர்களுடன் சேர்ந்து பழகினால் உலகப்பற்றை அறுப்பாய். உலகப்பற்று நீங்கினால் உன் மயக்கம் தொலையும். மயக்கம் தொலைந்தால் சாசுவதமான பரம்பொருளை அறிவாய். அதை அறிவதால் நீ இந்த உலகில் வாழ்ந்திருக்கும்போதே ஞானியாக ஆதாவது ஜீவன் முக்தனாக ஆகி விடுவாய். இவ்வுலகிலேயே பேரின்பத்தை அடைந்திடலாம் என்பது இதன் கருத்து.

அன்பு அறிவு ஆண்மை
உள்ளொளி ஒளிரும் உதயக் கதிர்
செந்தண்மை பூண்டொழுகும் செந்நாப்புலவர்
ஒழுக்கத்தில் விழுப்பம் உடையோன்
அரிமா நெஞ்சம் பேரறிவின் மஞ்சம்
எண்ணத்தில் தூய்மை வாய்மையில் உண்மை
ஊகம் ஊக்கம் உணர்வுரையாளன்
உலகம் உவப்ப உரைத்திட்ட பெரியோன்
ஔவியம் அகற்றிய ஆத்ம சீலன்
அறிவொளி ஒளிரும் அந்தணன்
ஆத்ம ஞான பேரின்ப நாதன்.

இப்படி எத்தனையெத்தனையோ கூறலாம். நம் அனைவரின் உள்ளத்திலும் உள்ளொளி பெருஞ்சுடராய் பிரகாசித்துக் கொண்டிருப்பவர்கள்தான் நமது குருபிரான் ஸ்வாமி வாசுதேவானந்தா அவர்கள் என்றால் மிகையாகாது. ஆகவே, நண்பர்களே நீங்கள் யாவரும் இவ்வரிய நூலினைப் பெற்று, கருத்தூன்றிப் படித்து ஜீவன் முக்தர்களாக வாழ் வாங்கு வாழ வாழ்த்துகின்றோம்.

சற்குரு வாழ்க. குருவே துணை.

இப்படிக்கு,
செ. முருகேசன்,
திருநாங்கூர்.
வை. மாயழகு,
திருநாடன்பட்டி,
புதுக்கோட்டை தாலுக்கா.

16—10—82.

卐

பிர்மமே ஸத்யம்.

முகவுரை.

★

நாம் காணும் இவ்வுலகில் தோன்றியுள்ள ஜீவராசிகளுக்குள் மானிட வர்க்கமே உயர்வாக மதிக்கத்தக்கதாம். எல்லாவற்றையும் அறியும் ஆற்றல் பெற்றுள்ளது மானிடப் பிறவியாம் என்பது எல்லோருடைய அனுபவமாம். இத்தகைய மானிடப் பிறவியில் அறிய வேண்டிய அனேக விஷயங்களிருப்பினும், அவற்றுள் அறம், பொருள், இன்பம், வீடாய நான்கில் பெரியோர்களால் போற்றப்படுவது வீடாம். வீடு, மோக்ஷம், முக்தி, பரமபதம், பேரின்பம் என்பன ஒரு பொருளையே குறிக்கும் சொற்களாம். பேரின்பத்தை அறிவிப்பதற்காக பண்டைகால ரிஷிகளும், முனிவர்களும் தாங்கள் தங்கள் மாணவர்களுக்காக உபயோகிக்கப்பட்டு வந்த சொற்களாதலின் அவைகளின் பொருள் ஒன்றேயாம். இத்தகைய சொற்களால் அறிவிக்கப்பட்ட பொருள் யாதாயிருக்கலாமென்று அறிய வேட்கையுடையாரை நோக்கி அது உன் உண்மை சொரூபமாவென்று நான்கு வேதங்களும் முடிவில் கூறிவிட்டன. அவ்வேத வாக்கியங்களைக் கேட்பவர்களுக்கு அனுபவமாகும்படி உன் சொரூபம் சத்து, சித்து, ஆனந்த, நித்திய, பூரணமான ஐந்து லக்ஷியங்களை சொரூப குணமாகப் பெற்றுள்ள ஆன்மாவாம். அது உன் வாஸ்தவ சொரூபமாக அறிவதே வீடாம் என்று சுருதி யுக்தி அனுபவத்தோடு விளக்கிக்காட்டுவதாலும், ஒருவன் நான் யாரென விசாரிக்க முற்படுவானாயின் அவன் தத்துவ சோதனையில் நான் பிரம வடிவனான ஆத்ம சொரூபனென்று அறிவது உண்மை ஞானமாயிருப்பதாலும், அதுவே மோக்ஷமாயிருப்பதாலும் அந்த ஞான சொரூபத்திற்கு உளவாகும் லக்ஷிய லக்ஷணங்களை விளக்கிக் கூறுவதாயிருப்பதாலும் இந்நூலுக்கு "**எனது நிஜ சொரூபம்**" எனவும், **கைவல்ய நவனீதசார**மெனவும் எனப் பெயர் சூட்டப்பெற்றது. ஒருவன் தன்னை ஜீவனாக மதிக்கும் மதிப்பை நோக்கி 'நீ ஜீவனன்று சச்சிதானந்த சொரூபன்' என்று அறிவிப்பதே வேதாகமங்களின் நோக்கமாயினும் அவ்வுண்மையை அறிய ஆற்றலற்றவர்களாக

பலர் காணப்படுவதால் அவர்களுடைய மனோநிலைக்குத் தக்கவாறு உத்தமன், மத்திமன், அதமன் என அதிகாரிகளை மூவகைப்படுத்தி அவர்களுக்குத் தகுந்தவாறு சாஸ்திரங்கள் பலவிதமாக எழுதப்பட்டுள்ளன என்பது தென்மொழி, வடமொழி முதலிய சகல மொழிகளிலும் பிரசித்தமாம். மொழி வேறுபாடிருப்பினும் அவைகளால் போதிக்கப்படும் பொருள் ஒன்றேயாம். அத்தகைய பொருள் யாதாயிருக்குமோ என அறிய விருப்பமுடையார் யாராயிருப்பினும் அவர்களே இந்நூலுக்குரிய அதிகாரிகளாவர்.

வேதாகம சாஸ்திரங்கள் எப்பாஷையிலிருப்பினும் பாத்திர பேதத்தால் அமிருதம் பேதப்படாததுபோல் பாஷா பேதத்தால் அதன் உட்பொருளான ஞானவடிவமான மெய்ப் பொருள் பேதப்படுவதில்லை. அது அபேதமாக யாவர் உள்ளத்தையும் விளக்கிக்கொண்டிருப்பதால் அது ஆகாசத்தைப் போன்று எங்கும் வியாபகமாகவும், நித்தியமாகவும், தானேதானாகவும் மற்றொன்றின் உதவியின்றி விளங்குவதால் அதன்கண் துக்கம் முதலியன மூன்று காலத்துமில்லை. அது ஸ்வஜாதிய விஜாதிய ஸ்வகத பேதமற்ற நிரதிசயானந்த வடிவமாமெனக்கூறும் வேதாகமத்தை தழுவி அதன் கருத்தான ஆத்ம சொரூபத்தை உள்ளங்கை நெல்லிக்கனி போல் விளக்கிக்காட்டுவதால் சர்வதுக்கநிவர்த்தியோடு கூடிய பரமானந்தபிராப்தியே இந்நூலின் பயனாமென்க.

பல சாஸ்திரங்களை கசடறக் கற்றும், பிறர்க்கு உரைத்தும் உபதேசநெறிபுரிந்தும், பல புண்ணிய காரியங்களைச் செய்தும், பெரிய யோகாப்பியாசங்களைப் பயின்றும் அதனால் மகிழ்ச்சியடைந்தவனானாலும் அவன் தன் வாஸ்தவ சொரூபம் இரண்டற்றது, அது பரமானந்த போத சொரூபமானது, அது மோக்ஷவடிவமானது என்று அறியாது போனால் அவனுக்கு பேரின்பம் கிடையாது. ஆகையால் ஆத்ம சொரூபத்தை அறிய விருப்பமுடையார் யாவர்க்கும் இந்நூல் பேருதவி செய்யுமென்பதற்கு ஐயமில்லை. ஒருவன் தன்னை ஜீவனாக அல்லது மனிதனாக மதிக்கும் மதிப்புக்கு விளக்கம் தரும் பொருள் அம்மதிப்புக்கு வேறாக அல்லது மதிப்பாகிய எண்ணங்களால் ஏற்படும் சுகதுக்கங்களுக்கு வேறாகயிருந்தாலொழிய தன்னை ஜீவனாகவோ, மனிதனாகவோ மதிக்க

முடியாதென்பதையும் அத்தகைய விளக்கம் தரும் பரம் பொருள் ஆனந்த வடிவமாமென்பதையும் அது உன் வடிவமா மென்பதையும் பல மேற்கோளுடன் ஆங்காங்கு எடுத்துக் காட்டி விளக்கியிருப்பதால் இந்நூல் சர்வ சாஸ்திர சம்மதமா மென்க.

உபநிடதத்தின் முடிவை அனுசரித்து ஆதிசங்கரர், விவேகானந்தர் முதலியோர்களால் வெளியிடப்பட்டுள்ள அத்வைத சித்தாந்தத்தை தழுவி இந்நூல் எழுதப்பட்டுள்ள தால் அவர்களின் உள்ளக் கருத்தை சிரமமின்றி இந்நூலகத் தில் காணலாம். மதம், சமயம் முதலிய பற்றுக்கோடின்றி தன்னை நடுநிலையாக்கிக்கொண்டு இந்நூலை ஆதியோடந்தம் ஆராய்ச்சி செய்து நோக்கின் ஜீவாத்மா, பரமாத்மாக்களின் ஒருமையை அறிந்து பேதப்பிராந்தி நீங்கி, அபேதஞானம் உண்டாகி அதனுல் பகவத்கீதையின் உட்பொருளான பற்றின்மை என்ற வாளாயுதத்தை கையில் ஏந்தியவனுய் தன் வாழ்க்கையை நடத்த வேண்டுமென்பதே இந்நூலின் நோக்கமாகும். ஜீவாத்மா பரமாத்மாக்களுக்கு பேதம் காணு மளவும் ஜீவனுடைய அறியாமை நீங்காது; நீங்காதுபோகவே அதன் காரியமான ஜனனமரண துக்கமும்; சத்தியம், அஹிம்சை, சகோதரத்துவம் முதலிய தூய குணங்களின் இன்மை அதிகரித்து பேதப்பிராந்தி மேன்மேலும் ஓங்கி வளர்ந்து அதனுல் தன் உண்மை சொரூபத்தை அறிந்து பேரின்பம் அடைய முடியாது போகுமன்றோ. போகுமானுல் துக்கநிவர்த்தியின்றி மக்கள் தவிக்க நேரிடுமென்ற கருணையே இந்நூல் எழுதுவதற்கு காரணமாகும்.

இந்நூல் அளவில் சிறியதாயிருப்பினும் வேதத்தின் சாகைகளெனப்படும் மொத்தமுள்ள 1180 உபநிஷத்துக் களின் சாரமும், மற்றுமுள்ள அறிவாராய்ச்சி நூல்களின் சாரமும் அடங்கியிருப்பதால் இது யாவர்க்கும் சுவானு பவத்தை விளக்கிக்காட்டும் நூலாகுமென்பதற்கு ஐயமில்லை. காணப்படும் இவ்வுலகம் நாமரூபமாகத் தோன்றுகின்றதே யொழிய பிரமவடிவமாகத் தோன்றவில்லையே என்று உண்டா கும் ஐயத்திற்கு கிரமசிருஷ்டி, உகபர்சிருஷ்டி, அஜாதவாதம் என சிருஷ்டி வகைகளைப் போதிக்கும் போதனைக்கிரமம்

மூவகையாகயிருக்குமெனவும், அதில் அஜாதவாதமே வேதத்திற்கும் இந்நூலுக்கும் உடன்பாடாம் என்பதையும் இந்நூலகத்தில் தெளிவாய் விளக்கப்பட்டிருப்பதால் அத்வைத சித்தாந்தம் வெளிப்படையாய் நன்கு புலனாகுமென்பது எமது துணிபாம். சாஸ்திரங்கள் கடல்போல் விரிந்திருப்பினும் அவற்றை நன்கு ஆராய்ந்தவர்களாயினும் சரி, ஜீவனென்ற சொல்லுக்கு திரவியம் (பொருள்) யாதென வினவின் அதற்கு விடையளிக்க வகையறியாது தடுமாறுகின்றவர்களுக்கு "ஜீவனாகிய உன் வாஸ்தவ சொரூபம் பிரமம்" என வைர மாமலைக்கு ஒப்பாக இந்நூலகத்தில் விளக்கிக்காட்டியிருப்பதால் விசாரசீலர்களுக்கு சொரூபானுபூதி உண்டாவதற்கு இந்நூல் இன்றியமையாததாமென்க.

சரியை, கிரியை, யோக ஞான சாஸ்திரங்களில் வல்லவர்களாயிருப்பினும் அவர்களை நோக்கி மோக்ஷமெனப்படுவது அனுபவத்தாலாயதா? அல்லது கேழ்வியாலாயதா? அல்லது மறுமைக்கண் வருவதா? என வினவின் அவ்வினாவிற்கு விடையிறுக்க அறியாது நிற்கும் அவர்களுக்கு "உன் உண்மை சொரூபம் மோக்ஷவடிவமானது, அது ஆனந்தவடிவமானது" என இந்நூல் விடையளித்து நிற்றலின் சற்குருவடிவமென்னும் அமையுமென்க. பிரஸ்தானத்திரயமெனப்படும் உபநிஷத், பிரமசூத்திரம், கீதை முதலிய பிரபல சுருதிகள் ஜீவனாகிய ஆத்மாவையே கடவுளாகவும் அதுவே மோக்ஷ வடிவினதாகவும் அதற்கு வேறாக மோக்ஷம் கிடையாதெனவும் கூறுகின்றது. ஆத்மாவாகிய மெய்யுணர்வை விளக்கிக் கூறும் நூல்கள் சுருதிகள் எனப்படும். ஸ்மிருதிகளோவெனின் அவை வாழ்க்கைக்கு ஏற்ற சட்டதிட்டங்களைப்போதிக்கின்றன அது பராசரஸ்மிருதி போன்றது. அது அந்தந்த காலத்திற்கேற்றவாறு மாற்றி அமைக்க இடமுண்டு. கிருதயுகத்திற்கு மனுஸ்மிருதியும், திரேதாயுகத்திற்கு கௌதமஸ்மிருதியும், துவாபரயுகத்திற்கு சம்கிலித ஸ்மிருதியும், கலியுகத்திற்கு பராசரஸ்மிருதியும் அனுசரித்து நடக்கவேண்டும் என்பதே ஸ்மிருதிகளின் நோக்கமாகும்.

இனி சுருதியோ வெனின் அது மாறுதல் அடையாமல் எப்போதும் ஒருபடித்தாய் நின்றுகொண்டு ஆத்மாவையே

ஆனந்தவடிவமாகப் போதிக்கின்றது. பிரஸ்தானத்திரய நூல்களில் பந்த மோக்ஷங்கள் போதிக்கப்படவில்லை. அவைகள் ஆத்மாவை மோக்ஷவடிவமெனப் போதிக்கின்றன. அந்த ஆத்மாவைக் கொடுப்பவனுமில்லை வாங்குபவனுமில்லை. அது க்ஷேத்திரக்ஞன் (உடம்பை அறிபவன்). அதுவே ஜீவனது உண்மை சொரூபம். அது உபாதிபேதத்தால் உடம்பைத் தானாக அபிமானிக்கும்போது ஜீவனாகின்றது. அபிமானிக்காத போது பிரமமாய் விளங்குகின்றது. அவ்வபிமானமும் அந்தக் கரணங்களின்றியவிடத்து உண்டாகிறதில்லை. அவ்வந்தக் கரணமும் அபிமானமும் ஆத்மாவாகிய தன்னிடத்தில் விவர்த்தமாம். எனவே, ஆத்மாவாகிய தான் எப்போதும் மோக்ஷசொரூபனும் என்பதே பிரஸ்தானத்திரயத்தின் கருத்தாகும். அதில் சிற்றறிவு, பேரறிவு என்ற பேதம் கூறாமல் பிரக்ஞானம் பிரமம் எனக்கூறுகின்றது. அதாவது மெய்யுணர்வே பிரமமெனவும் அது காரியகாரண ரகிதமெனவும்அறிவையன்றி அறிபடுபொருள் இன்றெனவும் அது சொரூபமாக ஆனந்தமெனவும், விஷயானந்தங்கள் அனைத்தும் அதன் அம்சலேசமெனவும், ஒருவன் கண்ணாடியில் தோன்றும் தன் கற்பனை முகத்தின் வாயிலாக யதார்த்தமுகத்தை அறிவதுபோல் தன் யதார்த்த சொரூபானந்தத்தை அறிவதற்கே விஷயானந்தங்கள் அனைத்தும் அமைந்திருக்கின்றன யெனவும் கூறிப்போந்துளது.

இந்த பிரஸ்தானதிரய நூல்களுக்குப்பின் வெளியான சாஸ்திரங்கள் அளவுகடந்து விரிந்திருக்கின்றதுமன்றி அவைகள் பெரிய மயக்கத்திற்கு ஏதுவாகவுமிருக்கின்றது. பிரஸ்தானதிரயத்தில் கூறாதொழிந்த அனுபவத்திற்கு ஒவ்வாத பல விஷயங்கள் அவைகளில் மலிந்து கிடக்கின்றன. அதாவது ஜீவாத்மா, பரமாத்மா வென்றும், மெய்யுணர்வு பொய்யுணர்வென்றும், அறிவுக்கு அறிவுயென்றும், உயிருக்கு உயிரென்றும் சிற்றறிவு பேரறிவுயென்றும், சக்தி சிவமென்றும் ஜீவன் முக்தி விதேக முக்தி யென்றும், வரன், வரிஷ்டன் என்றும், சவிகற்பசமாதி நிர்விகற்பசமாதி யென்றும், நனவில் சுழுத்தி, துரியம் துரியாதீதம் யென்றும், அருள், பரை, ஆனந்தம் ஆனந்தாதீதம் யென்றும், அருட்சோதி பரம்சோதி, ஞானஸ்நானம், ஞானப்பால், அமிருதம் பருகல், ஜோதியை

தெரிசித்தல், மூலாதாரத்தினின்று குண்டலினி சக்தியை எழுப்புதல், பிரம்மரந்திரத்தில் செல்லுதல், சுழிமுனையில் நாட்டம் கொள்ளுதல், மூலப்புளியை அருந்தல், கருஞ்சேரை, வெண்சேரை உட்கொள்ளுதல் இன்னும் இவைபோன்ற பலபெயர்களைக்கூறி அதன் பொருளை விளக்காமல் போனார்கள். அதில் மதிமயக்கம் கொண்டு ஜீவனுடைய உண்மை சொரூபத்தை அறியாமல் போனதோடு பிரஸ்தானத்திரயத்தின் பொருளும் அறிய ஆற்றலற்றவர்களாய்ப் போனதும் உலகபிரசித்தம்மாம். இவ்வாருன மயக்கத்தை ஒழிக்கவேண்டி பிரஸ்தானத்திரயத்தின் அடிப்படை லக்ஷியமான ஜீவனுடைய வாஸ்தவ சொரூபம் தெரிவித்து, அதுவே பரிபூரண பிரமமெனவும், அதன்கண் மேற்கூறியவைகள் யாவும் கற்பனையெனவும், ஜீவத்துவம் சொல்மாத்திரமெனவும், அதற்குப் பொருள் பிரமம் எனவும் அறிவித்து பற்றின்மையோடு தன் வாழ்க்கை நடத்துவதற்கு ஒரு நூல் அத்தியாவசியமென்ற நோக்கமே இந்நூல் எழுதுவதற்கு காரணமாகும். கடவுளும் மக்களும் வேருகக்கருதுமளவும் அறிவாளிகளின் கனவாகிய அஹிம்சை, சத்தியம், சகோதரத்துவம், அன்பு, கருணை முதலிய தூய குணங்கள் மக்களிடம் காணவேண்டுமென்பது நனவாகாது என்ற எண்ணங்களாகிய அலைகளால் மோதப்பட்டதின் விளைவாக கடவுளுக்கும், மக்களுக்குமுள்ள தொடர்பையும் அதன் அபேதத்தையும், வேற்றுமையிலுள்ள ஒற்றுமையையும் விளக்கிக்காட்டி யாவரும் கடவுள் சொரூபிகளாதலால், எத்துணையும் பேதமுருமல் எவ்வுயிரும் தம்முயிர் போல் அபேத நாட்டம் கொண்டு இன்புறுவாய் வாழவேண்டுமென்ற நோக்கமே இந்நூல் எழுதுவதற்கு மற்ரெரு காரணமாகுமெனக் கூறுவது மிகையாகாது. மனிதன் மனிதனுக்கு பல காரியத்திலும் பயன்படுவதுபோல் மனிதனுக்கு கடவுளால் யாது பிரயோஜனமென்ற ஐயமுடையானை நோக்கி, ஆத்மாவாகிய கடவுளாலேயே மனிதன் உயிர்பெற்று வாழ்ந்து கொண்டிருப்பதே பிரயோஜனமாமென இந்நூல் கூறுவதோடு மக்களாய்த் தோன்றியவர்கள் தம்முள் பலபேதமாய்த் தோன்றினும் உண்மையில் அபேதமாய் விளங்கும் நிலையை அறிவிக்கவேண்டி ஸ்தூல சூக்ஷ்ம சரீரங்களின் உபாதான காரணம் யாவருக்கும் ஒன்ருய் இருப்பதையும் அந்த

உபாதான காரண காரியத்தை இயக்கும் ஆத்மா எல்லோருக்கும் சொரூபமாயிருப்பதாலும் ஒருதிணையளவும் மக்களிடத்தில் பேதம் காணாமல் சகோதரத்துவம் காணவேண்டும். இவ்வாறு காணாமைக்கு காரணம் அறியாமையாம். இந்த அறியாமை நீக்குவான் வேண்டியன்றோ பிரஸ்தானத்திரய நூல்களும், பெரியவர்களும் ஆத்மாவாகிய கடவுளைப்பற்றிப் போதிக்க முற்பட்டனர். அந்நோக்கத்தை எளிதில் புலனாகும்படி விளக்கவேண்டுமென்னும் எழுச்சியே இந்நூல் எழுதுவதற்கு மற்றுமொரு காரணமாகும்.

கடவுள் பல்வேறு வடிவமாகக் காக்ஷியளிப்பதாகவும், அதைக் கண்டும் கேட்டும் மகிழ்ச்சியடையும் எனது அன்பு மிக்க சகோதரர்களை நோக்கி கடவுள் சேதனமா? அசேதனமா? வென வினவின் அதற்கு விடையளிக்க இடமின்றித் தடுமாறுகின்றதை நோக்கி உள்ளம் உடையாதவர்கள் சான்றோர்களாகுமா? புலவர் சிகாமணிகளும் சேதனமே கடவுளெனக் கூற அவர்களுக்கு நா கூசுகின்றது. மனம் தடுமாறுகின்றது. மறைமுகமாகவும் பேசுகின்றது. ஆனால் சேதனமே கடவுள் என்பதை பிரஸ்தானத்திரயங்கள் 190 கோடி வருஷமாகக் கூறிப்போந்த பொருளை ஒருவர் மறைக்க முடியுமா? முடியுமானால் வாழையடிவாழையென சேதனாசேதன விசாரம் செய்து சேதனவடிவமான் ஆத்மசொரூபம் மோக்ஷவடிவமானது என அறிந்தும் உலகம் தன் பிரதிபலனமேயெனக் கண்டும் இன்புருவாய் வாழ்க்கை நடத்திய திடஞானிகளின் சரிதங்கள் பிரஸ்தானத்திரயத்தில் மலிந்து கிடப்பதைக் காணலாம்.

சேதனாசேதன விசாரத்தை சுருதி யுக்தி அனுபவ வாயிலாக விளக்கிக் காட்டுவதற்கு வினாவிடையாக ஓர் நூல் இயற்றுவது பாரத நாட்டுக்கு நாம் செய்யும் முக்கிய பணிகளில் ஒன்றாகுமெனத் தோன்றியதே இந்நூல் எழுதுவதற்கு பின்னுமொரு காரணமாகும். தற்காலம் வேண்டுவது வேதாந்தமா என்ற கேள்விக்கு ஆம் என விடை அளிக்க இன்னும் சிலர் மயங்குகின்றனர். மூலையில் பதுங்குகின்றனர். தியானத்தில் அமர்கின்றனர். வேதாந்தமெனப்படுவது வேதத்தின் முடிவில் கூறியுள்ள ஆத்மாவின் சச்சிதானந்த நித்தியபூரண தன்மையை அறிவிப்பதாம். இங்ஙனம்

அறியாவிட்டால் அன்பு சகோதரத்துவம் முதலியன எங்ஙன முண்டாம்? உண்டாகாவிட்டால் அன்பே சிவமென்பதன் பொருள் யாதோ? எனவே வேதாந்தமின்றி பேரின்பத்தின் எல்லை காணமுடியாது. எல்லா இன்பங்களும் ஆத்மாவில் முடிகின்றது. ஆத்மாவைவிட அதிக இன்பமுடைய பொருள் உலகில் இல்லை. ஆகையால் ஆத்மாவின் சொரூபத்தை யறிவிப்பதே வேதாந்தமாம். இந்த வேதாந்தத்தின் நிலை யறியாத காரணத்தால் அர்ஜுனன், ராமன் முதலியவர் களின் வாழ்க்கைத் தடைப்பட்டது. அதை அறிந்த பின் அவர்களின் வாழ்க்கை இன்பமயமாகயிருந்தது என்பது உலக பிரசித்தம். ஆத்மாவாலே யாவும் விளங்குவதாலும் எல்லோ ருக்கும் ஆத்மா சொரூபமாகையினாலும் அந்த ஆத்மாவை லக்ஷியமாகக் கொண்டு இந்நூல் எழுதப்பட்டிருப்பதாலும் இந்நூலுக்கு யாராவது குற்றம் காணுமேயானால் அது அவர் களின் ஆத்ம சொரூபத்தில் குற்றம்காணுவதாகுமென்பதற்கு ஐயமில்லை.

தோஷரகித ஆத்மாவில் தோஷம் காணுவது கூடா தாகையால் என்க. வேதாகமங்களில் ஆத்மாவைப் பற்றியே பேசப்பட்டுள்ளது. அக்னிக்கு உஷ்ணம் பிரகாசம் சொரூப குணமாயிருப்பது போலும், ஜலத்திற்கு குளிர்ச்சி மதுரம் சொரூபகுணமாயிருப்பது போலும், இன்னும் இவைபோல் இயற்கை வஸ்துவிற்கு பல நிகழ்ச்சிகள் காணப்பட்டாலும் அதனதன் சொரூபகுணத்திற்கு அதுவேறாகக் காணாததுபோல் ஆத்மாவிற்கு சச்சிதானந்தத்தன்மை சொரூபகுணங்களாம். அதுவே லக்ஷியமாகக்கொண்டு இந்நூல் எழுதப்பட்டுள்ளது. இந்த சச்சிதானந்தத்தன்மை எளிதில் புலனாகாமையால் அசத்து, ஜடம், துக்கம், அநித்தியம், கண்டம் ஆகிய ஐந்து லக்ஷணங்கள் எளிதில் விளங்குவதாலும் அவைகளையும் விளக்கியபின் லக்ஷிய லக்ஷணங்கள் இரண்டும் ஒருமைப் பாடாகத் தோன்றுமானாலும் ஆத்மாவாகிய தன்னிடத்தில் அசத்து முதலியவை தோற்றமாத்திரமேயொழிய வாஸ்தவ மன்று என்றும் சச்சிதானந்தாதிகள் தன் உண்மை சொரூபமே யென்றும் இந்நூலில் ஆரம்ப முதல் இறுதிவரை விளக்கிக் காட்ட முயற்சி செய்யப்பட்டிருக்கின்றது.

ஸ்வாமி வாசுதேவானந்தா,
ஆனந்தாஸ்ரமம்,
நாங்கூர்.

26—10—60.

ஓம் தத்ஸத்.

கைவல்ய நவநீதசாரம்.

(தத்துவ விளக்கப்படலம்)

"ஆயிர முகத்தா னகன்ற தாயினும்
பாயிர மில்லது பனுவ லன்றே"
என்ற விதியின்படி இந்நூலாசிரியர் பாயிரம் கூறுகின்றார்.

அவதாரிகை.

கைவல்ய நவநீதத்திற்கு பாயிரமாகக் கூறிய ஏழு கவிகளில் முதல் கவியில் கடவுள் வாழ்த்தும், இரண்டாவது கவியில் ஆத்ம சொரூப வணக்கமும், மூன்றாவது கவியில் குருவின் வணக்கமும், நான்காவது கவியில் குருவின் ஆற்றல் மிகு வல்லபத்தையும், ஐந்தாவது கவியில் இந்நூலுக்கு அதிகாரியையும் விஷயத்தையும், ஆறாவது கவியில் தொடர்பாகிய சம்பந்தத்தையும் பயனும், ஏழாவது கவியில் படல வகையும் கூறுகின்றார். இதில் முதலாவதாக கடவுள் வாழ்த்து கூறுகின்றார்.

1. பொன் பாத்திரம், மண் பாத்திரம் முதலியவற்றினிடத்து பேதமின்றி அபேதமாகத் தோன்றும் ஆகாச வெளியைப்போல் மண், பெண், பொன் என்கிற மூவாசையில் பற்றுடையவர்களுடைய உள்ளத்திலும் பற்று இல்லாதவர்களுடைய உள்ளத்திலும் சாட்சிமாத்திரமாகவும் அகண்ட ஏக ரச சொரூபமாகவும் அல்லது வியாபக நிறைவாகவும் ஞானபூமியின் ஏழாவது பூமியான துரிய சொரூபமாகவும் விளங்கும் பிரம்ம சொரூபத்தை வணங்குவாம். இதில் வணக்கம் என்பது அபேத நிலை.

2. ஆத்ம சொரூப நமஸ்கார ரூபமங்கலம். ஆக்கல், அளித்தல், அழித்தல் ஆகிய முத்தொழிலுக்கும் காரணமாய் மும்மூர்த்தி சொரூபமாய் தானே இன்னும் அநந்த தோற்றமுமாய், பரிபூரண முக்தனுமாய், ஆனந்த சமுத்திரமுமாய், ஞான சூரியனுமாய் முக்காலத்திலும் சத்தாய், அறிவு சொரூபமாய் விளங்கும் சுத்த சைதன்யத்தை வணங்குகின்றேன்.

3 குருவடிவத்திற்கு நமஸ்கார ரூப மங்களம். எந்த குருவின் கருணையினால் வீட்டுக்குள் தோன்றும் ஆகாய வெளியும், வெளியில் உள்ள ஆகாய வெளியும் ஒன்று என்று அறிவது போல், தேகாதிப் பிரபஞ்சம் எல்லாம் கற்பித மென்றறிந்து என் நிஜ சொரூபமான பிரமமாக நிலைபெற்றேனோ அவருடைய தாமரை மலரைப் போன்ற திருவடியை சதாகாலமும் பணிகின்றேன்.

4. குருவின் நிஜ சொரூபத்திற்கு நமஸ்கார ரூப மங்களம். என்னுடைய மனது, புத்தி, இந்திரிய சரீர மாகிய இவையெல்லாம் என்னுடைய விசார ஞானத்தாலே சூரியனைக்கண்ட பனியேபோல் பொய்யென்றறிந்து ஜீவ சாட்சியான கூடஸ்தனும், ஈஸ்வர சாட்சியான பிரமமும் ஒன்று என்ற ஐக்கிய பாவத்தை எனக்கு உபதேசிக்க வந்த என்னுடைய குருவாய்த் தோன்றிய கிருபா சமுத்திரத்தை பணிகின்றேன்.

(அவதாரிகை)

இந்நூலுக்கு அதிகாரியும், விஷயமும், சம்பந்தமும், பயனும் ஆகிய நான்கில் இந்த செய்யுளில் அதிகாரியையும், விஷயத்தையும் விளக்கிக் கூறுகின்றார்.

5. ஆதியந்தம் இல்லாத ஆகாசவெளியைப் போல் சுயம்பிரகாசமாய் விளங்கும் ஞான சற்குருவினுடைய திருவடியை வணங்கி, விரிந்து பரவிக் கிடக்கின்ற வேதாந்த சாஸ்திரத்தைப் பார்த்து அதன் உட்பொருளைக் கற்றுணர சக்தி அற்ற மந்த அதிகாரியும் உணரும்படி பந்த லட்சணமும், வீட்டின் லட்சணமும் விளக்கிக் கூறுவேன். இதில் மந்தன் என்பது இந்நூலுக்கு அதிகாரி, அதாவது தகுதியுடையவன். இதில் வஸ்து தத்துவம் என்பது கூடஸ்த பிரம ஐக்கியமாகிய விஷயம் எனக்கொள்க.

(அவதாரிகை)

அதிகாரி முதலிய நான்கில் ஏனைய இரண்டும் இதில் கூறுகின்றார்.

6. விரிந்திருக்கின்ற வேதாந்தமாகிய பாற்கடலில் நின்று வியாசர் முதலியவர்கள் எடுத்துத் தொகுத்த பிரம்ம

சூத்திரமும், அதற்கு ஆதிசங்கரர் முதலிய பூர்வ ஆச்சாரியர்கள் இயற்றி அருளிய உரைகளும் ஆகிய இவைகளை எல்லாம் ஆராய்ந்து, கடைந்து எடுத்த வெண்ணெயைப்போல் இந்த கைவல்ய நவநீதத்தை திரட்டி எடுத்து அளித்தேன். இதன் உண்மையை அறிந்தவர்கள் விஷயானந்தம் ஆகிய மண்ணை உண்டு பிறவித் துன்பத்தில் அலையமாட்டார்கள். ஏனெனில் அவர்கள் பரம திருப்தி உடையவர்களாதலின் இதில் அளித்தேன் என்பது சம்பந்தம். அதாவது நூலுக்கும் மாணவனுக்கும் உள்ள தொடர்பு இதில் பசியிலார் என்பது பயன். அதாவது சர்வ துக்க நிவர்த்தி பரமானந்த பிராப்தி.

(படலவகை)

7. நாராயண தேசிகர் என்னும் நாமந்தரித்த எனது குருவை வணங்கி கைவல்ய நவநீதத்தை சொல்லுகின்றேன். தத்துவ விளக்கமென்றும் சந்தேகம் தெளிதலென்றும் இரண்டத்தியாயமாக வகுத்து உரை செய்கின்றேன்.

இதுகாறும் கூறிப்போந்ததின் சாரமாவது இந்நூல் இனிது முடிவுபெற ஆன்றோர் ஆசாரம் பற்றி கடவுள் வாழ்த்தும், குருவணக்கமும், குருவின் பெருமையும், குருவின் வல்லபமும், நூல் கேட்பதற்குரிய அதிகாரியும், விஷயமும், சம்பந்தமும், பயனும் ஆகிய அனுபந்த சதுஷ்டயத்தை கூறியவாறு காண்க.

நூல்

(தத்துவ விளக்கப் படலம்)

☆

(அவதாரிகை)

உண்மையைக் கூறுமிடத்து இந்நூலை உணர்ந்துய்வதற்கு நான்கு வித பக்குவம் வேண்டுமெனல்.

8. நாம் காணும் பொருள்களின் மாறுதல் அடைவது எது? மாறுதல் அடையாதது எது என சிந்தித்து அறிவது முதல் பக்குவமாகும். இதற்கே நித்தியா நித்திய வஸ்து விவேகமெனப் பெயர். இம்மை, மறுமைகளில் தோன்றும் போக போக்கியங்களில் பற்று அற்று வாழப்பழகுதல் இரண்டாவது பக்குவமாகும். இதற்கு இக உத்திரார்த்த பல போக விராகம் எனப் பெயர்பெறும். பின் கூறப்போகும்

ஆறுவகைக் குணங்களும் சேர்ந்து மூன்ருவது பக்குவமாகும். நான்காவது வீட்டின்பத்தில் விருப்பம் வைத்தல். இதுவே நான்கு பக்குவம் அல்லது நான்கு சாதனங்களாகும்.

9. மேற்கூறிய ஆறுவகைக் குணங்களுக்குரிய பெயர்கள் வருமாறு:—

சமம், தமம், விடல், சகித்தல், சமாதானம், சிரத்தை. இதில் சமமாவது மனத்தை விஷயங்களில் பற்றித் துன்பப் படாது பழக்குதல், தமமாவது ஐம்புலன்களை நீதி வழுவாது செலுத்துதல், விடலாவது எதிலும் பற்றின்றிப் பழக்குதல், சகித்தலாவது நாம் எதிர்பாராது இருக்கும் போது நம்மை நோக்கி வரும் இன்ப துன்பங்களைப் பொறுத்துக்கொள்ளுதல் ஆகையால் இந்த நான்கு குணங்களும் மாணவன் பின்பற்றத் தக்கதாம்.

(அவதாரிகை.)

முன் செய்யுளில் கூருதொழிந்த ஏனைய இரண்டு குணங் களும் இச்செய்யுளில் கூறுகின்ருர்.

10. சமாதானமாவது கேட்டல், சிந்தித்தல், தெளிதலில் மனதை சகஜமாகப் பழக்குதல். சிரத்தையாவது சற்குரு வினிடத்திலும், ஞானசாத்திரத்திலும் மிகப்பிரியம் வைத்தல். மேற்கூறிய சமம் முதலிய ஆறுவகை குணங்களின் பொருள் இதுவேயாகும்.

11. பக்குவம் இன்றி ஒன்றையும் அடையவோ அனு பவிக்கவோ முடியாது என்பது உலகப் பிரசித்தம். ஆகை யால் மேற்கூறிய நான்கு பக்குவமும் உடையவர்களுக்கே மெய்யுணர்வுண்டாகும். இந்தப் பக்குவம் இல்லாதவர் களுக்கு உபதேசித்தால் விளங்குவது கஷ்டமாய்த் தோன்றும். உபதேசித்தப் பொருள் விளங்குமாயின் அவர்கள் பக்குவ முடையவர்கள் எனக்கொள்க.

12. இத்தகைய பக்குவமுடைய மாணவன் உடலுக்கு வரும் வியாதி, பசி முதலியவைகளால் உண்டாகும் துக்கமும், சீதோஷ்ணதிகளால் உண்டாகும் துக்கமும், திருடர்களாலும், விஷஜந்துக்களாலும் உண்டாகும் துக்கமும் ஆகிய மூவகைத்

துக்கத்திற்கு ஆற்ருதவனுகி சூரிய வெப்பம் தாங்காத புழுவைப்போல் துடிதுடித்து இந்த துக்கத்திற்குக் காரணமான பிறவித் துன்பம் நீக்கக்கூடிய ஆத்மஞானத்தை அடைய விரைந்தனன்.

13. மேற்கூறிய பக்குவமுள்ள மாணவனெருவன் மூவாசையில் கட்டுப்பட்டு அறிவிலியாகாமல் கட்டுப்படாத நல்ல அறிவோடுகூடியவனுகி வேடுவர் வலேயிற்பட்டு தப்பி ஓடிய மான் திரும்பிப்பாராததுபோல் மூவாசைக்கு ஏதுவானப் பொருள்களைச் சத்தியமாய்ப் பாராமல் மித்தையாகப் பரோக்ஷமாகப் பார்த்துக்கொண்ட மாணவன் மேலும் பேரன்பான, புஷ்பத்தோடு சென்று ஞான சற்குருவைக் கண்டு வணங்கி நின்ருன்.

14. இவ்வாறு வணங்கி நின்ற மாணவன் தன் சரீரத் திற்கு வரும் ஜனனமரணத் துன்பத்திற்கு ஆற்ருதவனுகி வாடிய பைங்கூழைப்போல் நின்று விண்ணப்பித்தான். ஐயனே! எனதுள்ளம் குளிரும்படியாக ஞானுேபதேசம் செய்து தேகாதிபிரபஞ்சத்தில் எனக்குண்டாயிருக்கும் சத்திய புத்தியை அபரோக்ஷமாக விலக்கி என்னைக் காத்தருள வேண்டும் என்ருன்.

15. அப்படி விண்ணப்பித்த மாணவனை குருவானவர் ஆமையானது தனது முட்டையை கருஉருவாக வேண்டும் என்று கருதுவது போல், அஞ்ஞானம் ஒழிந்து ஞானசொரூபி யாக வேண்டும் என்று தம் உள்ளத்தில் கருதினுர். மேலும் மீனுனது தனது சினையைப் பார்ப்பது போல் அவனது பிறவிக்கு ஏதுவான பழைய வினைகள் எல்லாம் தீரவேண்டும் என்று கருணையோடு நோக்கினுர். பறவையானது தன் சிறகினுல் முட்டையைத் தழுவுவது போல் ஆத்மவிசாரம் இவனுக்கு உண்டாகுக என அபயகரம் சிரசில் வைத்து ஆசீர்வதித்தார். உனது பிறவித் துன்பம் தீர உபாயம் உண்டு. அதை நான் சொல்லுவேன், சொன்னதை நீ அமைதியுடன் கேட்பாயானுல் பிறவித் துன்பம் தீரும் என்று அருளிச்செய்தார்.

16. தனக்குத் தோன்றிய பிறவித் துன்பம் தீரும் என்று அருளிச் செய்த குரு மொழியைக் கேட்டவுடன் மாணவனுடைய சரீரம் கங்கா நதியில் மூழ்கியவன் போல் குளிர்ந்தது. அவனது உள்ளமும் சாந்தமடைந்தது. தேடின பொருள் அகப்பட்டவன் போல் ஆனந்தபரவசத்தால் கண்களில் நீர் பெருக்கெடுத்தது. தாமரை மலர் போன்ற குருவின் திருவடியை மீண்டும் வணங்கி சொல்லத் தொடங்கினான்.

17. குருதேவா! முன் பதினைந்தாவது செய்யுளில் சொன்னதைக் கேட்பாயாகில் எனது பிறவித் துன்பம் தீரும் என்று சொன்னீரே அங்ஙனம் கேட்காதவனானாலும், ஐயனே! குருவே! தங்களது கருணையினால் என்னை ஆட்கொள்ளலாமே. உனது பிறவி தீரும் உபாயம் ஒன்றுண்டு என்று சொன்னீரே, அத்தகைய உபாயம் இன்னது என்று எனக்கு விளக்கிக்காட்டி என்னை ஈடேற்ற வேண்டும் என்றான்.

18. இவ்வாறு கூறிய மாணவன் நற்குணமான சத்துவ குணமுடையவன் என அறிந்து குருவானவர் குளவியானது புழுவைக்கொண்டுவந்து மண்குடம்-பையினுள் வைத்து அதன் முன் ஊதும் முயற்சியைப்போல், சீடன் தனது ஆத்மாவை பிரமமென அறிந்துய்ய வேண்டி அவனது உடம்பின்கண் விளகும் ஜீவனைப் பார்த்து உபதேசம் செய்வாராயினர்.

19. அன்புள்ள சிஷ்யனே! உன் நிஜ சொரூபத்தை மறந்ததனால் பிறவித் துன்பம் தோன்றுகிறது. அந்த மறதியினால் சுழற்காற்றிலகப்பட்டுகொண்டு தத்தளிக்கும் உலர்ந்த சருகைப்போல் பல பிறவித் துன்பங்களில் சுற்றிச் சுற்றி அலைகின்றாய். இவ்வாறு அலைவதற்கு முடிவு யாதோவெனின் அறிவு சொரூபமாகிய ஆத்மாவை பிரமம் என்று அறியும் வரையில்தான் பிறவிக் கடலிற் சுற்றுவாய்.

20. அன்பனே! நான் யார்? என்பதைப் பற்றியும் தனக்கு முதல்வனாகிய ஆத்மாவானது எத்தகையது? இரண்டுக்கும் உள்ளத் தொடர்பு எதைப் போன்றது? என்பதைப் பற்றியும் நீ நன்றாக விசாரித்து அறிந்தால் பின் அந்த முதல்வனே பிரமம் என்றும், அதுவே நிறை பொருள் என்றும் அறிந்தால் பிறவித் துன்பம் தீரும். இவ்வாறு

பிரமமாகிய முதல்வனே உன் நிஜ சொரூபமென்று உள்ளங் கையில் கனிபோல் அறிந்தால் உனக்கு ஒரு கேடுமில்லை. என்னை நீ கேட்டதனுல் இந்த உண்மையைச் சொன்னேன்.

21. குருதேவா! நான் யார் என்பதை அறிந்து கொள்ள வேண்டும் என்று முன் கவியில் கூறினீர்கள் நான் யார் என்பதை அறியாதவர்கள் உலகில் யாருமில்லையே. ஏனெனில் நான் இன்னுர் மகன் என்பதும், நான் பிறந்து இத்தனை ஆண்டுகள் ஆயின என்பதும், நான் இன்ன ஜாதி என்பதும், எல்லோருக்கும் தெரியுமல்லவா? அப்படி யிருக்க அவர்கள் எல்லாம் பிறவிக்கடலில் சுற்றுவானேன், என்னை அறியாதவன் என்று - அதாவது அறிவற்றவன் என்று திருவுள்ளத்தில் எண்ணியோ அங்ஙனம் அருளிச் செய்தீர். தங்களை நம்பின அடியேனுக்கு உண்மையை அருளிச் செய்ய வேண்டும்.

22. அன்பனே! தேகத்தின் அசத்து, ஜடம், துக்கம், அநித்தியம், கண்டம் ஆகிய ஐந்து இலக்கணத்தையும், தேகத்தில் குடியிருக்கும் தேகியின் சத்து, சித்து, ஆனந்தம், நித்தியம், பூரணம் ஆகிய ஐந்து இலக்கியத்தையும் விசார முகத்தில் அறிந்தவன் எவனே? அவன்தான் தன்னைத்தான் அறிந்தவனுகும். அவன்தான் நான் யார் என்பதையும் அறிந்தவனுகும் என்று அருளிச்செய்த குருதேவரை நோக்கி தேகத்திற்கு வேருக தேகி ஒருவன் இருக்கின்ருனு என வினவினுன். இதைக்கேட்ட குருவானவர் தன் உள்ளத்தில் மகிழ்ச்சியும், வாட்டமும் எய்தினுர். வாட்டத்திற்குக் காரணம் யாதோவெனின் இவன் அஞ்ஞானத்தினுல் நான் உபதேசித்தப் பொருளை அறியவில்லையே என்பதும் மகிழ்ச்சிக்குக் காரணம்; சுருதி, யுக்தி அனுபவத்தால் இவனது அஞ்ஞானத்தை ஒரு முகூர்த்த நேரத்தில் எமது பிரமஞானத்தால் போக்குவோம் என்றும் திருவுள்ளத்தில் கருதினுர் என்பதும் அறியத்தக்கது.

23. அன்பனே! தேகத்திற்கு வேருக தேகி ஒருவன் இருக்கிருனு என்று நீ ஐயப்பட வேண்டியதில்லை. ஏனெனில் தூக்கத்தில் தேகம் அசைவற்றுக் கிடக்கின்றபோது கனவை அறிந்ததும், சுழுத்தியில் ஒன்றும் அறியவில்லை என்று

சொல்லும்படியான அஞ்ஞானத்தை அறிந்ததும்? நனவில் ஒவ்வொன்றையும் பகுத்தறியும் அறிவும், அறிவற்று சடத் தன்மை வாய்ந்த உடம்பும், மேல்காட்டிய அந்த அறிவும் ஒன்ரு? இரண்டா? என நன்ருக ஆராய்ந்து சொல்லுதி. உதாரணமாக திருவிழாக்களில் மூங்கில் குச்சிகளால் ஒரு யானையைச் செய்து வர்ணத்தாள்களை ஒட்டி அதனுள் ஒரு சிறுவன் புகுந்து கை, பாத, கர்ணங்களை இயக்கச் செய்தால் அவனும் அந்த யானையும் ஒன்ரு? இரண்டா? சொல்லுதி.

24. குருதேவா! தாங்கள் உபதேசித்தது உண்மை தான். கனவைக் கண்டதும் நான்தான், நனவை அறிந் ததும் நான்தான், சுழுத்தியை அறிந்ததும் நான்தான். இப்படி பிரதிதினமும் அனுபவித்துக்கொண்டே வருகின் றேன். ஆனல் மூன்றவஸ்தையையும் அறிந்த அறிவு நானுகவும், எனக்கு வேருகவும் தோன்றுகின்றது. இப்படி மறைப்பாகவும் வெளிப்படையாகவும் தோன்றும்; இந்த அறிவான பிரம்மத்தைப்பற்றி தாங்கள் விளக்கிக்காட்டி அருள் செய்ய வேண்டுகின்றேன்.

25. இவ்வாறு விண்ணப்பித்த சீடனைநோக்கி ஆச்சாரிய ரானவர் மண்ணில்உள்ள ஒரு மரக்கிளையின்வாயிலாக மூன்ரும் பிறைச்சந்திரனைக் காட்டுவார் போலும், ஆகாயத்தின்கண் உள்ள பெரிய உடுக்களைக் காட்டி அதன் வாயிலாக சிறிய நட்சத்திரத்தைக் காட்டுவார் போலும், ஸ்தூலமான ஜீவேஸ்வர ஜகத்தின் தோற்றத்தை முன்புகாட்டி அதற்கு அடிப்படையான சூட்சும சொரூபமான ஆத்மாவாகிய பிரமத்தை பின்பு காட்ட மனன சீலருள் முதன்மையான ஆச்சாரியர் ஆரம்பித்தனர்.

26. அன்பனே! கற்பனையாகத் தோன்றும் தோற்றங் களுக்கு காரணம் எது என்று ஆராயவேண்டும். கற்பனை யாகத் தோன்றும் தோற்றமும், அதன் காரணமும் ஆகிய இரண்டைப் பற்றியே சகல வேதாந்த சாத்திரமும் கூறு கின்றது. இதில் கற்பனையாகத் தோன்றும் தோற்றத்தை உண்மையாக நம்புவதனல் பிறவித் துன்பம் உண்டாகும். அதன் காரணத்தை அறிவதால் மோட்சம் உண்டாகும். எனவே இவ்விரண்டில் முன்னதான கற்பனைத் தோற்றங்கள் தோன்றும் முறைமையை நீ கேட்பாயாக.

27. கற்பனையாகத் தோன்றும் தோற்றங்கள் எவ்வாறெனின் ஒரு வஸ்துவினை மற்றோர் வஸ்துவாக உணர்தல். அது எவ்வாறு எனின் பழுதையை பாம்பு என உணர்தலும்; கட்டையைக் கள்வன் என உணர்தலும், கானலை தண்ணீர் என உணர்தலும், சுத்தமான ஆகாயத்தில் நீலபீதாதி நிறங்கள் உள்ளதாக உணர்தலும் போல்வது ஆகும். இதில் பழுதையைவிட பாம்புக்கு வேறு சொரூபம் இல்லாதவாறு போல் பிரமத்தைவிட தேகாதிப்பிரபஞ்சத்திற்கு வேறு சொரூபம் இல்லை என்பதாயிற்று.

28. அன்பனே! மேல்காட்டிய பழுதையும், கட்டையும், கானலும், ஆகாயமும் எவ்வித மாறுதலுமின்றி இருப்பது போல் பெயர், உருவம் ஆகிய இரண்டும் இன்றி எங்கும் நிறைந்து ஒன்றாய் அறிவு வடிவமாய் விளங்கும் ஆத்மாவாகிய பிரமத்தில் ஐம்பூதமும், அதன் காரியமான தேகாதிப் பிரபஞ்சமும் முன்காண்பித்த கற்பனைத் தோற்றம்போல் தோன்றியது என்று அறியக்கடவாய்.

29. அன்பனே! சகல ஜனங்களுடைய உலக தேக வாசனைகள் அனைத்தும் அவரவர்களுடைய சுழுத்தி அவஸ்தையில் எங்ஙனம் அடங்கியிருந்து மீண்டும் நனவில் வெளிப்படுகின்றதோ அங்ஙனமே ஐம்பூதக் காரியமான நாமரூபங்களும், உற்பத்தி நாசரகிதமான ஜீவர்களும், மாயாசக்தியில் அடங்கியிருந்து மீண்டும் கால தத்துவமான ஈசுவரனுடைய பார்வையில் முன்பிருந்த காரண அவஸ்தையை விட்டு முக்குணமாக வெளிப்பட்டது. இதில் காலத்தை அதாவது நேரத்தை உயர்திணை ஆண்பால் பொருளாக்கி ஈஸ்வரன் என்றார். காலத்தை காலன் என்பதுவும் அது இந்த ஈசுவரனும் பூர்வபக்ஷமேயாம்.

30. இவ்வாறாகத் தோன்றிய முக்குணமானது உத்தம, மத்திம, அதம பேதத்தால் மூன்றாக இருக்கும். இதில் உத்தமமான சத்துவ குணத்திற்கு சுத்தம் என்றும், வெண்மை என்றும் கூறப்படும். மத்திமமான ரஜோகுணத்திற்கு செந்நிறம் என்றும், அழுக்கு என்றும்? அதமமான தமோ குணத்திற்கு கருநிறம் என்றும், இருட்டு என்றும் கூறப்படும்.

இப்படி இருந்த போதிலும் முக்குணத்தின் ஒரு குணம் நெருஞ்சிமுள் போல் மேலோங்கி நிற்கும்.

31. மேற்கூறிய முக்குணத்தில் சகல தோற்றங்கட்கும் இடமிருப்பதால் இந்தத் தோற்றத்தை வேதோப நிஷத்துக் களில் மூன்று விதமாகக் கூறப்பட்டுள்ளது. அதாவது கிரம சிருட்டி, உகபற்சிருட்டி அஜாதவாதமாம். இந்த மூன்றில் இந்நூலாசிரியர் கிரம சிருஷ்டிப் பிரகாரம் முக்குணோற் பத்தியை அங்கீகரித்து இருக்கிறுர். இதில் முக்குணம் தோன்றிய வழி முன் இருபத்தொன்பதில் கூறிய வழி ஒரு வகையாகும். மற்றொரு வகையாகவும் தோன்றும் முறைமையையும் வேதத்தில் கூறப்பட்டுள்ளது. அதாவது பன்மையாகவுள்ள மாயாசக்தியே சமஷ்டி புத்திரூபமாகவும், அந்தப்புத்தியே நான் என்னும் அகங்காரரூபமாகவும், இந்த அகங்காரமே முக்குணமாக வெளிப்பட்டதாகவும் கூறப் பட்டுள்ளது. ஆக சிருஷ்டி கிரமம் இரண்டு விதமெனக் கொள்க. எப்படி இருந்தபோதிலும் தானில்லாதவிடத்தில் தான் தோன்றுதல் சிருஷ்டியாகும்.

32. பற்று அற்று எங்கும் நிறைந்துள்ள ஆகாயத்தைப் போல் வியாபகமாய் உள்ள சச்சிதானந்த சொரூபமான பிரமத்தின் பிரதிபிம்பம் முன்கூறிய முக்குணத்தின் சத்துவ குணத்தில் தோன்றும். இங்ஙனம் தோன்றிய பிரதிபிம்ப சேதனமே ஈசுவரனாம். இந்த முக்குணங்களின் முதற் குணமான சுத்தசத்துவ குணத்திற்கு மாயை என்று ஒரு பெயர் வழங்கும். இந்த சத்துவ குண மாயையில் தோன் றிய சேதனத்திற்கு அந்தரியாமி எனவும் கூறுவர். இந்த சேதனமே சிருஷ்டி, திதி, சம்காராதிகளுக்கு நிமித்த காரணனுகும். ஏனைய குணங்கள் இந்த ஈசுவரனைப் பற்றுத தால் அவனுக்கு அகந்தை, மமதை, ரூப அபிமானம் இல்லை. இதில் ஜீவனும், ஜகத்தும், நாம ரூபமும் எவ்வாறு மாயை யால் கற்பிக்கப்பட்டனவோ அவ்வாறே நிமித்த காரணத்துவ மும் கல்யாண குணங்களும் மாயையால் கற்பிக்கப்பட்டனவே அன்றி உண்மை அன்றென அறிக, இதை ஸ்ரீ பொன்னம்பல சுவாமிகளின் கைவல்ய உரையின் 166-வது பக்கம்

"வித்தையினுல் அதாவது விசார ஞானத்தினுல் நாசமாகும் ஜீவ ஈசுவரர்களே" என்று கூறுவதினுல் அறிக.

33. இவ்வாறு தோன்றிய ஈசுவரனுக்கு இம்மாயையே சுழுத்தி அவஸ்தையாம். இதுவே காரண சரீரமும் ஆகும். பஞ்சகோசங்களில் இந்த மாயையே ஜீவனுக்கு ஆனந்த மயகோசமாகும். இனி ரஜோ குணத்துடன் சம்பந்தப்பட்ட அவித்தையில் தோன்றும் பிரமத்தின் பிரதி பிம்ப சேதனமே ஜீவகோடிகளெனப்படும். மற்று இரண்டு சரீரத்தையும் அடையாமல் அவித்தையாகிய காரண சரீரத்தோடு இருக்கும் ஜீவர்களுக்கு பெயர் பிராக்ஞன் என்று சொல்லப் படும்.

34. யான் எனது என்னும் செருக்குற்ற ஜீவர்களுக்கு மேற்கூறிய அவித்தையே ஆனந்தமய கோசமாம். சுழுத்தி அவஸ்தையே காரண சரீரமாம். இதுவரைக்கும் கூறிப் போந்ததனுல் சுத்த, சத்துவ குணம், ரஜோகுணங்களால் உண்டான காரண சரீரக் கற்பனையைச் சொன்னேன். இனி சூட்சும சரீரம் உண்டான கற்பனையையும் நீ கேட்பாயாக.

35. மேற்கூறிய மாயாசக்தியை விளையாட்டாகவுடைய ஈசுவரன் கருணையினுல் ஜீவர்கள் எல்லாம் தத்தம் பூர்வ கருமங்களை அனுபவித்துத் தேர்ந்து முக்தி அடைவதற்கேது வான தூல சூட்சும சரீரங்கள் உண்டாவதற்காக முன் காண்பித்த முக்குணத்தின் தமோகுணம் இரண்டு சக்தியாகப் பிரிந்து தோன்றும். அதில் ஒன்று ஆவரணம் எனவும்; மற்ருென்று விட்சேபம் எனவும் கூறப்படும். இதில் நானுவித மாக தோற்றுவிப்பது விட்சேபம் எனவும் தன் உண்மை சொரூபமான ஆத்மாவைத் தெரியவொட்டாமல் மறைப்பது ஆவரணம் எனவும் கூறப்படும். இதில் பூர்வ கருமம் ஒப்பி இருப்பது பூர்வபட்சமாக அன்றி சித்தாந்த பட்சம் அன்று என்க.

36. மேற்கூறிய தமோகுணம் இரண்டு சக்தியாகப் பிரிந்து ஒன்று விட்சேபம் என்றும், மற்ருென்று ஆவரணம் என்றும் தோன்றும் என்று கூறினேம் அல்லவா? இதில் விட்சேப சக்தியானது ஒலியம்சமான ஆகாயமாயிற்று. இந்த ஆகாயமானது ஊறும்சத் (ஸ்பரிசம்) தோடுகூடிய

காற்றாயிற்று. இந்தக் காற்றானது ஒளியம்சத்தோடு (ரூபம்) கூடிய நெருப்பு உண்டாயிற்று. இந்த அக்னியானது சுவையம்சத்தோடுகூடிய ஜலமாயிற்று. இந்த ஜலமானது நாற்றம் அல்லது நற்கந்தத்தோடுகூடிய பூமியாயிற்று. இவைகளுக்கு சூட்சும பூதங்கள் என்றும், அபஞ்சீகிருத பூதங்கள் என்றும் பெயர் சொல்லப்படும். இவற்றால் சகல ஜீவர்களுக்கும் சூட்சும சரீரமான நுண்ணுடம்பு உண்டாம்.

37. முன்கூறிய மாயாசக்தியின் முக்குண பஞ்ச பூதம் அடங்கலும் தொடர்ந்து நிற்கும். இந்த பஞ்ச பூதங்களில் ஒவ்வொரு பூதத்தின் ஒவ்வோர் அம்சமும் சத்துவ குணத்தில் தோன்றும். இவ்வாறு ஐந்து பூதங்களின் ஐந்தம்சமும் தோன்றியது உணர்கருவி அல்லது ஞானேந்திரியம் ஆகும். மீண்டும் பூதத்தின் ஒவ்வொரு கூறு சத்துவ குணத்தில் தோன்றியதே உட்கருவியான அந்தக்கரணமாயிற்று. இவை ஐந்தினையும் இரண்டில் ஒடுக்கி மனம் புத்தி ஆகிய இரண்டும் மேற்கூறிய ஞானேந்திரியம் ஐந்தும் ஆக ஏழும் சூட்சும சரீரத்தின் பதினேழு உறுப்புகளில் இவை ஏழு எனக் கொள்க. அதாவது ஞானேந்திரியம் ஐந்து. மனம், புத்தி இரண்டு ஆக ஏழு எனக்கொள்க.

38. இனி ரஜோகுணத்தில் தோன்றிய ஐந்து பூதத்தின் ஐந்து கூறுகள் கர்மேந்திரியமாம். அதாவது தொழிற் கருவி யாம். மேலும் ஐந்து பூதத்தின் ஐந்து பாகம் ரஜோகுணத் தோடு சேர்ந்தது பிராணாதி வாயுக்கள் ஐந்தாம் முன் கூறிய ஏழும், இப்போது கூறிய பத்தும் ஆக பதினேழும் ஜீவ கோடிகள் அனைத்திற்கும் இது லிங்க சரீரமாம். அதாவது சூட்சும சரீரமாம். இதில் அந்தக்கரணம் ஐந்தையும் சேர்த்து சூட்சுமசரீரத் தத்துவம் இருபது எனக் கூறுவாரு முளர்.

39. ஒரு சூட்சும சரீரத்தை எனது என்று அபிமானிக் கின்ற ஜீவனுக்கு தைஜசன் என்று பெயர் பெறும். எல்லா சூட்சும சரீரத்தையும் எனது என்று அபிமானிக்கின்ற ஈசுவரனுக்கு இரண்யகர்ப்பன் எனப் பெயர் பெறும். இது இரண்டு பேருக்கும் சூட்சும சரீரமாகும். பின் கூறப்போகும் பஞ்சகோசங்களில் பிராணமய, மனோமய, விஞ்ஞானமய

என்கின்ற மூன்று கோசங்களும் இந்த சூட்சும சரீரத்தில் அடங்கும். மூன்று சரீரத்திற்கும் ஏற்படும் மூன்றவஸ்தைகளில் இந்த லிங்க சரீரத்திற்கு கனவு அவஸ்தையாம்.

40. அன்பனே! சூட்சும சரீரம் தோன்றியக் கற்பனேயே இதுகாறும் கூறினேம். இனி தூல சரீரம் தோன்றும் கற்பனேயையும் நீ கேட்பாயாக. சூட்சும சரீரம் பெற்றுள்ள ஜீவர்களுக்கு தத்தம் கர்மத்திற்கீடாக தத்தம் கர்மத்தையே அனுபவித்துத் தீரவேண்டி ஈசுவரன் தன்மாத்திரையான சூட்சும பஞ்ச பூதங்களே ஒன்ருேடு ஒன்று கலக்கச்செய்தார். இதற்கு பஞ்சீகரணம் எனப் பெயர் பெறும்.

41. அன்பனே! ஒவ்வொரு பூதத்தையும் இரண்டிரண்டாக பத்தாக்கி அவற்றில் ஒரு பாகமாகிய ஐந்தை தனித்தனி நிறுத்தி ஏனேய ஐந்தில் ஒவ்வொன்றையும் நான்கு பாகமாகப் பிரித்து பிரிவுபடாத தன் பாதியை விட்டு ஏனேய நான்கோடு நான்கையும் கூட்ட ஸ்தூல பூதங்கள் உண்டாயின. இதை பஞ்சீகிருத பூதம் என்பர். இதனுல் சகல ஜீவர்களுடைய தூல சரீரமும் பலகோடி அண்டங்களும் தோன்றின. இதில் நாலொடு நாலும் சேரும்போது எது உண்டாயிற்று எனின், கீழே பாருங்கள். ஆகாயத்தின் தன்னம்சம் சோகம். மற்று நாலும் ஆகாயத்தோடு சேருகின்றபோது காமம், குரோதம், மோகம், பயம் ஆகிய நான்கும் உண்டாம். வாயுவின் தன்னம்சம் விரிதல். மற்று நாலும் வாயுவுடன் சேரும்போது ஓடுதல், இருத்தல், நடத்தல், சுருங்குதல் ஆகிய நான்கும் உண்டாம். அக்கினியின் தன்னம்சம் பசி. மற்றைய நாலும் சேரும்போது நித்திரை, தாகம், சூடு, சோம்பல் ஆகிய நான்கும் உண்டாம் ஜலத்தின் தன்னம்சம் சுக்கிலம். ஏனேய நான்காவன :— உமிழ் நீர், வெயர்வை, மூத்திரம், சுரோணிதம் ஆகிய நான்கும் உண்டாம். பூமியின் தன்னம்சம் எலும்பு. ஏனேய நான்காவன :— ரோமம், தோல், நாடி, மாமிசம் ஆகியவை. இவை இருபத்தைந்தும் தூல சரீரம் எனப்படும். இதன் விரிவை விசார சந்திரோதயத்தில் காண்க.

42. ஒரு ஸ்தூல தேகத்தை எனது என்று அபிமானிக்கும் ஜீவனுக்கு பெயர் விசுவன். சகல ஸ்தூல சரீரத்தையும்

எனது என்று அபிமானிக்கின்ற ஈசுவரனுக்கு பெயர் விராட் புருஷன். இருவருக்கும் இது அன்னமய கோசம். இந்த சரீரத்தில் நிகழும் அவஸ்தை நனவு. இதுகாறும் கூறிப் போந்த ஸ்தூல சரீரமும் அதன் காரணமான பிரபஞ்சமும் கற்பனையாகத் தோன்றிய விதத்தைச் சொன்னோம்.

43. குருதேவா! ஜீவர்களுக்கும், ஈசுவரனுக்கும் சரீர உபாதி ஒன்றானால், பேதம் யாதோ என அறிய விரும்பு கிறேன். அன்பனே! தன்வரைக்கும் உள்ள பொறுப்புகளை ஏற்றுக்கொள்ளுபவன் ஜீவன். அதனால் இந்த ஜீவனை வியஷ்டி உபாதி உடையவன் என்றும் காரிய உபாதி உடையவன் என்றும் சொல்லப்படும். இதுபோல் சகல ஜீவர்களின் பொறுப்புகளையும் ஏற்றுக்கொண்டுள்ள ஈசுவரனுக்கு சமஷ்டி உபாதிகன் என்றும், காரண உபாதிகன் என்றும் சொல்லப் படும். ஆகையால் உபாதி நோக்கத்தால் பன்மை ஒருமை யாகிய பேதம் கூறப்படும்.

44. அன்பனே! மரங்கள் போல் வியஷ்டி பேதம் வனமெனல் சமஷ்டி பேதம். சராசர உயிர்களுக்குள் தனியுடல் வியஷ்டி எனவும், எல்லாம் கூட்டிப் பார்ப்பது சமஷ்டி எனவும் கூறப்படும். ஜீவர்களுக்கும், ஈசுவரனுக்கும் உள்ள பேதம் இப்படிப் பார்த்துக்கொள்க. இதில் ஒவ்வொரு மரமாக களைந்தால் தோப்பு என்பது இல்லை. அதுபோல் ஒவ்வொரு ஜீவனையும் களைந்தால்; அதாவது நேதி செய்தால் ஈசுவரனென்பது இல்லை என்பது தெளிவு. இதை ஔவை பிராட்டியின் ஞானக்குறளால் அறியலாம்.

“அனைத்துருவாய அறிவை அகலின்
தினைத்துணையுமில்லை சிவம்”

45. இதுகாறும் கற்பனையாகத் தோன்றிய சிருட்டிக் கிரமத்தைச் சொன்னோம். அதாவது பழுதையை பாம்பாக வும், கட்டையைக் கள்வனாகவும், கானலை நீராகவும் எப்படி அறிந்ததோ அப்படியே பிரம்மத்தை ஜீவேஸ்வரஜகத்தாக அறிந்தோம். இங்ஙனம் அறிவதை ஆரோபம் எனக்கூறுவர் பெரியோர்கள். ஆகையால் காணப்படுவன அனைத்தும் சொர்ப்

-பனத்தில் காணும் பொருள்கள்போல பொய்யாக எண்ணித் துணிந்தவன் ஞானியாவான். மழைக்காலத்து கருப்பு மேக ஆவரணம் நீங்கி தெளிந்த ஆகாயத்தைப் போல் ஆரோப மான ஜீவேஸ்வர ஜகத்து கற்பனையாக ஒழிந்து தெளிவைக் கொடுக்கும் ஆத்மஞான மார்க்கத்தையும் நீ கேட்பாயாக. இதற்கு அபவாத உபாயம் எனக் கூறுவர். அபவாதம் என்பது தெளிவடைதல். இதன் உள்ளுரை சிருட்டியைக் கற்பனையாகக் கூற ஆரம்பித்த ஆசிரியர் வேதத்தில் கூறிய கிரம சிருஷ்டி, உகபற்சிருஷ்டி, அஜாதவாதம் ஆகிய மூவகையில் மந்தாதிகாரியை முன்னிட்டு கிரமசிருஷ்டி கூறியதே ஒழிய அதற்கு முக்கிய உடன்பாடு அஜாதவாதமேயாம். அதை அனுசரித்து இந்நூலாசிரியரும் கற்பனை வந்தவாறு காட்டினோம் என்றார். கற்பனை, ஆரோபம், அத்தியாசம் என்பன ஒரு பொருளைக் குறிக்கும் பல சொற்கள். கற்பனைத் தோற்றத்திற்குக் காரியம் எனவும், அதற்குக் காரணம் பிரம சக்தி எனவும் அறிக. இந்த காரிய காரணம் இரண்டும் சொல் மாத்திரமும், தோற்ற மாத்திரமுமே ஒழிய அதற்குத் தனி பொருள் இல்லை. அதற்கு பிரம்மே உண்மைப் பொருளாகும். காரியம் பொய்யென்பது வேத சம்மதமாம் என்பதற்கு மேற்கோள் பிரமகீதை; சாந்தோக்கிய உபநிஷத்

"காரிய மொருகா லுண்டா மொன்றினாலழிவதில்லை.
காரியந் தனக்குற்பத்தியிலா மையா லில்லா வொன்றுங்
காரியந் தானெனன்றேடே நண்ணுமென் றுரைத்தல் கூடாம்,
பாருமி னென்று வானோர்க் குரைத்தனன் பதும மேலோன்"

இதன் பொருள் மண்ணின் காரியமான குடம் ஒரு காலத்து தோன்றும். விசாரித்துப் பார்க்கும் போது முற்றும் மண் மயமே ஆகையால் குடமில்லாமையால் அழிவதில்லை. காரியமான குடம் முக்காலத்தும் உற்பத்தியானதில்லை. அந்தக் குடம் மண்ணைவிட்டுப் போய் வேறொன்றேடே சேருமெனல் கூடாது. தேவர்களே இதை நன்றாக ஆராய்ந்து பாருங்கள் என்று பிரமதேவன் கூறினான். இதை நோக்குவோர்க்கு சிருட்டியும், சிருட்டி கர்த்தாவும் காரியமாதலின் சொல் மாத்திரமும் தோற்றமாத்திரமுமாம் என்பது பசுமரத்தாணி போல் உறுதியாம். மேலும் மாயாகாரியத்தை சொற்பனக் காட்சி பொருள் போல் எண்ணித் துணிந்தவன் ஞானியாக முடியுமே ஒழிய; துணியாதவன் ஞானியாக முடியாது

என்பது குறிப்பால் கண்டுகொள்க. இதில் பிரம்மத்தைவிட தனி பொருளாக ஜீவேஸ்வர ஜகனத்தாகக் காண்பது ஆரோபயுக்தி. ஜீவேஸ்வர ஜகத்தைப் பிரம சொரூபமாகக் காண்பது அபவாத யுக்தியாம்.

46. குருதேவா! ஐயத்தின் நீங்கி தெளிவு அடைய, உபாயம் அறிய விரும்புகிறேன். அன்பனே! இது பாம்பு அன்று, பழுதையென்றூர்போலும், புருஷனன்று கட்டையென்றூர் போலும் ஆச்சாரியர் உபதேசத்தாலும், வேதாந்த சாஸ்திரத்தாலும் நான் சரீரமல்ல, உலகமுமல்ல, பஞ்ச பூதமுமல்ல இவையனைத்தும் கற்பனை. நிச்சயமாக நான் பிரம்மமேயாம். அதாவது ஒரே ஆத்ம சொரூபமே என்று தெளிவு அடைவதற்கு அபவாத யுக்தி எனப் பெயராம்.

(அவதாரிகை)

47. மேலும் கற்பனைகள் ஒழிந்து தெளிவடைவதற்கு வழி கூறுகின்றூர். அன்பனே! எங்ஙனம் ஆடையும் நூலும், பணிகளும் பொன்னும், மண்ணும் குடமும் ஆகிய இவை மூன்றும் காரணமும், காரியமும் ஒன்றுக அமைந்திருக்கின்றதோ அவைகள் ஒன்றில் நின்று ஒன்றைப் பிரித்து அறிய முடியாதோ அங்ஙனமே அவித்தை முதல் தூல தேக பரியந்தம் தோன்றிய தோற்றங்களை தத்தம் காரணத்துக்குள் ஒடுக்கிப் பார்த்தால் அனைத்தும் காரண வடிவமாக தெளிவது போல் முற்றும் பிரமமாக தெளிவது அபவாத உபாயமாம். இங்ஙனம் தெளிவதுவே முக்தியாம். அபவாத உபாயத்தைப் பற்றி திருக்குறள் மெய்யுணர்வதிகாரத்தின் ஐந்தாவது குறளுக்கு பரிமேலழகர் உரையில் "நிலமுதல் உயிரீருகிய தத்துவங்களின் தொகுதியென உணர்ந்து அவற்றை நில முதலாக தத்தம் காரணங்களுக்குள் ஒடுக்கிக்கொண்டு சென்றுல் காரண காரியங்கள் இரண்டுமின்றி முடிவாய் நிற்பதனை உணர்தல் மெய்யுணர்வாம் என்றூர்.

48. குருதேவா! தாமசகுணம் இரண்டு சக்தியாகப் பிரிந்து அதில் ஒன்று விட்சேப சக்தியாக மாறி மூவாசையாம் துன்பத்தைக் கொடுக்கும் என்று சொன்னீர்கள். மற்றென்றுன ஆவரண சக்தியானது ஜீவர்களை எப்படி மறைக்கின்றது என்புதைப் பற்றியும் அந்த மறைப்பினுல் என்ன விளைவுகள்

ஏற்படுகின்றது என்பதைப்பற்றியும் அருள் செய்ய வேண்டும் என்று பிரார்த்திக்கின்றேன்.

49. அன்பனே! இந்த ஆவரணச் சக்தியானது யாரை மறைக்கும் யாரை மறைக்காது என்பதைப் பற்றிக் கூறுகின்றேன். சுத்த சத்துவகுண அம்சத்தால் இயற்கை உணர்வினனுன ஈசுவரனேயும் சற்குருவை அடைந்து வேதாந்த விசாரம் செய்து தன் நிஜ சொரூபம் பிரம்மம் என்றறிந்த ஞானிகளேயும் மறைக்கமாட்டாது. இவர்கள் நீங்கலாக மற்றும் உள்ள மெய்ப்பொருள் ஒன்று இல்லே என்று சொல்லுகின்ற நாஸ்திகனேயும், அங்ஙனம் பிரமம் இருந்தால் இவ்வுடம்பு போல் காணப்படாது? என்று சொல்லுகின்ற நபாதியேயும் அன்றி ஏனேய உயிர்களேயும் இவ்வாவரணம் மறைக்கும். இதற்கு உவமானம் யாதோவெனின் ஐப்பசி மாதத்தின் அமாவாசை இரவில் காரிருள் எங்ஙனம் மறைக்குமோ. அங்ஙனமே மறைக்கும் எனக் கொள்க. இதன் உள்ளுரை இவ்வாவரணம் மறைக்கவில்லேயெனின் சிருட்டிக்கு முன் சகலமும் சத்தாகவே இருந்தது என்ற வேதவாக்கியப்படி சிருட்டிக்குப் பின்னும் இடைநின்ற காலத்தும் சத்தாகவேதான் இருக்கவேண்டும். அங்ஙனம் ஆயின் தன்னே சச்சிதானந்தம் என்று ஏன் அறியவில்லே. இவ்வாவரண மறைப்பாலன்றி மற்று யாது காரணம் கூறுதி.

50. அன்பனே! இவ்வாவரணம் எவ்வாறு மறைக்கும் என்பதைக் கேட்பாயாக. பரிபூரணமாகிய பிரமத்தின் நித்தியத்தன்மையும், ஆகாசாதி ஐம்பூதத்தின் அனித்தியத் தன்மையும் சர்வ சாட்சியாகிய ஆத்மாவின் அறிவு விளக்கத் தன்மையும் தேகமே நான் எனக்கொள்ளும் அகங்காராதிகளின் ஜடத்தன்மையும் ஆகிய இவைகளின் ஒன்றுக்கு ஒன்று உள்ள பேதம் தெரியக்கூடிய அறிவை குருடாகும் வண்ணம் மூடி மறைக்கும். ஜீவர்களுக்கு பிறவித் துன்பத்தைக் கொடுக்கும் பெரிய நோய் இவ்வாவரண சக்தியேயாம்.

51. குருதேவா! பழுதை இல்லேயென்ருல் பாம்புத் தோன்றக் காரணமில்லே. அதுபோல் பிரமம் இல்லேயானுல் தேகாதிப்பிரபஞ்சம் தோன்ருதல்லவா? அன்பனே, பழுதை

யும், பாம்பும் ஏககாலத்தில் தோன்றமாட்டாது. பழுதை தோன்றும் போது பாம்பு தோன்ருது. பாம்பு தோன்றும் போது பழுதை தோன்ருது. அதுபோல் எல்லாம் பிரமமாகத் தோன்றும் போது பிரபஞ்சம் தோன்ருது. பிரபஞ்சம் தோன்றும் போது பிரமம் தோன்ருது. இதற்கு சமம், விசேஷமெனப் பெயர்களாம். இவ்விரண்டில் ஒன்றுதான் விசேஷமாக விளங்கும்.

52. அன்பனே! உலகத்தில் சமம், விசேஷம், கற்பித விசேஷம் என மூன்றுவிதமாகப் பெரியவர்கள் சொல்லுவார்கள். இதில் சமம் என்பது நிறைபொருளான பிரம்மத்தையும், விசேஷம் என்பது அந்த பிரம்மத்தின் சச்சிதானந்தத்தையும், கற்பித விசேஷம் என்பது தேகாதிப் பிரபஞ்சத்தையும் குறிக்கும். இதில் எல்லோருக்கும் பிரமம் சொரூபமாக இருந்த போதிலும் தேகாதிப்பிரபஞ்சமான கற்பித விசேஷமே தோன்றுகின்றது. பிரம்ம சொரூபமான ஜீவனுடைய விசேஷபாகமான பரனெனக் கூறும் சச்சிதானந்தமே நான் என அறிய வொட்டாது இவ்வாவரணம் மறைக்கும்.

53. குருதேவா! பிரம்மாத்ம ஐக்கிய ஞானத்தை அறிய வொட்டாமல் ஜனனமரணத் துன்பத்தைக் கொடுப்பது இந்த விட்சேப சக்தியல்லவா? அங்ஙனமிருக்க விட்சேப சக்தியின் காரியமான பஞ்சபூதமும், அதன் காரியமான ஸ்தூல சூட்சும சரீரமும், பஞ்சகோசமும், ஜீவனும் ஆகிய இவையனைத்தும் விட்சேப சக்தியின் காரியமாயிருக்க ஆவரண சக்திதான் பிறவித்துன்பமான வியாதியைக் கொடுக்கும் என்று தாங்கள் முன் ஐம்பதாவது செய்யுளில் கூறியதின் காரணம் தெரியவில்லையே. அதை அருள்வீராக.

54. அன்பனே! பகல் காலம் போல் உபகாரம் இராக் காலத்தில் இல்லை அல்லவா? இராக்காலம் போல் ஆவரண சக்தியையும், பகல் காலம் போல் விட்சேப சக்தியையும் கொள்க. விட்சேப சக்தியில் தோன்றிய குரு சாஸ்திராதிகளால் கேட்டல், சிந்தித்தல், தெளிதல் முதலியன செய்து உத்தமர்கள் ஆயினேர்களுக்கு முக்தி அடைய அனுகூலமாயிருப்பதை நீ கண்டுகொள்க. மேற்கூறிய ஆவரண சக்தி

அப்படிக்கில்லாமல் கொடிய பிறவித் துன்பத்தைக் கொடுக்கும்.

55. குருதேவர்! விட்சேப சக்தியின் காரியமான தேகாதிப் பிரபஞ்சங்கள் சற்றும் தோன்றாமல் இருப்பது முக்தியென்று சிலபேர்கள் சொல்லுகிறார்கள். அது உண்மைதானா வென்று அருள்செய்ய வேண்டுகிறேன். அன்பனே! பிரதி தினம் யாவரும் அனுபவிக்கின்ற சுழுத்தி அவஸ்தையிலும் கற்பாந்த பிரளய காலத்திலும் சகல தேகாதிப் பிரபஞ்சங்களும் தத்தம் காரணத்துக்குள் லயம் அடைந்திருந்தும் பிறவித்துன்பம் நீங்கி முக்தியை அடைந்தவர்கள் ஒருவராவது உண்டோ? இல்லை. ஆகையால் விட்சேப சக்தியில் தோன்றிய அன்னபானாதிகளை உண்டு; கேட்டல், சிந்தித்தல், தெளிதலாதிகளைச் செய்தால் இப்போதே இந்தக்கணத்திலேயே முக்தி அடைவாய். எனவே, முக்திக்குத் தடையாக வுள்ளது இந்த ஆவரண மூடலாகும்.

56. குருதேவா! பழுதையில் பாம்புபோலும், இப்பியில் வெள்ளி போலும் பொய்த்தோற்றமாய்த் தோன்றிய விட்சேப சக்தியின் காரியமான குருசாஸ்திராதிகளும், அன்னபானாதிகளும் பொய்யாதலால் அதன்வாயிலாக உண்டான முக்தியும் பொய்யாகுமல்லவா? அன்பனே! ஒருவன் காணும் கனவில் பல துக்கத்தை அனுபவித்துக் கொண்டு இருக்கும் நேரத்தில் ஒரு புலியானது அவனுடைய கனவில் தோன்றினால் உடனே கனவு நீங்கி நனவு வரும். அப்பொழுது கனவில் தோன்றிய புலி பொய்யாயினும் அதனால் கனவில் உண்டான துக்கமும் பயமும் தீரும். அதுபோல் குருசாஸ்திராதிகள் மாயையின் காரியமாய்ப் பொய்யானாலும் அதனாலுண்டாகும் ஆத்மஞானம் உண்மையாகும்.

57. அன்பனே! உலகத்தில் விஷத்தை அதன் பிரதிகூலமான விஷத்தாலும், இரும்பை இரும்பாலும், ஆடையில் பற்றிய அழுக்கினை உழமண் முதலிய அழுக்காலும் அழுக்கைக் கெடுப்பதை நாம் பார்க்கின்றோம் அல்லவா? அதுபோல் விட்சேப சக்தியின் காரியமான குருசாஸ்திராதிகளால் ஆவரணத்தைக் கெடுக்கவேண்டும். அதன்பின்னர் அந்த

விட்சேப சக்தியின் காரியமான விருத்தியும் பிணம் சுடும் தடிபோல் பிரம்ம விசாரத்தால் நேதி நேதியால் போய்விடும்.

58. அன்பனே! ஜீவர்கள் முக்தியை அடைந்துய் வதற்காக இந்த மாயையினால் ஏழவஸ்தைகள் ஏற்பட்டிருக் கின்றன. அவைகளை நீ துருவி ஆராய்ந்து பார்த்தால் நீயும் அந்த முக்தியை அடைவாய்.

ஏழவஸ்தைகளின் பெயர்களாவன :

1. அஞ்ஞானம் (அறியாமை)
2. ஆவரணம் (மறைப்பு)
3. விட்சேபம் (பேதபுத்தி)
4. பரோட்சம் (கேள்விஞானம்)
5. அபரோட்சம் (அறிந்த ஞானம்)
6. துக்கநிவர்த்தி
7. எல்லையற்ற ஆனந்தம்

ஆக ஏழுமாம்.

59. அன்பனே! இந்த ஏழில் நான்கு இதில் கூறு கின்றேன். கேட்பாயாக. கண்டபூஷண நியாயம்போல் பிரம்ம சொரூபமாய் இருக்கும் தன்னை ஒரு ஜீவனாக எண்ணியதே அஞ்ஞானம். தான் அறிவு சொரூபனாக இருந்தும், அது தனக்கு விளங்கவில்லை என்பது ஆவரணம். ஜீவன் தன்னை கர்த்தாபோக்தாவாக கருதிக்கொள்ளுதல் விட்சேபமாம். குருவாக்கியத்தால் அறிவுசொரூபமான பிரம்மம் இருக்கிறது என்று கேள்வி ஞானத்தால் அறிவது பரோட்சம்.

60. ஏனைய மூன்றும் இதில் கூறுகின்றார். அன்பனே இருபத்தெட்டு தத்துவமும் விசாரித்து நேதி செய்தபின் எஞ்சியுள்ள அறிவே பிர்மம். பிர்ம்மமே அறிவு என்ற அத்வைத ஞானம் அபரோட்சமாகும். பணிகள் அனைத்தும் ஒரே தங்கந்தான் என்று அறிவதுபோல் சர்வ ஆத்மாக்களும் ஒரே அறிவு சொரூபம் என்று அறிவதுவும் அபரோட்ச ஞானமாம். தன்னை கர்த்தா போக்தாவாகக் கருதிய ஜீவ போதம் நீங்குவதே துக்க நிவர்த்தியாம். பேரறிவு வடிவமே

தன் நிஜ சொரூபம் என்று அறிவது தடையற்ற அதாவது எல்லையற்ற ஆனந்தமாம். ஆக ஏழும் இவையெனக்கொள்க.

இதன் உள்ளுரை:

அபரோட்ச ஞானம் என்று கூறும்போது நாம ரூபங் களைப்போல் பிரம்மத்தை முன்னிலைச் சுட்டுப் பொருளாக்கி அறியவேண்டும் என்று உரை கூறி காலத்தை வாளா போக்கினர் பலர். இதை ஞானவாசிட்டம் வீரசேகரருரை யின் 1651-ம் பக்கத்தில் "கேயூராதிகள் கனகம் என்னும் ஏக புத்தியுடையவன் நிர்விகற்பன்" என்றும், சிவானந்த சுவாமியின் கட்டளை வியாக்கியான உரையின் 227-வது பக்கம் பணிகள் எல்லாம் தங்கமே என்று அறிவது அபரோட்ச ஞானமாம் என்றும், சிற்சொரூபம் தானே ஜெக சொரூபமான வெல்லாம் என்ற சொரூபசாரத்தாலும் தனது நிஜ சொரூபம் பிர்மம் என்றும், அதுவே அனைத்துமாம் என்று அறிவது அபரோட்ச ஞானமாம்.

61. அன்பனே! இந்த ஏழவஸ்தையை விளக்கும் உதாரணத்தையும் நீ கண்டு கொள்க. இதை ஒரு கதையின் மூலமாக விளக்குகின்றேன். பத்து புருஷர்கள் ஒரு ஆற்றைக் கடந்து கரையில் ஏறி எல்லோரும் கரைசேர்ந்துவிட்டார்களா என்று அறிவதற்காக; அதில் ஒருவன் ஒவ்வொருவனையும் எண்ணிப் பார்த்தான். ஒன்பது பேரையும் பார்த்தான் பத்தாமவன்; தான் என்று அறியாமல் மயங்கி நின்றான்.

62. அன்பனே! மேற்கூறிய ஏழவஸ்தையையும் உப-மான வாயிலாக விளக்குகின்றேன். இதில் நான்கு உவமையைக் கூறுகின்றார். பத்தாமவன் தான் என்று அறியாமல் மயங்கி நின்றது அஞ்ஞானத்திற்கு உவமையாகும். பத்தாமவன் இல்லை; அவன் ஆற்று வெள்ளத்தோடே போய் விட்டான் என்பது ஆவரணத்திற்கு உவமையாகும். பத்தாமவன் நதியோடே போய்விட்டான் என்று புலம்புவது விட்சேபத்திற்கு உவமையாகும். (ஆப்தன்) வழிபோக்கன் வாக்கியத்தால் பத்தாமவன் இருக்கின்றான் என்று நிச்சயித்துக் கொள்ளுதல் பரோட்ச ஞானத்திற்கு உவமையாகும்.

63. இதில் ஏனைய மூன்றும் கூறுகின்றார். புண்ணிய ஞான ஆப்தன் ஒருவன் அவனைப்பார்த்து ஒன்பதுபேரையும் எண்ணுக என்றான். அவனும் அவ்வாறு எண்ணினான். முடிவில் எண்ணியவனைப் பார்த்து நீயே பத்தாமவன் ஆவாய் என்று உணர்த்தினான். அவனும் தான் பத்தாமவன் என்று நிச்சயமாக அறிந்துகொண்டான். இதுவே அபரோட்ச ஞானத்திற்கு உவமையாகும். இதனால் பத்தாமவன் ஆற்று வெள்ளத்தில் இறந்தனன் என்ற துக்கம் நீங்குவது ஆறாவ-தான துக்க நிவர்த்திக்கு உவமையாகும். பத்தாமவன்தான் என்று நிச்சயித்த சந்தோஷத்தைப்போல் ஐயம் திரிபு அற தன் நிஜ சொரூபம் பேரறிவு வடிவமாய்க் கண்டு தெளிவது ஏழாவதான எல்லையற்ற ஆனந்தத்திற்கு உவமையாகும். இதுவே தடையற்ற ஆனந்தமாம்.

64. குருதேவா! பத்தாமவன் தன்னை பத்தாமவன் என்று அறிந்தாற்போல் என் நிஜ சொரூபத்தை நான் அறிய விளக்கிக் காண்பிக்க வேண்டுகிறேன். அன்பனே! சாம வேதத்தின் சாந்தோக்கிய உபநிஷத்தில் ஆறாவது அத்தியாயத்தில் சுவேத கேதுவுக்கு தமது பிதாவான் உத்தாலகர் உபதேசித்தருளிய தத்துவமசி என்ற மகாவாக்கியத்தை பின்பு உனக்கு உபதேசிக்கின்றேன். அது தற்பதம், த்வம்பதம், அஸிபதம் என் மூன்றாயிருக்கும். அதன் வாயிலாக ஆத்மாவே பிரமம் என்ற ஐக்கிய ஞானத்தை அறிவிக்கின்றேன்.

65. அன்பனே! மேற்கொண்டு 82-வது செய்யுள் வரை நான் உனக்கு மகா வாக்கியத்தை விளக்கிக் கூறுகின்றேன். ஒரே ஆகாயமானது நான்கு விதமாகச் சொல்லப்படுகின்றது. அதாவது எங்கும் நிறைந்துள்ள ஆகாயத்தை மகாகாயம் எனவும், மேகஜலத்தில் பிரதிபிம்பித்த ஆகாயத்தை மேக ஜலப் பிரதிபிம்ப ஆகாயம் எனவும், ஒரு குடத்தில் தோன்றும் ஆகாயத்தை கடாகாயம் என்வும், அந்த குடத்தில் ஜலம் நிரம்பிய பின் அதில் தோன்றும் ஆகாய பிரதிபிம்பத்தை கடஜல பிரதிபிம்ப ஆகாயமென்வும் நான்காக எண்ணும் கற்பனைபோல்; சைதன்ய சொரூபமான பிரமம் ஒன்றே. அது எங்கும் நிறைந்திருத்தலால் பிரமம் என்றும், ஐந்

தொழில் புரிவதால் ஈசுவரனென்றும், ஜீவசாட்சியாய் இருத்தலால் கூடஸ்தனென்றும், சரீரத்தை நான் என்று அபிமானித்தலால் ஜீவனென்றும் நான்காகப் பிரித்துக் கூறினும், ஆகாயத்தை நான்காகக் கூறுவது எங்ஙனம் கற்பனையோ அங்ஙனமே சேதன சொரூபத்தை நான்காகக் கூறுவதும் கற்பனையாகும்.

66. அன்பனே! முன் 64-வது செய்யுளில் கூறிய மூன்று பதத்தின் தாற்பரியத்தைக் கேட்பாயாக. ஒவ்வோர் பதத்திற்கும் வாச்சியம் லெக்ஷியம் என விளக்கம் கூறுவர் அறிஞர்கள். உதாரணமாக நாமக்காரன் குந்தக்காரன் என்பதில் நாமமும், குந்தமும் வாச்சியார்த்தமாம். அவைகளை ஏற்றுக்கொண்டு இருப்பவர்கள் லட்சியார்த்தமாம். இது போல் தற்பதத்திற்கு வாச்சியார்த்தம் சமஷ்டி உபாதியுடைய ஈசுவரன் லட்சியார்த்தம் வியாபக சேதனமான பிரமமாம். இனி இரண்டாவது பதமான த்வம்பதத்தின் வாச்சியார்த்தமும் கூறுகின்றேன். மூன்று சரீரத்தையும் நான், எனது என்று அபிமானிக்கும் ஜீவனும் சரீரமும் வாச்சியார்த்தமாம். ஜீவ சாட்சியான கூடஸ்தன் லட்சியார்த்தமான ஆத்மாவாகும். பாலும் நெய்யும் ஒன்ருயிருந்தாலும் காய்ச்சிக் கடைந்து வெண்ணையை எடுப்பதுபோல் விவேக விசாரத்தால் உன்னை லட்சியார்த்த சொரூபமான கூடஸ்தனே பிரமம் என்று அறிந்து நீ வாச்சியார்த்தத்தில் இருந்து பிரிந்து கொள்ளக்கடவாய்.

67. அன்பனே! பிரிந்துகொள்வது எவ்வாறு என வினவின் கேட்பாயாக. இந்த ஸ்தூல தேகத்தை ஆத்மாவெனக் கருதும் பிராந்தியைக் களைதல் வேண்டும். ஏனெனின் அது ஐம்பூதங்களின் காரியமன்ருே! அன்றி அது ஜடமும் ஆகும். அதுவும் அன்றி அன்னமயக்கோசமும் ஆகும். நீ அவைகளுக்கு வேருன சித்து சொரூபனல்லவா? இனி மூக்கால் விடும் பிராணவாயுவும் நீ என்ற சொல்லுக்கு உண்மைப் பொருள் அல்ல. அதுவும் சடம் அன்றி அபஞ்சீகிருதக் கலப்படையாத பூதங்களின் ரஜோகுண காரியமாம். ஆகையால் பிராணவாயுவும் நீ அல்ல என்று உணர்க அன்பனே!

68. ஒன்றை நினைப்பதற்குக் கருவியான மனமும் தன்னை கர்த்தா போக்தாவாகக் கருதும் புத்தியும் ஆத்மாவாகிய நீ அல்ல. இவையிரண்டும் அபஞ்சீகிருத பூதகாரியமான மனோமயகோசம், விஞ்ஞானமயகோசமாம். ஆகையால் இதுவும் ஆத்மாவாகிய நீ அல்ல. இனி மிஞ்சிய சுழுத்தியவஸ்தையான ஆனந்தமயகோசமும் நான் என்று நினையாதே. ஏனெனின் அது அஞ்ஞான விருத்தியின் காரியம் ஆதலின் பஞ்சகோசமும் ஆத்மாவாகிய நீ அல்ல.

69. குருதேவா! இவைகள் நானல்லவென்றால் நான் என்பது யார்? அன்பனே! சத்தாகவும், சித்தாகவும், ஆனந்தமாகவும், நித்தியமாகவும், பூரணமாகவும், சங்கற்ப விகற்பம் அற்றதாகவும், மாறுதல் அடையாததாகவும், மூன்று தேகத்துக்கும் சாட்சியாகவும், சர்வாத்மாவாகவும், அழிவற்றதாகவும், எங்கும் நிறைந்ததாகவும் உள்ள ஆத்மாவே நீயாம் என்று அறிந்து அசத்து, ஜட, துக்க சுபாவமான பஞ்சகோச வடிவமான சரீரத்தை ஆத்மாவென்னும் பிராந்தியை விட்டுவிடக்கடவாய்.

70. குருதேவா! பஞ்சகோசமும் ஆத்மா அல்லவென்று நேதி செய்தபின் மிச்சம் ஒன்றும் காணேன். இங்ஙனம் ஒன்றும் காணேன் என்ற சூன்யத்தைத்தானோ என் நிஜ சொரூபமென்று வேதம் கூறுகின்றது? கபடமற்ற குருவே என்று வினவிய சீடன் புத்தி தெளிவடையும்படி மேலும் உபதேசிக்க ஆரம்பித்தார்.

71. அன்பனே! முன்பு தசம திருஷ்டாந்தத்தின் பத்தாமவன் ஒன்பது பேரை எண்ணிப் பார்த்தபின் பத்தாமவன் நான்தான் என்று நிச்சயமாக அறிந்தானல்லவா? அதுபோல் ஒன்றும் காணவில்லை என்ற சூன்யத்தை அறிந்தவன் அந்த சூன்யத்துக்கு வேறானவன் ஆகும். அன்புள்ள சீடனே! காணப்பட்ட சகல திரிசியங்களுக்கும் (அறிபடுபொருளுக்கும்) விளக்கம் தரும் அறிவு வடிவமான சிற்சொரூபனாகிய ஆத்மாவே நீயாம்.

72. அன்பனே! ஸ்தூல, சூட்சும, காரணம் ஆகிய மூன்று தேகங்களும் அந்தந்த தேகங்களுக்கு உளவாகும்

நனவு, கனவு, உறக்கமாகிய அவஸ்தைகளும் சென்றகாலம், நிகழ்காலம், வருங்காலம் ஆகிய மூன்று காலங்களும் ஆகிய இவைகள் ஜனனமாகிய சமுத்திரத்தின் அலைகள் போலவே வந்துவந்து போன பிறவிகள் எண்ணற்றவைகளாகும். ஆகையினுல் கல்லாலின் கீழ் சனகாதி முனிவர்களுக்கு குருமூர்த்தமாய் எழுந்தருளிய தட்சணுமூர்த்தியின் மேல் ஆணையாக இவைகள் அனைத்திற்கும் சாட்சி சொரூபமான ஆத்மா நீயேயாம்.

73. சகல பதார்த்தத்தையும் அறியும் அறிவை எதிரிட்டு அறிவதற்கு வேறு ஒரு அறிவு வேண்டுமே என்று நீ சந்தேகப்படாதே! உற்பத்தி நாசமின்றி இயற்கையாக அதாவது அநாதியாக; அதுவும் வாஸ்தவ அநாதியாக உள்ள இந்த அறிவை அறிவதற்கு வேறு அறிவு இல்லை. எதுபோல எனின் முன் பத்தாமவன் தன்னை பத்தாமவன் என்று தன்னைத் தானேயன்றி பதினென்ருமவனும் அவ்விடத்தில் உண்டா? இல்லையல்லவா? இதை நீ யூகித்து அறியக்கடவாய்.

74. அறிவை விளக்க மற்ருேர் அறிவு உண்டென்று நினைப்பவர்கள் மூடர்கள். அதிலும் குதர்க்க மூடர்கள். அவர்களுக்கு முடிவற்ற தோஷமுண்டாகும். ஆகையால் உன்னுல் அறியப்படும் பொருள்களும் நீ அல்ல, உன்னுல் அறியப்படாது ஒழியும் பொருள்கள் இருந்தால் அதுவும் நீயல்ல; பின் நீ யார் எனில் சுத்த அறிவே நீயாம். இதற்கு உள்ளுரை. பிரக்ஞானம் பிரமம் அதாவது பேரறிவே பிரமம் என்ற வேதவாக்கியத்தை காற்றில் பறக்கவிட்டு விட்டு கடவுள் என்பது அறிவுக்கு அறிவு என்கூறி தானுன அறிவை எட்ட அறியாது குழப்பி இடர்பட்டார் பலர். பாவம் அறிவுக்கு அறிவு என்று கூறுவது வேதத்திற்கும், ஆன்ருேர் வாக்கியங்கட்கும் விரோதமாகும் ஸ்ரீ சுந்தரமூர்த்தி சுவாமிகள் தேவாரம் திருக்கேதாரம் பண் 1016-ல் "அறிவானிலும் அறிவான் அல" என்றும், திருமந்திரம் அறிவுதையம் என்ற தலைப்பின் கீழ் 4-வது பாட்டில் "அறிவுக்கு அறிவு அல்லதாதாரமுமில்லை" என்றும்

மேற்படி திருமந்திரம் :—

"எல்லாம் அறியும் அறிவதனை விட்டு
எல்லாம் அறிந்துமிலாப மிங்கில்லை
எல்லாம் அறியும் அறிவினை நானென்னில்
எல்லா மறிந்த இறை யெனலாமே" என்றும்;

ஔவையார் குறள் :—

"அனைத்துருவாய அறிவை அகலின்
தினைத் துணையுமில்லை சிவம்" என்றும்

சுப்ரமணிய பாரதியார் பாடல் :

"எத்தனேடும் நின்றோங்கும் அறிவொன்றே
தெய்வமென்று ஓதியறியீரோ" என்றும்

பாகவத புராணம் :

"வாக்கினைக் கடந்து ஓங்கி மற்றெங்கணு
நீக்க மின்றி நிறைந்த அறிவினை—ஊக்கமுற்று
உணர்த்தற் கிட்டுங்கலி
ஞக்கையுங் குருவாய தரிசனே" என்றும்

பிரம்ம கீதை தைத்திரியோபநிஷத்து :

"மையலொன்றற இவ்வறிவினை அறியின்
மானிடன் முத்த ஞமின்றி
துய்ய கர்மத்தால் மைந்தரால் மற்றோர்
பொருளினுல் உற்பவம் துடையான்" என்றும்

கூறிப்போந்துள்ள சற்பிரமாணப்படி இந்நூலாசிரியரும் அறிவொன்றே நித்தியமென்வும்; அதுவே உன் நிஜ சொரூபம் எனவும் கூறினர்.

75. அன்பனே! ஆத்மா அனுபவ வடிவமாதலின் அதை அறிபடு பொருளாக்கி அனுபவிக்க முடியாது. எது போலவெனின் மதுரசுபாவமான வெல்லக்கட்டியைச் சேர்த்து சுட்ட மாப்பணியாரமெல்லாம் மதுரமேயன்றோ! அதுபோல் அது இது என்னும் ஜடவஸ்துக்களை விளக்கிக்கொண்டிருக்கும் அறிவு சொரூபன் நீயேயாம். வெல்லத்திற்கு மதுரம் கொடுப்பது வேறொன்றில்லாது போல் அனுபவ வடிவமான

ஆத்மா அனுபவத்திற்கு (எதிரிட்டு) விஷயமாகாமையால் அதற்கு அனுபவம் தேவையில்லை.

இதன் உள்ளுரை :

"ஆத்மாவை முன்னிலைச்சுட்டுப் பொருளாய் அனுபவிக்க வேண்டும் என்று முற்பட்டார்கள் பலர். முன்னிலைச்சுட்டுப் பொருள் அசத்து என்று இவர்கள் அறியார்கள் போலும். இதைப் பஞ்சதசி முதற் புத்தகம் 201-ஆம் பக்கத்தில் "ஆத்மா தானே அனுபவமென்னும் நித்திய ஞான வடிவமா யிருத்தலால் அதற்கு அனுபவிக்கப்படும் தன்மையில்லை. இவ் வாறே 'தோன்றுவதெல்லாம் அசத்து' என்ற தேவிகாலோத் திரமும் 'உணர்வுரு அசத்து' என்ற சிவஞானபோத சூத்திர மும் ஓதி உணர்வாயாக!

76. அன்பனே! முன் 63-ல் கூறிய முப்பதத்தின் உட் பொருளைக் கேட்பாயாக: நீ மூன்று சரீரத்திற்கும், ஐந்து கோசத்திற்கும், மூன்றவஸ்தைக்கும் நான் என்ற சொல்லுக்கும் சாட்சியாய் விளங்கும் அறிவே த்வம்பதத்தின் இலட்சியப் பொருளாகும். மாயைக்கு அதிஷ்டானமான பிரமமே தற்பதத்தின் இலட்சியப் பொருளாகும். ஜீவனென் பதும், ஈசுவரனென்பதும் இரண்டு பதத்திற்கும் வாச்சியப் பொருளாகும். இந்த ஜீவ ஈசுவரனுகிய இரண்டிற்கும் ஏகத்துவமான ஐக்கியம் கூடாது. இதில் அந்தமாம் ஜீவன், ஈசன் என்றதில் ஈசுவரனுக்கு அந்தம் உண்டோ எனின் இதற்கு ஸ்ரீ பொன்னம்பல சுவாமிகளின் உரையில் "பிரம்ம வித்தையினுல் இருவரும் நாசமாகும்" என்று கூறியிருப்பதால் அறிக.

77. அன்பனே! பேதம் எவ்வாருமெனில் ஜீவன், ஈசன் என்ற பெயராலும், பிண்டம், அண்டம் என்ற இடங் களாலும் காரிய காரண உபாதியாலும், வியஷ்டி, சமஷ்டி சரீரத்தாலும், கிஞ்சிக்ஞன், சர்வக்ஞன் என்ற உணர்வாலும் இவர்கள் பாதாள உலகமும், விண்ணுலகமும் போல் பல தூரம் அகன்று நிற்பார்கள். ஆகையால் இவர்களுக்கு எந்தக் காலமும் அபேதம் உண்டாகமாட்டாது. இதில் காரிய உபாதியே வியஷ்டி உபாதி என்வும், காரண உபாதியே

சமஷ்டி உபாதியெனவும் கொள்க. இதில் தேகம், இந்திரியம், பிராணன், மனம், புத்தி, அகங்காரம், சித்தம் ஆகிய ஏழும், ஜீவனுக்கு காரிய உபாதிகளாம். சர்வேஸ்வரத்துவம், சர்வஞ்ஞத்துவம், சர்வாந்தரியாமித்வம், சர்வகாரணத்வம், சர்வஸ்திதித்வம், சர்வ சம்ஹாரத்வம், சர்வ சிருஷ்டித்வம் ஆகிய ஏழும் ஈசுவரனுக்கு காரண உபாதிகளாம்.

78. குருதேவா! ஜீவேஸ்வரர்களுக்குள்ள பேதம் அறிவதற்கு இலக்கண விதி எவ்வாரும்? அன்பனே! வட நூலார் கூறும் ஜீவன், ஈஸ்வரன் என்ற வாக்கியத்தில் அர்த்த பேதம் தோன்றுமேயானால் அதை நீக்கி அந்த சொற்களுக்கு பொருள் தோன்றுமாறு மூன்று இலக்கண விதிகளைக் கூறுகின்றேன். அவையாவன:— விட்ட இலக்கணை, விடாத இலக்கணை, விட்டுவிடாத இலக்கணை எனப் பெயராம். இதில் உவமானமாகக் காட்டுவது இலக்கணமும், உபமேயமாகக் காட்டுவது இலக்கியமும் ஆகும். இது பின்வரும் கவியால் விளங்கும் என்றறிக. இலக்கணம் எனினும் இலட்சணமெனினும் ஒக்கும். இலக்கியமெனினும் இலட்சியமெனினும் ஒக்கும்.

79. அன்பனே! தத்வமசி மகா வாக்கியத்தின் பொருளை விளக்குவதற்காக விட்ட இலக்கணை, விடாத இலக்கணை, விட்டுவிடாத இலக்கணை ஆகிய மூன்றுக்கும் உதாரணப் பெயர் கூறுகின்றேன். கங்கையில் கோஷமென்றும், கறுப்பு சிகப்பு ஓடுதென்றும், சோயம் தேவதத்தன் என்றும் சொல்வார்கள். இந்த மூன்று உதாரணங்களினுலேயே வேதத்தில் கூறப்பட்டுள்ள வாச்சிய லட்சியங்களுக்கு ஏகத்வம் பொருந்தும் பொருந்தாதென்ற விரோத பாகங்கள் நீங்கி தெளிவு ஏற்படும். இங்கே கங்கையில் கோஷம் அல்லது கிராமம் என்பதை விட்ட இலக்கணைக்கும், கறுப்பு சிகப்பு ஓடுது என்பதை விடாத இலக்கணைக்கும், சோயம் தேவதத்தன் என்பதை விட்டுவிடாத இலக்கணைக்கும் உதாரணமாகக் கொள்க.

இதன் உள்ளுரை:

கங்கையில் கோஷம் என்று கூறும்போது கங்கையில் கோஷம் எனப்படும் சத்தம் கங்கையில் இராது. கரையில் நிற்பவர்களிடம்தான் இருக்கும். அல்லது கங்கையில் கிராமம்

என்கிறபோது கங்கையில் கிராமம் இராது, கரையில்தான் இருக்கும் என்று கங்கையை விட்டு கரையைக்கொள்வது போல் த்வம்பத வாச்சியார்த்தமான மூன்று சரீரம், மூன்றவஸ்தை, மூவகை அபிமான ஜீவத்தன்மை ஆகியவைகளை விட்டு அவைகளை விளக்கிக்கொண்டிருந்த அறிவே கூடஸ்தன். அதுவே தன் நிஜ சொரூபம் என அறிவது விட்ட இலக்கணையாம். விடாத இலக்கணையாவது கறுப்பு நிறமுள்ள பசுவும், சிகப்பு நிறமுள்ள குதிரையும் ஓடுகின்றன என்று கூறும்போது கறுப்பு நிறத்தையும், சிகப்பு நிறத்தையும் விடாமல் அதைத்தாங்கி நின்ற பசுவையும், குதிரையையும் அறிவது போல் சமஷ்டி, ஸ்தூல, சூட்சும, காரண சரீரங்களும், சமஷ்டி அவஸ்தைகளும், சமஷ்டி அபிமான நாமங்களும் விடாமல் அதை விளக்கிக்கொண்டிருந்த வியாபக அறிவும் மேற்கூறிய கூடஸ்த அறிவும் ஒரே அறிவு தான் என்றும், அதுவே தனது நிஜவடிவாம் என்றும் அறிவது விடாத இலக்கணையாம்.

அவதாரிகை விட்டுவிடாத இலக்கணைக்கு உதாரணம் கூறுகின்றார்.

80. அன்பனே! முன்கூறிய சோயம் என்னும் பதத்திற்கு உதாரணம் கூறுகின்றேன். காசியில் அரசனாக இருந்த ஒருவன் பிற்காலத்தில் சிதம்பரத்தில் பிச்சை ஏற்பவனாக இருக்கின்றான். இவனை காசியில் அரசனாக இருந்த காலத்து பார்த்த மற்றொருவன் சிதம்பரத்திலும் பார்த்தான். அப்பொழுது அவன்தான் இவன் என்றார். இந்த சொல்லில் உள்ள விரோதபாகமான அந்த தேசமும் அந்த காலமும், இந்த காலமும், இந்த தேசமும் விட்டு பார்த்தால் அவன் ஒருவனேயாம் என்பது திண்ணம் அல்லவா? உவமானமெனினும் திருஷ்டாந்தமெனினும் ஒக்கும்.

81. அன்பனே! முன் கவியில் கூறிய திருஷ்டாந்தத்திற்கு தாஷ்டாந்தம் இக்கவியில் கூறுகின்றேன். கேட்பாயாக. வேதங்களுக்கு முக்கிய உடன்பாடாகிய மூன்று இலட்சணைகளின் வாச்சியார்த்தமாகிய பாகத்தை விட்டுவிடுதல் பாகத்

தியாக இலட்சணையாம். முன் திருஷ்டாந்தத்தில் அவனே இவன் என்று அறிந்ததுபோல் தற்பத த்வம் பதங்களின் வாச்சியார்த்தமான சமஷ்டி, வியஷ்டி உபாதிகளை நேதி செய்து பார்த்தால் ஜீவசாட்சியான கூடஸ்தனும், ஈசுவர சாட்சியாகிய பிரமமும், ஏகம் அதாவது இரண்டும் ஒரே நிறைபொருள். இப்படி நிறைந்த பொருளான பிரமமே நீயாகும். மேற்கோள் ரிபுகீதை : "தற்பத லட்சியமான பிரமரூபம் துவம்பத லட்சியமான நீயேயாவாய். அற்பமும் இதில் ஐயம் இல்லை. அகண்டபரசிவந்தன்னை அறைந்துண்மை" என்பதனால் அறிக. மேலும் த்வம்பத விசாரணையில் தேர்ந்த அறிவு நீக்கமற எங்கும் நிறைந்த பொருள் ஆகும் என்பதற்கு முன் 74-வது கவியின் சாரத்தில் காட்டிய மேற்கோளே சால்ச்சிறந்தது. அதில் சிறிதளவு இங்கே காண்பிப்போம்.

"அனைத்துருவாய அறிவை" என்ற ஔவைக்குறளும், "எங்கனும் நீக்கமின்றி நிறைந்த அறிவினை" என்ற பாகவத புராணமும், "பறையர் தம்முள்ளும், பண்டிதர் தம்முள்ளும் அறிவன் ஏகன்" என்ற சிவஞான வள்ளலார் சாஸ்திரமும், "உணர்வெனும் பெரும்பதந்தெரிந்து" என்ற நம்மாழ்வார் வாக்கியமும், "மெய்யறிவுருவாம் தெய்வமே" என்ற ராமலிங்க அடிகள் வாக்கியமும், "அறிவான தெய்வமே" என்ற தாயுமானவர் வாக்கியமும் ஆகிய ஆன்றோர் மகா வாக்கியங்களால் அறிக.

82 அன்பனே! மேகஜலப் பிரதிபிம்ப ஆகாயமும், குடத்திற்குள் நிரம்பிய ஜலத்தில் தோன்றும் பிரதிபிம்ப ஆகாயமும் ஆகிய இவை இரண்டும் பொய்யேயாம். குடத்திற்குள் எப்பொழுதும் உள்ள ஆகாயமும், எங்கும் நிறைந்த ஆகாயமும் எக்காலமும் அபேதமேயாம். அதுபோல் ஜீவ சாட்சியும், ஈசுவரசாட்சியான பிரமமும் எப்பொழுதும் அபேதமேயாம். ஆகையால் இந்த உண்மையை அறிந்து பிரம்ம சொரூபமான சிவம் நானே என்று திட நிச்சயமாக இருப்பாயாக.

83. குருவானவர் இதுகாறும் கூறிய உபதேச மொழிகளைக்கேட்ட சிஷ்யன் தனக்கு உறுதுணையாகிய ஆச்சாரியர்

அருளிச்செய்த தத்துவ வழி தவருமல் அன்னமயக்கோச முதல் ஆனந்தமயக்கோசம் ஈருக தோன்றிய தத்துவக் கூட்டங்கள் தானல்லவென்று நேதி செய்தபின் ஒன்றும் காணேன் என்ற பாழையுந்தள்ளி, தான் வேறு பிரமம் வேறு என்ற ஐயமும் நீங்கி, நிறைபொருளான அறிவு சொரூபமே தன் நிஜ சொரூபம் என அறிந்தான். இதில் கண்டான் என்று வரும் இடங்களில் நிச்சயித்தான் எனப் பொருள் கொள்க. அங்ஙனம் இன்றி ஆத்மாவை முன்னிலைச்சுட்டுப் பொருளாகக் கண்டது அல்லது அறிபடுபொருளாகக் கண்டது எனக் கொள்வது பிராந்தியேயாம்.

84. குருதேவர் உபதேசித்தப் பிரகாரம் சிஷ்யன் ஆத்மாவாகிய தான் அறிவானந்த சொரூபம் என்று அறிந்து ஆனந்த சமுத்திரத்தில் மூழ்கினுன். தனுகரணுதிகள் சகலமும் நேதிசெய்து சேடித்து நின்ற அறிவே தானுனுன். இந்த அறிவே நிறைபொருள். இப்படி நிறைபொருளாக விளங்கு வதே நனவிற் சுழுத்தியாம். சொஸ் சொரூப ஸ்திதி யான இந்த நனவிற் சுழுத்தியில் நல்ல சிஷ்யனுன இவன் இருந்தான்.

இதன் உள்ளுரை :

நனவிற் சுழுத்தி என்பது மனமற்ற ஓர் மயக்க நிலை யன்று. பிரம நிச்சயத்துடன் தத்தம் விவகாரங்களை செய்தல் நனவிற் சுழுத்தியாம். இதை ஞானவாசிட்டம் வீர சுப்பையா சுவாமிகளின் உரையின் 1727-ம் பக்கம் " நனவிற் சுழுத்தி நிலைமேவி ஜாக்கிரத்தில் தானே நிர்விகார சித்தனுகி கர்மங்களைச் செய்வாய் என்று கூறியிருப்பதால், அசங்கத் தன்மையான பற்றற்ற நிலையில் சகல கர்மங்களையும் செய் வது நனவிற் சுழுத்தியென்பதாயிற்று. இதற்கு மாருக மனதற்ற நிலையை நனவிற் சுழுத்தியாகக் கொள்ளுவது பிராந்தியேயாம்.

85. அன்புள்ள சிஷ்யன் மேற்கூறிய பிரகாரம் நாமரூப பிரபஞ்சத்தை மறந்து, பேரறிவு சொரூபமாக நெடுநேரம் இருந்தான். பின் மெதுவாக நாமரூப பிரபஞ்சத்தை நினைக்க ஆரம்பித்தான். அப்பொழுது தன் நிஜ சொரூபமே

நாமரூபமான சரீரத்தைத் தாங்கி குருவடிவமாக வீற்றிருப்பதைக் கண்டான். தன்னை ஜட வடிவமாக அறிந்ததனால் முன் ஏற்பட்ட ஜனன மரணத் துன்பமும், குருவின் கருணையினால் தான் அகண்ட அறிவு சொரூபன் என்று அறிந்ததனால் ஏற்பட்ட ஆனந்தமும் நினைத்து கண்களில் ஆனந்தக் கண்ணீர் சொரிய தமது குருவின் பாதத்தில் விழுந்து அஷ்டாங்க நமஸ்காரம் செய்து கீழ்வருமாறு விண்ணப்பித்தான்.

86. குருதேவா! சைதன்ய சொரூபனான தாங்கள் சென்றுபோன ஒவ்வொரு ஜென்மத்திலும், எனது ஆத்ம சொரூபமாக இருந்து ஆட்கொண்டதுமன்றி, இப்போது எனது நிஷ்காம புண்ணியத்தின் பயனாக குருமூர்த்தியாக எழுந்தருளி, தத்துவமசி மகாவாக்கியத்தை உபதேசித்து எனது அஞ்ஞானத்தைப் போக்கி ஜீவன் முக்தனாக செய்தருளிய உதவிக்கு கைமாறு ஒன்றும் காணேன். திருவடி வாழ்க! இதில் கைமாறு காணேன் என்பான் ஏனெனின், குருவை சரணாகதி அடைந்த காலத்தே உடல், பொருள், ஆவி மூன்றும் குருவுக்கு சொந்தமாய் கொடுத்தமையால் இப்பொழுது கைமாறு செய்ய ஒன்றும் இல்லையென்பது பொருள்.

87. நல்ல சிஷ்யன் இவ்வாறு கூறியதைக் கேட்டு சந்தோஷமடைந்த குருவானவர் அவனை அருகில் அமரச் செய்து கருணையினால் அருளிச் செய்வாராயினர். அன்பனே! நீ உன் நிஜ சொரூபம் பேரறிவு என அறிந்தாய். ஆனாலும் மூன்று விதமான தடைகள் உன்னைத் தொடராமல் சங்கற்ப விகற்பங்களுக்குச் சாட்சியான ஆத்ம சொரூபனாய் இருப்பாயாகில் அதுதான் நீ எனக்குச் செய்யும் பிரதியுபகாரமான கைமாறாகும்.

88. குருதேவா! இருபத்தெட்டுத் தத்துவமும் ஜடமென்றும் இருபத்தொன்பதாவதுநிறைபொருளான தத்துவம் மெய்யறிவு என்றும், அந்த மெய்யறிவே பிரமம் என்றும், அது தன்மை, முன்னிலை, படர்க்கையாதி மூன்றுக்கும் ஆதாரமாயும், ஆதேயமாயும் பரிபூரணமாயும் உள்ள பிரமமே

நான் என உள்ளங்கைக் கனிபோல் தெளிவாய் அறிந்த ஞானம் மேற்கூறியத் தடைகளால் போகுமோ? குருவே என்று விண்ணப்பித்தான். அன்பனே! உன் நிஜ ரூப பிரம்ம ஞானம் சற்குரு உபதேசத்தாலும், வேதாந்தப் பாடத்தாலும் தோன்றும். ஆனாலும் தடைகள் உண்டாகுமானால் அந்த அனுபவம் திடப்படாது ஏனெனில் நீயென்றும், நானென்றும் ஆகிய இரண்டும் ஒரே அறிவு என்று அறிவதல்லவா ஞானம்.

89. அன்பனே! ஞானத்திற்கு விரோதமான தடைகளுக்குப் பெயர் கேட்பாயாக. அவை அஞ்ஞானம் எனவும், சந்தேகம் எனவும், விபரீதம் எனவும் கூறுவர். துன்பத்தைக் கொடுக்கும் இந்த மூன்றும் பல ஜன்மங்களில் பழகிவந்த பழக்கத்தால் கூடவே தொடர்ந்து வரும். வருமானால் அந்த ஞானம் திடப்படாமல் போய்விடும். ஆகையால் நிச்சயப் புத்தியுடன் கேட்டல், சிந்தித்தல், தெளிதல் ஆகிய மூன்றினாலும் மேற்கூறிய மூன்றையும் கெடுக்கவேண்டும். இதன் விளக்கம் அடுத்த மூன்ருவது (91) கவியில் பார்க்கலாம்.

90. அன்பனே! மணிமந்திர மருந்துகளால் அக்கினியானது கட்டுப்பட்டால் அதன் சூடு தணிந்து காட்டும். அப்போது அந்த நெருப்பானது ஜீவ ராசிகளையும், உன்னையும் சுடுவதில்லை. அதுபோல் முன்கூறிய மூன்று தடைகளோடும் கூடிய ஞானத்தால் அநாதியாக உன்னைத் தொடர்ந்துள்ள கர்த்தத்துவாதி பந்தம் நசியாது. ஆகையால் நேசத்தோடும் கேட்பதனால் அஞ்ஞானத்தையும், சிந்தித்தலால் சந்தேகத்தையும், தெளிதலால் விபரீதத்தையும் போக்குவாய் அதாவது ஒழிப்பாயாக!

91. அன்பனே! முன்கூறிய தடைகள் மூன்றுக்கும் விளக்கம் கேட்பாயாக. நீ பேரறிவு சொரூபனாய் இருந்தும் நான் பேரறிவு சொரூபன் என்ற பாவனையை மூடிமறைத்து நான் பேரறிவு சொரூபன் அல்லன் என்ற நினைப்பை ஊட்டுவது அஞ்ஞானமாம். நீ பேரறிவு சொரூபன் என்று குரு அருளிச்செய்த வாக்கியத்தை நம்பாமல் நான் ஒரு ஜீவன் என்ற குழப்பத்தை அடைவது சந்தேகமாம், நிலை

யற்ற உலகை சத்தியமெனவும், ஜடமான தேகமே நான் எனவும், உள்ளத்தில் ஏற்பட்ட மயக்கமே விபரீதமாகும்.

92. அன்பனே! அஞ்ஞான சந்தேக விபரீதங்களை போக்குவதற்குரிய கேட்டல், சிந்தித்தல், தெளிதலாகிய மூன்றுக்கும் பொருள் கூறுகின்றேன் கேட்பாயாக. இந்த ஆத்மா சத்து, சித்து, ஆனந்தம், நித்தியம், பூரணம் ஆகிய ஐந்தும் சொரூப குணமாகப் பெற்றுள்ளது என்று குருமுகமாகக் கேட்பது கேட்டல் என்பார். கேட்டபடி சிஷ்யன் ஆத்ம சொரூபமாகிய தன்னிடத்தில் சச்சிதானந்தாதி ஐந்தும் பொருந்தியிருக்கின்றனவா? அல்லது அவை தனித்தனியாக இருக்கின்றனவா? என்று துருவித்துருவி ஆராய்ந்து நோக்குவதை சிந்தித்தல் என்பார். அக்னிக்கு உஷ்ணம் சொரூப குணமாய் இருப்பது போல், மேற்கூறிய ஐந்தும் ஆத்மாவின் சொரூப குணமாகையால் அதுவே என் வாஸ்தவ சொரூபம் என்று நிச்சயமாக அறிவதைத் தெளிதல் என்பார். பிரதி தினமும் இவ்வாறு செய்துவந்தால் நீ ஜீவன்முக்தியை அடைவாய்.

இதன் உள்ளுரை:—

கேட்டல் என்பது குருமுகமாகக் கேட்கும் உபதேசம் ஆகும். அத்தகைய உபதேசம் எதைப்பற்றியதாக இருக்க வேண்டுமெனின்? வேதாந்த சூடாமணி பத்தொன்பதாவது கவியில் "நினைவரிய ஒரு பிரமம் நீயே என்று உள்ள நிலை உணர்த்துதல் குரவன் உபதேசமாகும்" என்றும் மேற்படி நூலில் இருபத்தொன்பதாவது கவியில் "நீ கடவுள் சொரூப நிசம் சச்சிதானந்த நித்திய பூரணமாக நீ நினைந்து கொள்ளே" என்றும் கூறியிருப்பதால் அறிக. இதற்கு மாறாகவுள்ள உபதேசமெல்லாம் முன்கூறிய விபரீதத்தில் அடங்குமென்க. இதை சிவஞான வள்ளலார் சாஸ்திரம் 289-ஆம் பக்கம் "சப்தகோடி மகாமந்திரம் சித்த விப்பிரம காரணம்" என்று கூறியிருப்பதே போதுமான சான்றாகும்.

93. குருதேவா! கேட்டல், சிந்தித்தல், தெளிதல் ஆகிய மூன்றும் எவ்வளவு காலம் வரை அனுஷ்டிக்க (பழக) வேண்டும்? அன்பனே! உன்னிடத்தில் காணும்

அறிவு வேறு, அறிபடுபொருள் வேறு என்ற பேதபுத்தியும், கர்த்தத்துவாதி புத்தியும் எவ்வளவு காலம் வரையிலும் உனக்குத் தோன்றுகின்றதோ அவ்வளவு காலம் வரையிலும் மேற்கூறிய கேட்டல் முதலிய மூன்றும் வேண்டும். அதன் பின்னர் அவை வேண்டுவதில்லை. எதிலும் பற்ருத ஆகாயத்தைப்போல் எத்தொழிலைச் செய்யினும் அதில் பற்ருத அசங்க சின்மாத்திர சொரூபிகளான ஜீவன் முக்தர்கள் பிராரத்துவ கர்ம முடிவில் விதேக முக்தியை அடைந்து சதாகாலமும் அதுவாய் இருப்பார்கள்.

94. அன்பனே! ஆத்ம ஞானம் நிறைந்த ஜீவன் முக்தர்கள் நான்கு வகையினராக இருப்பார்கள். அதன் விபரத்தை நீ கேட்பாயாக. ஆகாயத்தைப் போன்று எக் கருமத்திலும் பற்ருத பிரமவித்து, வரன், வரியான், வரிட்டன், இந்த நான்கும் அவர்களுடைய பெயர்களாம். இவர்களில் பிரம்மவித்துகளினுடைய அனுபவமும், மற்றைய மூவருடைய தாரதம்மியத்தையும் இனிக் கூறுவேன்.

95. அன்பனே! மனோதைரியமுடையவர்களாகவும், கேட்டலாதி மூன்றில் தெளிவுடையவர்களாகவும் ஆகிய இந்த ஜீவன் முக்தர்கள் அங்ஙனம் தெளிவு அடைவதற்கு முன்னர் தாங்கள் பழகிவந்த சற்கருமங்கள் பெரிதாக இருந்த போதிலும் பலபேர்க்கு உபகாரமாக செவ்வனே செய்வார்கள். அங்ஙனம் செய்தாலும் வேதங்களால் முடிவாகச் சொல்லப் பட்ட பேரறிவு சொரூபமே நான் என்ற நிச்சயத்தை விட மாட்டார்கள்.

96. அன்பனே! பிராரத்துவ கர்ம சேடத்தால் இந்த பிரம்மவித்துக்களுக்கு காமாதி இச்சைகள் வந்தாலும் கணத்தில் போகும். அதாவது வானத்தில் பறக்கும் பட்சியின் நிழல் ஓரிடத்தில் தங்காததுபோல் மேற்கூறிய இச்சைகளும் கணத்தில் தன்னைவிட்டு போய்விடும். அஞ்ஞானிகள் மனதில் விடாப்பற்று பற்றுவது போல் பற்றமாட்டாது. தாமரை இலையில் படும் நீர் அந்த இலையின் மேல் நின்ருலும் அதில் ஒட்டாதது போல் இந்த ஜீவன் முக்தர்கள் உலக விவகாரத் தோடு கூடியிருந்தாலும் அதில் பற்று உடையவர்கள் ஆக

மாட்டார்கள். உலகத்தில் ஞானமில்லாத கர்மகாண்டியைப் போலும், பக்திகாண்டியைப் போலும், தம்மைக் காட்டிக் கொள்வார்கள். அன்றியும் பிரம்மவித்தை பூரணமாக தனக்கிருந்தும் தன்னை ஒரு பண்டிதன் எனக் காட்டாமல் பாமரன் எனவும் காட்டிக்கொள்வார்கள். அதிகம் பேசிப் பயனில்லை என்று அறிந்து மனோமௌனமாக சொரூபஸ்திதியில் இருப்பார்கள். எப்பொழுதும் உள்ளத்தில் நித்தியத்திருப்தி உடையவர்களாகவும் இருப்பார்கள்.

97. அன்பனே! ஜீவன் முக்தர்களின் உலக வாழ்க்கைத்தரம் இன்னும் கூறுகின்றேன் கேட்பாய். இவர்கள் தங்களை பிரம சொரூபம் என்று தெளிவு அடைவதற்கு முன் செய்த கர்மங்கள் பல பேதமாய் இருப்பதால் அதன் விளைவான பிராரத்த கர்ம பல போகமும் பேதமாய் இருக்கும். அதனால் விவகாரங்களும் ஒருவருக்கிருந்தது போல் மற்றொருவருக்கு இருக்கமாட்டாது. ஒருவர் பெரிய தபத்தைச் செய்தாலும் செய்வர். அல்லது வியாபாரம் முதலிய தொழிலைச் செய்தாலும் செய்வார்கள். அல்லது அருச்சுனனைப் போல் அரசனாக இருந்து உலகை ஆண்டு வருவார்கள். அல்லது பிச்சையெடுத்தாயினும் தம் பசி தணித்துக்கொள்வர் இந்த ஜீவன் முக்தர்கள்.

98. அன்பனே! மேலும் இந்த ஜீவன் முக்தர்கள் தேகாதிப் பிரபஞ்சம் பொய் என்ற புத்தியினால் சென்ற காலத்தில் நடந்துபோன காரியங்களைப் பற்றியும் நினைக்கமாட்டார்கள். வருங்காலத்தைப் பற்றியும் நினைக்கமாட்டார்கள். நிகழ்காலத்தில் கண்முன் வந்து சேர்ந்த போகங்களைப் புசிப்பார்கள். மேலும் சூரியப் பிரகாசம் சந்திரப் பிரகாசமாகவும், சந்திரப் பிரகாசம் சூரியப் பிரகாசமாகவும் மாறிவிட்டாலும், ஆகாயம் ஆலம் விழுது போல் விழுதாக கீழே விழுந்தாலும், மரித்துப்போன பிரேதம் உயிர்பெற்று எழுந்தாலும் ஆச்சரியப்படமாட்டார்கள். ஒன்றை நல்லது என்றும் மற்றொன்றை தீது என்றும் நினைக்கமாட்டார்கள். 95 முதல் 98 வரையில் பிரம்மவித்தின் நிலைமையைச் சொன்னோம். இனி மற்றைய மூவரின் நிலைமையையும் கேட்பாய்.

99. அன்பனே! முன் கூறிய பிரம்மவித்து நீங்கலாக ஏனைய மூவரில் வரன், வரியானாகிய இரண்டு பேர்களும் ஆத்ம வடிவ சொரூப்மாக நிலைத்து இருப்பார்கள். இதற்கு சமாதி என்று பெயர். சரீரம் ஜீவிப்பதற்காக தன் முயற்சியால் உணவு முதலியவைகளைத் தேடுபவன் வரன் எனப் படுவன். சிஷ்யர்கள், பக்தர்கள் முதலியோரால் கொடுத்துண் பவன் வரியன் எனப்படுவன். அன்னியர்தம்மால், தன்னால் அறியாதோன் வரிட்டனாமே. அதாவது வரிட்டனுடைய சரீர நிர்வாகத்தைப் பற்றி அன்னியரும் சிந்திப்பதில்லை. தானும் சிந்திப்பதில்லை. ஆனால் பிராரத்துவ கர்மத்திற்கு ஈடாக அவனது சரீர நிர்வாகம் நடந்துகொண்டேயிருக்கும்.

இதன் உள்ளுரை :

வரிட்டனுடைய உணவு முதலிய விவகாரங்கள் பிறராலும், தன்னாலும் நடைபெறுவதில்லை என்று சிலர் கூறுகின்றார்கள்; அது பொருந்தாது. ஏனெனில் தத்துவ விளக்கப்படலம் 95 முதல் 98 கவி வரையில் பொதுவாக நான்குபேரையும் ஜீவன் முக்தனென்றே கூறிவந்துள்ளது. இதில் வரிட்டனும் ஜீவன் முக்தி வரிசையில் சேர்ந்தவனாகும். ஆகையால் அவனுக்கு அந்தக்கரணம் உண்டு. உண்ணல் முதலியத் தொழில்கள் அந்தக்கரணத்தின் செயலாகும். இதை அடுத்தக் கவியின் ஈற்றடியில் வரனும், வரியானும், வரிட்டனும் சுகமிாக வாழ்வார்கள் என்று கூறியிருப்பதால் காணலாம். சுகமாக வாழ்வதற்கு அந்தக்கரணம் இல்லாமல் முடியாதென்பதை அருத்தாபத்தியாலுணர்க. மேலும் அடுத்த கவியில் இவ்வாறு இவர்கள் அனேகர் ஆனாலும் முக்தி சரியாகும் என்று கூறியிருப்பதால் நான்குபேர்க்கும் சொருப நிச்சயமான முக்தி ஒரே மாதிரிதான், என்பதில். ஐயமில்லை. சொருப நிச்சயம் இல்லாவிட்டால் ,அவன் முக்தன் அல்ல. என்பதை தத்துவ விளக்கப் படலம் 55-வது கவியில் "சுழுத்தியில் பிரளயத்தில் தோற்றமாம் ஜகங்கள் மாண்டும் அழுத்திய பவம் போய் முக்தி அடைந்தவர் ஒருவருண்டோ?" என்று கேட்டிருப்பதால் அந்தக்கரணம் இல்லாவிட்டால் முக்தி இல்லை என்பதாயிற்று. எனவே வரிட்டனுக்கு அந்தக் கரணம் உண்டு. ஆனால் வரிட்டன் தேகாதி உலக

வி ாகாரத்தைக் குறைத்துக்கொண்டதறல் அவனே உயர் வாகக் கூறுகின்றதே ஒழிய ஞானத்திறல் அல்ல. மேலும் இந்த வரிட்டனேப் பார்க்கிலும் உலக விவகாரத்தோடு இருக்கும் பிரம்மவித்தே உயர்ந்தவன் என்று கூறியிருப்பதை யும் பாருங்கள். சந்தேகம் தெளிதல் படலம் 154-வது கவியில் சொன்ன ''நடுப்பூமியில் வந்த ஞானிகளே பிரம்ம வித்தாம் தூய முக்தர்'' என்று கூறியிருப்பதால் தூய முக்தன் என்ற அடைமொழி மற்றைய மூவருக்கும் இல்லே. ஏனெனில் இவனல் (வரிட்டனல்) வேதாந்த பாடம் முதலிய உலக விவகாரம் இல்லே. வரிட்டன் நிலே இவ்வாராயின் அன்னியர் தம்மால், தன்னல் அறியாதான் வரிட்டனுமே என்று கூறியிருப்பது ஏன்எனில் பிரம்மமாகிய நிறைபொரு ளான தன்சொரூபம் இத்தகையது என்று, தன்னலும் அள விட்டு பிறராலும் அறிய முடியாது என்பதே அதற்குப் பொருளாகும். இதை பிரம்ம கீதை பிரஹதாரண்ய உபநிஷத்தில் :- ''ஒழிவிலாப் பரமயோகிய ரநுபவ முள்ளவா றுரைத்திட வெணக்கோர் வழிபெறே னெடுமான் மகேசன் மாமுனிவர் வானவருடைத்திட மாட்டார், விழிமிகுஞ் சிவனல் விஞ்சையாஞ் சிவையால் விளம்பவும் படாதது விளம்பு, மொழியெலாம் வந்து மோனபாவத்தே முடியுமந்நிலமதே முடிவு'' என்று கூறியிருப்பதால் அறியலாம். சிற்றின்பத் திற்கே எல்லே காணமுடியாதென்ருல் சொரூபானந்தத்திற்கு எல்லே காண முடியுமா? ஆகையால் வரிட்டன் நிலே நமக்கு வரவில்லேயே என்று கவலேப்படாமல் பிரம்மவித்தாம் தூய முக்தனுக இருந்து உலகஉபகார விவகாரங்களே செய்வாயாக.

100. அன்பனே! கிடைப்பதற்கரிதான இந்த ஜீவன் முக்தர்கள் பிராரத்துவ கர்மவலியால் பலபேதமான விவகாரங் களே உடையவர்களாக இருந்தாலும் சுருதியுக்தி, அனுபவத் தால் அவர்கள் பெற்ற ஆத்ம ஞானத்தில் தாரதம்மியம் இல்லே. இவர்கள் பாடுபட்டு சம்பாதித்த சமாதிப் பழக்கத் திறல் அல்லது சிரவண மனன நிதித்தியாசனத்திறல் (தெளிவு) பலன் யாது? என நீ வினவின் கேட்பாய். பிரம்ம வித்தானவன் உலக உபகார விவகாரத்தில் ஈடுபட்டு இருப்ப தால் அவன் பிரத்தியட்சத்தில் பலதுக்கங்களே அனுபவிப்பன்.

மற்றய வரனும், வரியானும், வரிட்டனும் ஜீவன் முக்தி சுகத்தினை உடையவர்களாய் வாழ்வார்கள்.

101. குருதேவா! பிறவிக்கு ஏதுவான பிரதிப் பிரயோஜனத்தை விரும்பி கர்மங்களைச் செய்யும் அறிவிலிகளைப்போல் பிரம ஞானிகளும் பிராரத்துவ வினைவான கர்மங்களை செய்துகொண்டே வந்தால் அல்லது போகங்களை அனுபவித்துக்கொண்டே வந்தால் இந்த ஞானிகளுக்கு மாத்திரம் அஞ்ஞானம் நீங்கி மீண்டும் பிறவித் துன்பம் வராமல் இருப்பதற்கு காரணம் யாதோ அறியேன். அன்பனே! ஆகாயமானது மற்ற நான்கு பூதங்களோடு பற்றுமல் நிற்பதுபோல், ஞானிகள் தங்களை ஆத்ம சொரூபம் என்றும், அசங்கன் என்றும் அறிந்தபின் அவர்களுடைய அந்தக்கரணங்களால் செய்யும் கர்மங்களின் பலனில் விருப்பமில்லாமையால் அவர்களுக்கு மீண்டும் பிறவி வருவதில்லை. ஆகாயம் நீங்கலாக மற்று நாலு பூதங்களும் தம்முள் கலந்த பூதத்தோடு தாமும் கலக்கும். அதுபோல் ஆத்மா அசங்கன் என்று அறியாத அஞ்ஞானிகள் செய்யும் கர்மங்களின் பலனில் பற்றுடையவர்கள். ஆதலால் அவர்களுக்குப் பிறவித் துன்பம் வரும். இதுதான் ஞானி, அஞ்ஞானிகள் ஆகிய இருவருக்கும் உள்ள வேறுபாடுகள் ஆகும் என அறிக.

102. குருதேவா! இத்தகைய ஜீவன் முக்தர்களுக்கு உரித்தான பணிவிடைகள் செய்கின்ற அதிகாரி புருஷர்களுக்கும், பக்தர்களுக்கும் உரிய பயன் யாதோ அறியேன். அன்பனே! மும்மூர்த்திகளும் பிரசன்னமாகி வேண்டிய வரன்கள் கொடுப்பதற்கு எவ்வளவு தபம், தியானம், பூஜை, விரதங்கள் செய்ய வேண்டுமோ அவ்வளவும் இவர்கள் குருசேவை செய்யும் மாணவர்கள், செய்து முடித்தவர்கள் ஆவார்கள். அதுவுமின்றி ஈசுவர சேவையினால் மறுமையில் பயன்தான் கிடைக்கும். குருசேவையினால் இம்மை, மறுமை ஆகிய இருவகைப் பலன்களும் உண்டு. அதன் பயனாக ஆத்ம ஞானமும், அதன் பயனாக மோட்சமும் கூடும் என்றும் இதனால் ஜனன பரிசுத்தமானவர்கள் ஆவார்கள் என்றும் பழைய வேதங்கள் பிரதிபாதிக்கும். இனி இந்த ஜீவன்

முக்தர்கள் அடையும் விதேக முக்தியைப் பற்றியும் நீ கேட்பாயாக.

103. குருதேவா! பிறவித் துன்பத்தைக் கொடுக்கக் கூடிய சஞ்சித, ஆகாமிய, பிராரத்துவமாகிய மூவகை கருமங்களும் இந்த ஜீவன் முக்தர்களைப் பற்ருது — ஒழிந்துபோகும் விதம் எவ்வாருமென அறிய விரும்புகிறேன். அன்பனே! பல்லாயிரம் பொதிப்பஞ்சினை ஒரு தீப்பொறி பஸ்பமாக்கி விடுவது போல், ஆத்மஞானத்தால் சஞ்சிதவினை பஸ்பமாகிப் போகும். தாமரையிலை நீர்போல் தனது பற்றின்மையினுல் ஆகாமிய கர்மமும் விட்டுப்போகும். எஞ்சிநிற்பதான பிராரத்துவ கர்மத்தின் பயன் அனுபவித்துத் தீரும்.

104. குருதேவா! இந்த ஜீவன் முக்தர்கள் பிராரத்துவ கர்மத்தின் பயனை அனுபவிக்கும்போது நிகழ்காலத்தில் செய்கின்ற ஆகாமிய கர்மத்தின் பயன் மறுபிறவிக்கு ஏது வாகாமல் ஒழிந்துபோகும் வழியாதோ அறியேன். அன்பனே! ஞானிகளின் பெருமை அறியாமல் அறிவிற் சிறியவர்கள் தூஷித்து அந்த ஞானிகள் நிகழ்காலத்தில் செய்கின்ற ஆகாமிய பாவமும், அறிவிற் பெரியவர்கள் இவர்கள் பிரம ஞானிகள் என்று அறிந்து பாதபூஜை முதலிய பணிவிடைகள் செய்து அவர்கள் நிகழ்காலத்தில் செய்யும் ஆகாமிய புண்ணியமும் பெற்றுக்கொள்வார்கள். இக்காரணத்தால் ஆகாமிய புண்ணிய பாவங்கள் ஞானிகளைப் பற்ருதொழிந்து போகும்.

105. அன்பனே! முன்கூறிய மூவகைக் கருமங்களும் ஜீவன் முக்தர்களைப் பற்ருது ஒழிந்து போனதுபோல் மூன்று சரீரமும் நிகழ்காலத்தில் ஒழிந்துபோய் மீண்டும் பிறவிக்கு வாராத விதேக முக்தியையும் நீ கேட்பாயாக. அடைவதற் கரிதான பிரமஞானமான அக்கினியினுல் அஞ்ஞானம் அல்லது அவித்தையான காரண சரீரம் பஸ்பமாகிவிடும். தூல சரீரமும் அதற்குரிய காலத்தால் பிணமாகப் போகும். அப் போது நெருப்பில் காய்ந்த இரும்புண்ட நீர்போல் சூட்சும சரீரம் நிறைபொருளான பிரம்மத்தில் லயமாய்விடும். இதில் ஞானியின் பிராணன் வெளியில் செல்லாது என்னும் சுருதி

யினுல் இவ்வாறு கூறினர் என்று அறிக. இரும்புண்ட நீர் மீண்டும் ஜனிக்காமைக்கு உவமானமெனக்கொள்க.

106. அன்பனே! இங்ஙனம் மூன்று சரீர உபாதி போன பின் இந்த ஜீவன் முக்தர்கள் விதேக முக்தி அடைவதற்கு உபமானம் யாதோவெனின், ஒரு குடம் உடைந்த பின் அதிலுள்ள ஆகாயம் எங்கும் நிறைந்த ஆகாயத்தோடு சேர்ந்துவிடும். அதுபோல் மூன்று சரீரமான உபாதிகள் தத்தம் காரணத்துக்குள் லயமானபின் கீழ், மேல், நடுப் பக்கம் என்ற வேறுபாடு இல்லாமலும்; ஆதி, அந்தம், மத்திய பாகம் என்ற பாகுபாடு இல்லாமலும்; அகத்திலும், புறத்திலும் என்ற பேதம் இல்லாமலும் விளங்கும் பிரம்ம சொரூபமாய் நிலைபெறுவதே விதேக முக்தியாம். இங்ஙனமாய் விதேக முக்தியைப் பெற்று அதுவாக எக்காலத்திலும் இருப்பார்கள்.

இதன் உள்ளுரை :

ஜீவன்முக்தி, விதேகமுக்தி என இரண்டாகப் பேசினுலும் பொருள் ஒன்றேயாம். சில நூலாசிரியர்கள் ஜீவன் முக்தியையே விதேக முக்தியென்று கூறியிருக்கிறுர்கள். இந்நூலாசிரியர் சரீரத்தோடு இருக்கும் காலம் ஜீவன்முக்தியென்றும், தேகநாசம் விதேகமுக்தி என்றும் கூறுகிறுர். அனுபவத்தில் இரண்டுக்கும் பேதம் கூறவில்லை. இந்த இருவித முக்தியும் உலகத்தவர்களால் விவரிக்கப்படுகின்றதே ஒழிய, ஞானியின் சொரூபஸ்திதியில் இல்லை. அதாவது திடபோதத்தில் தேகத்தோடு இருக்கும்போதே இந்த ஜீவன் முக்தர்களை விதேகமுக்தர்கள் என்று கூறலாம். எங்ஙனமெனின் ஆத்மபுராணம் "கண்புல னுற்றவனுயினும் கண் புலனற்றவனே செவிப்புலனுற்றவனுயினும் செவிபுலனற்றவனே" என்றும்; ரிபுகீதை: "பரப்பிரமம் தானேயாகி சும்மாயிருந்திடுவோன் விதேகமுக்தன்" என்றும் கூறுயிருக்கின்றது. இதில் சும்மாயிரு என்று தேகமில்லாதவனை நோக்கிக் கூறிவார்களா? மேலும் தத்வானு சந்தானம் 280-வது பக்கம் "எக்காலத்தில் ஆத்மஞானம் உண்டாகிறதோ அக்காலத்திலேயே அவ்விதேக முக்தி உண்டா

கின்றது' என்று கூறியிருப்பதால் எப்பொழுது ஒருவனுக்கு ஆத்மஞானம் ஐயந்திரிபற உண்டாகின்றதோ அப்பொழுதே அவன் விதேக முக்தனுவன். ஆயினும் ஞானி, அஞ்ஞானி இருவர்க்கும் மரணம் சமமாய் இருப்பதால் அஞ்ஞானிகளைப் பார்க்கிலும் ஞானிகளுடைய மரணத்தில் உயர்வு தோன்ற வேண்டும் என்பதற்காக இந்நூலாசிரியர் ஜீவன்முக்தனுடைய தேகநாசத்தை விதேக முக்தி என்று ஸ்துதியர்த்த வாதமாகக் கூறினுர். இதை ஞானவாசிட்டம் "ஞானமடைந்த போதில் அவன் நல் வீடுற்ருேன் வீடாவது மடமை அந்தகாரம் கெடலன்ருே" என்று கூறியிருப்பதால் ஞானமடைந்த பொழுதே அவன் வீடடைந்துவிட்டான் என்பது தேற்றம்.

107. குருதேவா! இந்த ஜீவன் முக்தர்கள் விதேக முக்திப்பதம் அடைந்திருப்பர் என்று அருளிச்செய்தீரே! அங்ஙனமாயின் அடைந்தது என்று கூறும்போது முன்னில்லாதிருந்த ஒன்றை அடைந்தது. அதாவது செயற்கையாக ஒன்றை அடைந்தது என்று பொருள்படுமல்லவா? படுமாயின் "புணர்ந்தனபிரியும் பிரிந்தன புணரும்" என்று பட்டினத்து சுவாமிகளும், "கூடுதலுடன் பிரிதலற்று" என்று தாயுமான சுவாமிகளும் கூறிப்போந்துள்ள அனுபவங்களுக்குப் பொருந்தவில்லையே அன்பனே! நீயே முன் தத்துவ விளக்கப் படலத்தின் 88-வது செய்யுளில் "நீ நான் என்று இரண்டில்லாமல் நிறைந்த பூரணமாய் எங்கும் நாளுக தெளிந்த ஞானம்" என்று நீ உனது அனுபவம் சொன்னதை இங்கும் கொள்க. அத்தகைய உனது நிஜ சொரூபம் ஒரு காலத்தில் அடையப்படுவது அன்று, அடையாததுமன்று. அது சுபாவ சித்தமாக கழுத்தில் இருந்த ஆபரணம் காணுது பின் கண்டதாகக் கூறும் கண்டபூஷண நியாயம் போல் எப்பொழுதும் அடையப்பட்டுள்ளது. அது எதுபோலவெனின் ஆகாய வெளியானது எங்கும் நிறைந்திருக்க மண்ணைக் கெல்லிக் கிணருக்கியபின் அதில் தோன்றும் ஆகாயத்தை கூபாகாயமென்று விவகரிக்கப்படுவதுபோல் இயற்கையாகவே நம் சொரூப சுவாப சித்தமாயுள்ள பேரறிவான பிரமசொரூபம் குரு உபதேசத்தாலும், வேதாந்த சாஸ்திர பாடத்தாலும் புதியதாக அடையப்பட்டது போல் தோன்றும். அங்ஙனம்

தோன்றினும் அது தோற்ற அளவே ஒழிய எல்லையற்ற பரம் பொருளாகிய நாம் எப்பொழுதும் அகண்ட ஏகரச சொரூபன் என்று இருந்து வாழ்வாய். இதில் அடையப்படுபவனும், அடையப்படுபொருளும் வேறு வேறு என்ற துவிதபாவம் இன்றி இருப்பாய் என்பது பொருள்.

108. ஞான புத்திரா கானல் உள்ளவிடத்தில் ஜலம் தோன்றுவது போலும், இப்பியில் வெள்ளி தோன்றுவது போலும், ஜன்னிவாதசுரம் ஏறியவனுக்கு பல பட்டணங்கள் தோன்றுவது போலும், கனவில் தோன்றும் ஊர்கள் போலும், ஆகாயத்தில் நீலபீதாதி நிறங்கள் தோன்றுவது போலும், பழுதையில் பாம்பு தோன்றுவது போலும், மலடி மகன் போலும், முயலின் கொம்பு போலும், கட்டையில் கள்வன் போலும் தோன்றிய தேகாதிப்பிரபஞ்சங்கள் எல்லாம் பொய், அநிர்வசனீயமாம். பேரறிவு வடிவு பிரமம் ஒன்றுதான் மெய். மகனே! அறிவு சொரூபனுன உன்னை நம்மேல் ஆணையாக மறந்திடாதே.

இதன் உள்ளுரை :

இந்த ஒன்பது திருஷ்டாந்தப்படி தேகாதிப் பிரபஞ்சம் பொய் என்பது வேத சம்மதமாம், ஆனால் பொய் என்பது இல் பொருளைக் குறிக்குமா? அல்லது உள்பொருளைக் குறிக்குமா? எனின் அது இரண்டையும் குறிக்காது? பின் எதைக் குறிக்குமெனின், இரண்டிற்கும் வேறுன அனிர்வசனீயத்தையே அது குறிக்கும். உதாரணமாக ஞானவாசிட்டத்தில் வரும் காதிக்கும் லவணராஜனுக்கும் உண்டான இழிகுலப் பிராந்தியில் தோன்றிய புலையத்தன்மை இல் பொருளா? அல்லது உள் பொருளா? இரண்டுமன்று. இல் பொருளாயின் தோன்ருமல் இருக்கவேண்டும். உள் பொருளாயின் தெளிந்த பின்னரும் தோன்றவேண்டும். அன்றியும், சிவஞானசித்தி 8-ஆம் சூத்திரத்தில் "மன்னவன் தன் மகன் வேடரிடந்தே தங்கி வளர்ந்து அவனையறியாது மயங்கி நிற்ப" என்றும், பாரதத்தில் வரும் கர்ணன் தன்னை தேர்ப்பாகன் ஜாதியில் பிறந்து வளர்ந்தவனுகக் கருதியதும் ஆகிய இந்த இழிகுலப் பிராந்தி உட்பொருளா? அல்லது

இல் பொருளா? இரண்டுமன்று. இவை இரண்டுக்கும் வேருன அனிர்வசனீயத் தோற்றமாம். தனக்கென சொரூபம் ஒன்றின்றி தோற்றமாத்திரமாக உடையது எதுவோ? அது அனிர்வசனீயத்திற்கு இலக்கணமாம். மேற்கூறிய ஒன்பது திருஷ்டாந்தத்திலும் தோன்றிய தோற்றமான கட்டையிற் கள்வன் முதலியன உள் பொருளா அல்லது இல் பொருளா? இரண்டுமன்று. எனவே காரியம் காரணமாகவே விளங்கும் என்பது வேதாந்தத்தின் கோட்பாடு. சகல தோற்றங்களுக்கும் குடத்திற்கு மண்போல் பிரமம் உபாதான காரணமாம். இதையறியாது சிலர் வேதாந்தத்தில் உலகைப் பொய் யென்று கூறியிருக்கின்றது என்று குற்றம் சாட்டுகிருர்கள். அது வேதாந்த சம்பிரதாயம் அறியாதோர் கூற்ரும். பழுதையில் தோன்றிய பாம்பு தெளிவில் (தெளிந்த பின்னர்). பழுதையாக முடிவது போல் பிரமத்தில் தோன்றிய தேகாதிப் பிரபஞ்சம் தெளிவில் பிரமமாகவே விளங்கும் என்பதாம். இந்த ஒன்பது திருஷ்டாந்தத்திலும் சொற்பன திருஷ்டாந்தமே வேதாந்தத்திற்கு முக்கிய உடன்பாடாம். ஏனெனில் நனவில் காணும் பிரபஞ்சம் புலன்கள் வாயிலாக அனுபவத்தோடு கூடியது. அது எங்ஙனம் அனிர்வசனீயமாகும் எனின் சனவில் தோன்றும் பிரபஞ்சமும் புலன்களுக்கு அனுபவமாய் இருப்பதால் அதை உட்பொருளாய்க் கூற முடியுமா? கனவில் காண்பதுவும், கேட்பதுவும், அனுபவிப்பதுவும் அப்பொழுது வாஸ்தவம் போல் தோன்றினும், விழித்தபின் அனிர்வசனீயமாய்ப் போவதுபோல், நனவில் காண்பதுவும், கேட்பதுவும், அனுபவிப்பதுவும் சாட்சியான தன் சொரூபத்தில் விழிப்புடையவனுக்கு அனிர்வசனீயமாய்த் தோன்றும். இதுபற்றி இந்நூலாசிரியரும், தத்துவ விளக்கப்படலம் 45-வது செய்யுளில் காண்பவையெல்லாம் சொற்பனம் போல எண்ணித் துணிந்தவன் ஞானியாவான் என்று கூறுவதால் அறிக. சொற்பனத்தில் அனுபவித்த சுக துக்கங்கள் விழித்தபின் சொற்பன சாட்சியான நம்மிடத்தில் உண்டா? இல்லையல்லவா? அந்த சாட்சி நம்மைவிட வேருகுமா? ஓர்மின். மேற்கூறிய ஒன்பது திருஷ்டாந்தமும், கனவுக் காட்சிப் பொருளும், வாஸ்தவ, அபேத, பேத, கற்பித, தாதாத்மிய சம்பந்தமுடையது. அதுபோல் ஜீவேஸ்வர

ஜகத்தும் அறிவினை நோக்குமிடத்தில் வாஸ்தவ, அபேத, பேத, கற்பித, தாதாத்மிய சம்பந்தம் உடையது இக்காரணம் பற்றி இந்நூலாசிரியரும் அறிவொன்றே மெய்ப்பொருள் என்றும் அது உன்னைவிட வேறும் இல்லை என்று தம்மேல் ஆணையிட்டுக் கூறியிருப்பதைக் காண்க. கைவல்யத்தில் மொத்தம் மூன்று ஆணைகள் வருகின்றது. அதில் துவம் பத லட்சியமான அறிவு நீ என்பதற்கு தத்துவ விளக்கப்படலம் 72-வது கவியில் "ஆலமர் கடவுளாணை அவைக்கெல்லாம் சாட்சி நீயே" என்றும் துவம்பதத்தில் கண்ட அறிவே த்தபத லட்சியமான நிறைபொருள் அதுவே நீயாம் என்பதற்கு நம்மாணை உன்னை மறந்திடாதே என்றும் கூறினார். அடுத்த மூன்ருவது ஆணை அசிபதத்தை விளக்கும்போது சந்தேகந் தெளிதல் படலத்தில் வருவதைக் காண்க. அறிவே மெய்ப்பொருள் என்று இந்நூலாசிரியர் கூறியதுபோல் பிறரும் கூறியிருப்பதைப் பாருங்கள். "மனங்குளிர கேள்வி விருந்தருந்தி மெய்யறிவாம் வீட்டிலென்றும்" என்று இராமலிங்க அடிகளும், "ஆக்கை நீயல்ல அறிவு நீ என்று மறை வாக்கியங்கள் நான்கும் வகுத்துரைக்க நோக்காமல்" என்று சிவஞான வள்ளலாரும், "அறிவை அறிவது பொருளென அருளிய பெருமாளே" என்று அருணகிரி நாதரும், "அறிவை அறிவதுவே யாகும் பொருள் என்று உறுதிசொன்ன உண்மையினை ஒரும் நாள் எந்நாளோ?" என்று தாயுமான சுவாமியும், "அறிவு உன்னுருவ மென்றுந்தீபற" என்று சாந்தலிங்க சுவாமிகளும், "உணர்வே பிரமமென்று ஊதடா காளம்" என்று தத்துவராய சுவாமிகளும், "அறிவொன்றே கெட்டி அயலனைத்தும் போலே அறிவை நேதி செய்யலாமோ" என்று ஈசூர் சச்சிதானந்த சுவாமிகளும், "அனைத்துருவாம் அல்லாத அறிவுருவை அகத்துள் வைப்பாம்" என்று சசிவர்ணபோத ஆசிரியரும், "அறிவைத் தவிர வேறொன்றுமில்லை" என்று திருக்கு திருசிய விவேகத்தில் திருவண்ணாமலை ரமண சுவாமிகளும், "நான் அறிவு சொரூபன் என்றவொரு கனத்த நினைவே மோட்சமாகும் ராமா" என்று ஞானசிட்டம் கடைசி கவியில் வசிட்டமாமுனிவரும், "எல்லா சரீரத்திலும் இருக்கும் க்ஷேத்திரக்ஞன் ஆகிய அறிவு நான்"

என்று 13-ஆம் அத்தியாயத்தில் கீதாசாரியனும், "ஆனந்தா தேய பிரதான்ஸ்ய: அதாவது அறிவானந்த சொரூபத்தைத் தவிர வேறொன்றுமில்லை" என்று பிர்ம்ம சூத்திரத்தில் வியாசரும், "எனக்கு நாக்குண்டோ என்று ஒருவன் கேட்பானானால் அவ்வாறு கேட்பது நாக்குதான் என்று அறிவது போல், நான் என்று ஒருவன் சொன்னால் சொன்னது அறிவுதான். அதுதான் பிரமம் என்று அறியலாமல்லவா?" என்று பஞ்சதசியில் வித்யாரண்ய சுவாமிகளும், இந்த அறிவு மாயாரகிதமாகவுள்ள போது சிவம் என்றும், மாயா சகிதமாக வுள்ள போது ஜீவன் என்றும் வேதம் கூறும்" என்று சிவ ஞானபோத உரையில் கோ. வடிவேல் செட்டியாரும், "தேகாதிப் பிரபஞ்சம் முற்றும் தோற்ற மாத்திரமேயாம் உள்ளது அறிவொன்றே" என்று வடிவேல் செட்டியாரின் குருவான சை. ரெத்தினம் செட்டியார் எழுதிய தத்துவ வாதத்திலும், ஆத்மாவிற்கு வேருகக் கடவுள் இருந்தால் அது ஜடமேயாகும்; ஆகையால் ஆத்மாவான அறிவே பிரமம்" என்று விசாரசாகரத்தில் நிச்சலதாசரும், "இந்த அறிவைத்தவிர வேறொன்றுமில்லை" என்று கந்தபுராணத்தில் சூரபத்மனுக்கு உபதேசித்த சுக்கிராச்சாரியாரும், "நிச்சயமாக விசாரித்துப் பார்த்தால் ஆத்மாவாகிய இராமனைத் தவிர வேறொன்றுமில்லை" என்று இராமாயணத்தில் வான்மீகி முனிவரும், "வேதமுடிவில் கூறும் அறிவு வடிவமான ராமனை விட வேறொன்றுமில்லை" என்று இராமாயண சுந்தரகாண்டத் தின் காப்புச் செய்யுளில் கம்பரும், "அறிவான கடவுளைவிட வேறொன்றுமில்லை" யென்று பாரதத்தின் சாந்தி பருவத்தில் பீஷ்மாச்சாரியும், "நம்மை அறிவே வடிவாய் நாம் கண்டோமே அன்றி செம்மை உலகத் திரள் காணோம்" என்றும், "சாயையென விளங்கும் குடும்பத்தினை சுமந்தாலும் ஜகசாட்சியான அறிவு சொரூபம் தானே நாம்" என்று சொரூபசாரத்தில் சொரூபானந்தரும், "ஆனந்தத்தைவிட அறிவானந்தத்திடம் வேறு யான் கண்டிலன்" என்று கைவல் யத்தில் ஞானகுரு யோகியும், "அறிவின்றி மூன்று அவஸ்தை யும், நீயும் நானும் இல்லை. ஆகையால் இந்த அறிவே நீயாம்" என்று அனுபவானந்த தீபிகையில் நாதமுனி சுவாமிகளும், "பேரறிவாய சைதன்யம் ஒன்றே" என்று சைவசித்தாந்த சாஸ்திரம் 50-வது பக்கத்தில் சிவஞான

சுவாமிகளும், "அறிவுமயமாகிய உயிர் ஒன்றுமே அன்றி உடம்பு முதலாகிய உலகத்துப் பொருள்கள் எல்லாம் உயிரற்ற பொருளாம்'' என்று நன்னூல் 450-வது சூத்ர உரையில் பவணந்தி முனிவரும், "அறிவை நோக்கிடில் அதற்கு தாய் தந்தை இல்லை'' என்று துறவில் சூதமாமுனிவரும், "அறிவாயிரீர் மயக்கம் ஆகாது'' என்று ஒழிவிலொடுக்கத்தில் கண்ணுடைய வள்ளலாரும், "ஒரு கோடி சாஸ்திரங்களின் பொருள் சொல்லுகின்றேன்; இந்த ஜீவன் பேரறிவு வடிவமான பிரமமாம்'' என்று பாலபோதம் 213-வது பக்கத்தில் பிரமானந்த சுவாமிகளும், "நான் பேரறிவு வடிவமான பிரமமே ஒழிய அசத்து வடிவமான தேகமல்ல'' என்று அபரோக்ஷானுபூதி 24-வது சுலோகத்திலும், "ஜீவனாகிய தான் பேரறிவு வடிவத்தை அடையப்பட்டதாய் இருந்தாலும், அறியாமையினால் அறியப்படாததைப் போல் இருக்கிறது'' என்று ஆத்மபோதம் 44-வது சுலோகத்தில் ஆதிசங்கரரும், "ஊனாகி உயிராகி'' என்று மணிவாசகப் பெருமானும், "ஊனாய் உயிராய்'' என்று தேவாரத்தில் சுந்தரமூர்த்தி சுவாமிகளும், "நீ ஒரு காலத்தும் பிரமமாவது இல்லை; நீ இயற்கையில் பேரறிவு வடிவமான பிரமமாகவே இருக்கின்றாய்'' என்று அமெரிக்காவில் விவேகானந்த சுவாமிகளும் பிறரும் கூறிப்போந்துள்ள மகாவாக்கியப் பிரகாரம் இந்நூலாசிரியரும் ஞான சொரூபமான, அதாவது அறிவுவடிவமான உன்னை நம்மாணை மறந்திடாதே என்றும் கூறினர். ஆணையிட்டுக் கூறுதல் உறுதிப்படுத்துவதற் கென்க. இவ்வாறு வேதமும் கூறியுள்ளது. பிரமகீதை சாந்தோக்கிய உபநிஷத் "பத்தராயுள்ளீர் கேண்மின் பகர்ந்தவே தத்தினர்த்த, மித்தகைத்தாகும் வேறொன் றில்லையா மிதனிலுங்கள். சித்த நம்புதலுண்டாகச் செப்பினோ மாணை மூன்றோ, டத்தனார் பாதந் தொட்டே யென்றனனலரின் மேலோன்.

ரிபுகீதை

அறுவுருவா யமையுற்ற வான்மா தானே
யழியாம லிருப்பதனாற் சத்து மாகு
மறிவுருவா யமைவுற்ற வான்மா தானே
யனைத்தையுமே வினக்குவதாற் சித்துமாகு

மறிவுருவா யமைவுற்ற வான்மா தானே
யகிலர்க்கும் பிரியமதாற் சுகமு மாகு
மறிவுருவா யமைவுற்ற வான்மா தானே
யந்தமிலா திருப்பதனு லநந் தமாகும்.

ஓ நந்த இரண்டு செய்யுளின் பொருள் வெளிப்படை. இந்த தத்துவ விளக்கப்படலத்தில் 108-வது செய்யுளின் திரண்ட பொருள் யாதோவெனின் சாமவேதத்தின் சாந்தோக்கிய உபநிஷத்தின் 6-வது அத்தியாயத்தில் சுவேதகேதுவுக்கு தமது பிதாவாகிய உத்தாலக முனிவர் தத்துவமஸி என்று உபதேசித்தார். அதாவது பேரறிவாகிய பிரமமே நீயாயிருக்கின்ருய் என்று நிகழ்காலத்தைக் காட்டி உபதேசித்தருளினுர். சிஷ்யனும் அவ்வாறே பேரறிவு சொரூபமே தனது நிஜ சொரூபம் என்று அறிந்தார்.

தத்துவ விளக்கப் படலத்தின்
சாரம் முற்றுப் பெற்றது.

பிர்மம் ஸத்யம் - ஜகத் மித்தை.

குறிப்பு: சந்தேகம் தெளிதல் படலத்தின் சாரம் இரண்டாவது பிரசுரமாக அடுத்த வெளியீடாக வரும்.

ஸாது பிர்மானந்தா,
தலைவர், பிர்ம்ம வித்யா பீடம்,
T. T. P. ரோடு,
புலிவலம்-610 109, திருவாரூர்.

பிர்மமே ஸத்யம்.

இந்நூலாசிரியர் 8—10—76-ல்
அரக்கோணம், சுவாமி அபேதானந்தா என்கிற
Dr. T. முத்து அவர்களுக்கு எழுதிய
ஆத்மஞான அனுபவ நிருபத்தின் சாரம்.

நாங்கூர்,
8 — 10 — 76.

திரு. பேரன்புமிக்க டாக்டர் T. முத்து அவர்களுக்கு விரும்புவது நலம். நிற்க, நீங்கள் அன்புடன் 31—8—76-ல் வரைந்த கடிதம் காணப்பெற்றேன். அதில் உங்கள் நலத்தை தெரிவிப்பதோடு; ஒரு கேள்வியும் குறிப்பிட்டிருந்தீர்கள். சாஸ்திர வாசனை, உலக வாசனை, தேக வாசனை ஆகிய மூன்றும் விட்டுவிட்டு சொரூபானந்தத்தில் இருக்கும் என்னை மீண்டும், சாஸ்திர வாசனையில் இழுத்து வெளியில் கொண்டுவரும்படி நினைக்கும் உங்கள் நினைப்பிற்கு நன்றி. இது எதுபோல் இருக்கின்றது எனின் " நிர்விகற்ப சமாதியில் இருந்த பிரகலாதனையும், உலக விவகாரம் வேண்டாம் என்றிருந்த அர்ச்சுனனையும் தட்டி எழுப்பி, அரசனாக உலகாள வேண்டும் என்று சொன்ன கண்ணபிரானின் முயற்சியைப் போன்று இருக்கிறது உங்கள் முயற்சி எனக் கருதுகிறேன். ஆயினும் இந்த முயற்சியானது "நெல்லுக்கு இறைத்த நீர் புல்லுக்கும் ஆகும்" என்பது போல் விசார சீலர்களுக்கு அதாவது வேதாந்த நூல்களில் ஆராய்ச்சியுடையோர்களுக்கு பயன்படும் என்று சிறிது விளக்கம் எழுதுகிறேன்.

பேரறிவின் மிக்க உங்கள் கேள்வி எதைப்பற்றியது எனின், பிரபல வேதாந்த நூலாகிய விசாரசாகரத்தின் நான்காம் தரங்கத்தில் " நான் பிரமம் " என்ற ஞானம் கூடஸ்தனிடத்தில் உண்டாகிறதா? அல்லது ஆபாஸஸகித புத்தியினிடத்தில் உண்டாகிறதா? என்பதாகும்.

இந்த கேள்விக்கு சமாதானம் அதே விசாரசாகரத்தின் 4-ம் தரங்கம் 122-வது பக்கம், அதாவது 201-வது பிரிவில் காணலாம். நான் பிரமம் என்கிற ஞானமும் ஆபரஸனுக்கே உரியது என்று கூறியிருக்கிறதல்லவா? அஞ்ஞானம், ஆவரணம் முதலிய 7 அவஸ்தைகளையும் எடுத்துக்காட்டி, திருஷ்டாந்தமாக 10 புருடர்கள் ஒரு ஆற்றைக் கடந்த பின்னர் அதில் ஒருவன் ஒன்பதுபேரை எண்ணிப் பார்த்த பின் பத்தாமவனைக் காணும் என்று துயருற்றதாகவும், ஒரு பார்தாசாரியின் உதவியால் பத்தாமவன் "நான்தான்" என்று அறிந்தபின் துயரம் நீங்கி ஆனந்தம் அடைந்தான் என்று ஒரு கதையையும் கூறி முடித்திருக்கிறார். விசார சாகரகாரர் "இதில் உங்களுக்கு ஒரு சந்தேகம் உண்டாகக் கூடும். அதாவது ஆபாசன் கற்பனைப் பொருள் அல்லவா? அதற்கு நான் பிர்மம் என்னும் உண்மை ஞானம் உண்டாக்கக்கூடுமா? என்பதாம். இதற்கு சமாதானம் கூறுகின்றேன். கற்பனைப் பொருள்கள் அனைத்தும் உண்மை பொருளாய் விளங்குவதால், கற்பனைப் பொருள்களுக்கு தத்தம் உண்மைப் பொருளைக் காட்டிவிடும் என்பதற்கு ஐயம் இல்லை. உதாரணமாக பழுதையில் தோன்றும் பாம்பைப் பற்றி ஆராய்ந்த பின்னர், அது பழுதையைக் காட்டிவிட வில்லையா? கட்டையில் தோன்றும் கள்வன் மூலமாக கட்டையைக் காட்டிவிடவில்லையா? முத்துச்சிப்பியில் தோன்றும் வெள்ளித் தோற்றத்தின் வாயிலாக சிப்பியைக் காட்டிவிடவில்லையா? கானல் நீராகத் தோன்றுமிடத்தில் அது சூரிய வெப்பத்தைக் காட்டிவிடவில்லையா? ஒருவன் காணும் பொய்யான கனவில் தன்னை ஒரு புலி பிடித்துக் கொண்டதாக கண்டவுடன் அலறி அடித்துக்கொண்டு விழித்து நனவுக்கு வருங்கால் பொய்யான கனவு காக்ஷி மெய்யான நனவை காட்டிவிடவில்லையா? கண்ணாடியில் தோன்றும் பொய்யான பிரதிபிம்ப முகம், எதார்த்தமான நம் முகத்தின் அழகை காட்டிவிடவில்லையா? ஒரு ஞானிக்கு தோன்றிய கனவில் ஒரு பருவ மங்கையோடு உடல் உறவு ஏற்பட்டு அதன் மூலம் வீரியம் வெளிப்பட்டதாக வைத்துக் கொள்வோம். அப்பொழுது பொய்யான கனவு மெய்யான வீரியத்தைக் காட்டிவிடவில்லையா? இவ்வாறாக இன்னும்

பல உதாரணத்தால் பொய்யான ஆபாசன் தனக்கு ஆதார மான பிரமத்தை தன் சொரூபமாக, அதாவது நாம் பிரமம் என்றறிவதில் தவறென்றுமில்லை. ஏனெனில் கற்பனைப் பொருளும், எதார்த்த பொருளும் சோதனையின் முடிவில் ஒன்ருகவே காணப்படும். எப்படி கண்ணுடியில் தோன்றும் பிரதிபிம்ப முகமும், எதார்த்த முகமும் ஒன்றே தவிர இரண்டன்று என அறிவது விவேகமாகும். இவ்வாறு வேதாந்த நூல்களெல்லாம் ஆபாஸ வாதம் கூறியிருந்தாலும் அந்த நூல்களுக்கு அதுவே முக்கிய சித்தாந்தம் அன்று. மந்த புத்தியுடையவர்களுக்கு எவ்விதத்திலாவது பிரமத்தை தன் சொரூபமாக அறிவித்து துக்க நிவர்த்தியும், ஆனந்த பிராப்தியும் அடைய செய்யவேண்டும் என்னும் கருத்தால் ஆபாசவாதம் கூறியிருப்பதே ஒழிய, அதுவே சித்தாந்தம் அன்று. இதற்குப் பெயர் பாதசமனுதி கரணீயம், அதாவது கண்ணுடியில் தோன்றும் பிம்பமுகத்தை பொய்யென்று நிச்சயித்து, தன் எதார்த்த முகத்தை மெய்யென்று அறிவது போல், புத்தியில் தோன்றும் ஆபாஸன் வாயிலாக தன் எதார்த்த சொரூபம் பிரமம் என்றறிந்தபின் நேதி, நேதி வாக்கியத்தில் அந்த ஆபாசத்தையும் தூக்கி எறிந்துவிட வேண்டும். அது எதுபோல் எனின், ஒருவன் காலில் முள் தைத்துவிட்டால், மற்ரெருரு முள்ளால் அந்த முள்ளை எடுத்து விட்டு இரண்டு முள்ளையும் தூக்கி எறிவது போல், "நான் பிரமம்" என்று அறிந்த பின் அந்த புத்தியும், அதில் தோன்றிய ஆபாஸ விருத்தியையும் தூக்கி எறிந்துவிட வேண்டும்.

இனி வேதாந்தத்திற்கு உடன்பாடு யாதோ எனின் அது முக்கிய "சமனுதி கரணீயமாம்" அதாவது மகாகாயம் போல் எங்கும் நிறைந்த இந்த சைதன்ய சொரூபமாகிய ஆத்மா என்பதாம். ஆதிசங்கர பகவத்பாதர் இயற்றி அருளிய ஆத்ம போதத்தில் 26-வது சுலோகத்தில் "புத்திக்கு ஒரு போதும் ஞானம் இல்லை" என்று கூறியிருப்பதை காண்க. இவ்வாறு கூறியிருப்பதற்கு காரணம் யாதோ எனின், புத்தி என்பது சூட்சும பஞ்சபூதத்தின் ஒன்ருகிய அக்னியின் அம்ச மான ஒரு கருவியாகும். அது ஜடமாகையால் எப்படி ஞானமாகும். அக்னி ஜடமாகையால் அதன் காரியமான

புத்தியும் ஜடமல்லவா? மேலும் சுழுத்தி அவஸ்தையிலும் ஞானம் இருக்கின்றது. புத்தி இல்லையல்லவா? இருக்குமானல் அதன் தொழில் காணப்பட வேண்டுமே? இக்காரணம் பற்றி புத்திக்கு ஞானம் இல்லை என்று ஆச்சாரிய ஸ்வாமிகளும் கூறியிருப்பது பொருந்தும். இனி புத்தியை விளக்கிக்கொண்டிருக்கும் ஞானமும், அதாவது விருத்தி ஞானமும், கூடஸ்தனுகிய சாட்சி அறிவும் ஒன்ரு? அல்லது இரண்டா? எனில் ஒன்றுதான் எனக்கொள்ளவேண்டும். கூடஸ்தன் என்பதற்கு பொருள் யாதோ? எனின், இரும்பு வேலை செய்யும் கொல்லஆச்சாரியின் அடைக்கல்லை போன்றது இந்த அறிவு என்பது பொருள். இரும்புத் துண்டானது அடைக்கல்லின் உதவியால் எத்தனை விதமான ஆயுதங்களாக மாறினும், அந்த அடைக்கல்லானது, ஒரு மாறுதலும் இல்லாமல் இருப்பதால், அடைக்கல்லைப் போன்றது இந்த அறிவு எனக்கொள்க.

அங்ஙனமாயின் கூடஸ்தனுக்கு நிர்விகாரத்தன்மை கூறுகின்றதே எனின், மாறுதல் அடைவது விகாரம்; மாறுதல் அடையாதது நிர்விகாரம் என்பது பொருளாகும். சகல செயல்களும் ஆற்றியும் நிர்விகாரனு? அல்லது ஒரு செயலும் ஆற்ருது நிர்விகாரமா? எனின் இரும்புத்துண்டை பல பல ஆயுதங்களாக மாறினும் அடைக்கல்லானது ஒரு மாறுதலும் இன்றி இருப்பது போல் அறிவானது, அத்தொழிலை செய்யினும், எத்தகைய செயல் ஆற்றினும் அந்த பிரக்ஞானம் ஆகிய அறிவு தன்னிலையில் நிர்விகார பொருளாகத்தான் இருக்கின்றது என்பது, பசுமரத்தாணி போல் உறுதியாம். இங்ஙனமாயின், இந்த அறிவு அயோக்ய நிலைமையும் அடைகின்றதே எனின் ஒருவன் ஒருகாலத்தில் யோக்கியனுகவும் ஆகிவிட்டதாக வைத்துக்கொள்வோம். அப்பொழுது அயோக்யனுடைய அறிவு; பால் கெட்டு தயிர் ஆனதுபோல் கெட்டுவிட்டதா? கெட்டுவிடுமானுல் தயிர் மீண்டும் பாலாகாததைப் போல் அறிவு மீண்டும் யோக்கியனுக முடியாதல்லவா? ஆகையால் அறிவுக்கு மாறுதல் இல்லை. அறிவாகிய சைதன்யமும், போதிய உறுப்புகளும் ஒன்று சேரும் போது, அவாந்திரமாக அதாவது இடைநடுவில் ஏற்படுகின்ற எண்ணங்களுக்கே மாறுதல் காணப்படுகிறது.

இக்காரணம் பற்றி அல்லவா? கீதையில் "பற்றின்மை என்ற ஆயுதத்தால் யுத்தம்செய் அர்ச்சுனா! ஆயுதங்களாலும், நெருப்பாலும், ஜலத்தாலும் நாசமடையாதது ஆத்மா, அதாவது அறிவு. இந்த உலகத்தை எல்லாம் நீ கொன்றாலும் கொன்றவனுக மாட்டாய்" என்று கண்ணபிரான் எடுத்துக்காட்டி இருக்கிறார். மேலும், திரிவித பரிச்சேத சூன்யம் பிரமம் என்ற பதம் வேதத்தில் உபயோகித்து இருப்பதை காண்க. அதாவது தேசத்தினாலும், காலத்தினாலும், வஸ்துவினாலும் இந்த அறிவுக்கு நாசம் இல்லை. எறும்பு முதல் தேவர்கள் பரியந்தம் மணிகளுக்குள் நூல் போல் இந்த அறிவு நிறைந்திருக்கிறது என்பது பொருள் அல்லவா?

நனவு, கனவு, உறக்கம் ஆகிய மூன்று வித ஜீவபேதம் அதாவது விசுவன், தைஸஸன், பிராஞ்ஞன் என்று கூறியது போல் அறிவே மூன்று பேதமாக கூறிய நூல்கள் இருக்கிறதா? இல்லை அல்லவா? ஒவ்வொரு சந்தர்ப்பம் பற்றி புத்தி என்றும் ஆபாஸன் என்றும், கூடஸ்தன் என்றும், பிரமம் என்றும் கூறியதேயொழிய, அவை அனைத்தும் கற்பனைப் பெயர்களாம். முக்காலத்தும் அழியாத நித்தியமாக உள்ளது அறிவொன்றேயாம்; இதில் ஐயம் இல்லை. இந்த அறிவேதான் தெய்வமாகவும், கடவுளாகவும் கூறுவது வேதசம்மதமாம். ஞானவாசிட்டம் தேவபூசை கதை 20-வது பாட்டில் "செயப்படா உணர்வே தெய்வம்" என்றும் மேற்படி 21-வது பாட்டில் "அடிமுடிவு அற்றுள உணர்வே பரமபோதம்" என்றும் கூறியிருப்பதால் அறிவு, ஜனன, மரண மற்ற நித்யப் பொருள் என்பதாயிற்று. அறிவான தெய்வமே தேஜோமய ஆனந்தமே என்றார். தாயுமான சுவாமிகளும், "மெய் அறிவாம் வீட்டில்" என்றார் இராமலிங்க அடிகளும், பல்லாயிரம் வேதம், அறிவு ஒன்றே தெய்வமுண்டாம் எனல் கேளீரோ" என்றார் பாரதியாரும், "அறிவை அறிவது பொருள் என அருளிய பெருமானே" என்றார் திருப்புகழ் ஆசிரியரும், "நீக்கம் இன்றி நிறைந்த அறிவினை ஊக்கம் உற்று உணர்தற்கு இடன் ஆதலின் ஆக்கையும் குருவாயது அரசனே" என்று பகவத் புராணக்காரரும், "ஐயறிவு அறிந்து அவை

அடங்கினவரேனும் மெய்யறிவு இலாதவர் வீட்டு பெறுரே'' என்றார் விருதாசல புராணக்காரரும், ''ஐயறிவு எய்திய கண்ணும் பயன் இன்றே மெய்யறிவு இலாதவற்கு'' என்று திருக்குறள் ஆசிரியரும், ''ஆண்டான் உரைத்தபடியே அறிவாய் இருந்து கொள்நெஞ்சே'' என்றார் தாயுமான சுவாமிகளின் குருநாதன் ஆகிய மௌனகுரு சுவாமிகளும், ''அறிவாய்யிறீர் மயக்கம் ஆகாது'' என்றார் கண்ணுடைய வள்ளலாரும், ''அற்புறு பெரியோர் எல்லாம் அறிவே தெய்வம் என்பர்'' என்றார் சிவஞான வள்ளலாரும், ''அறிவாகிய நீயெனும் அப்பொருள்தாம் பொறியின் வழி நின்றறியும் பொருள்'' என்றார் மானந்தீபாரான முனிவரும் மேலும் ''அறிவாகிய ஆத்மா நிர்விகாரி என்று வேதம் கூறினும், சலனம் அதாவது சங்கற்பம் சித்துப் பொருளில் நிகழுமே அன்றி ஜடப்பொருளில் நிகழாது'' என்றார் செங்கல்வராய முதலியாரும், ''அறிவா நினைவும் அடங் கலாற் சித்தம் அறிவன்று சுசித்தா'' என்று உந்திபரர் அறிவு உன் உருவம் என்றும், தீபர என்றார் சாந்தலிங்க சுவாமிகளும், இதில் சித்தம், புத்தி முதலியவைகள் ஜடப் பொருளாகக் கூறியிருப்பதை காண்க.

''தோன்றி விளங்கும் அறிவொன்றே சொல்மாத்திரமாய் விடும் உலகம்'' என்றார் குமாரதேவ சுவாமிகளும், ''அறிபடு பொருள் நீயல்ல, அறிபடா பொருள் நீயல்ல, அறிபொருளா கும் உன்னை அனுபவித்தறிவாய்'' என்றார் கைவல்யகாரரும், ''அறிவாய் நின்றவிடத்தில் அறியாமை ஏதும் இல்லை என்று எம்பிரான் சுருதியே இயம்பும்'' என்றார் தாயுமான பெருமா-னும் இவ்வாருகபல சத்பிரமானங்களையும் எடுத்துக்காட்டியும் யாது பயன்? தானேதான் ஆன அறிவை எட்ட அறியாது வாளாபோயினர் பலர். எனவே, ''நான் பிரமம்'' அதாவது, நான் அறிவு சொரூபன் என்று கூறுவது அறிவே அன்றி ஆபாசனும் அல்ல, கூடஸ்தனும் அல்ல, பிரமமும் அல்ல, இவை அனைத்தும் அறிவுக்கு பரியாயப் பெயர்களாம். நான் அறிவு சொரூபன் என்று ஜடப்பொருள் கூறுமா? ஆகை யால் அறிவு சொரூபன் என்று தனது இருப்பை அறிவு கூறுவதில் வியப்பொன்றும் இல்லை. நான் அறிவு சொரூபன் அதாவது நான் பிரமம் என்று அறிவு ஏன் கூறவேண்டும்?

எனின் "ஆக்கை எனும் இடிகரையை மெய் என்ற பாவி நான்" என்று தாயுமான சுவாமிகளும் கூறியபடி, இடி கரைக்கு ஒப்பான உடம்பை உண்மையாக நம்பினவர்களைப் பார்த்து, நீ ஜடமன்று, அறிவு சொரூபன் என்று கூறுவது வேத சம்மதமாம் என்க.

இனி சகலபோக போக்ய சாதனங்களும் அறிவாகிய ஆத்மாவேயாம் என்று கூறியிருப்பதால், அறிவின் பற்றின்மையே, அதாவது அசங்கத்தன்மையே அறியத் தக்கதாம். இனி ஆபாஸவாதம் பூர்வபட்சமாக தள்ளத் தக்கதாம் என்பதற்கு வேதாந்தசூடாமணி 188-வது செய்யு ளின் கருத்தை இங்கே காண்பிக்கிறேன். "குடத்துக்கும் மண்ணுக்கும் உள்ள சம்பந்தம் போல் ஆபாஸனுக்கும், கூடஸ்தனுக்கும் உள்ள தொடர்பு என்று கூறுகின்ற காரிய காரணவாதமும், புஷ்பத்திற்கும் அதன் நிறத்திற்கும் உள்ள தொடர்பு போன்றது" என்று கூறுகின்ற குண குணிவாத மும்; பாலே தயிர் ஆவதைப் போல் என்று கூறுகின்ற விகாரவாதமும்; அலை, நுரை, குமிழி எல்லாம் ஒரே ஜலமே என்று கூறுகின்ற அம்சா, அம்சீகா வாதமும், பிம்ப, பிரதி பிம்பங்கள் இரண்டும் ஏகம் என்று கூறுகின்ற பிம்ப, பிரதி பிம்ப வாதமும் ஆகிய ஐந்து அபேதவாதமும் வேத விரோத மாம் என்று கூறியிருப்பதால் ஆபாஸ வாதமும் பூர்வபட்ச மாக தள்ளத்தக்கதாம். இந்த ஐந்து வாதத்தில் உள்ள தோஷங்களை எடுத்து விளக்க ஆரம்பித்தால் அதுவே ஒரு இராமாயணமாக முடியும் என்றும் கருத்தால் விடுவோம்.

இனி இந்த அறிவிற்கு மோட்சம் உண்டோ எனின் விசாரசாகரம் 4-ம் தரங்கம் "சிஷ்யனே பரமானந்த பிராப்திக்கும், ஜெனன மரணாதி துக்கரூப நிவர்த்திக்கும் உனக்குண்டான இச்சை பிராந்தியினால்தான்" என்று கூறி யிருப்பதால் பிராந்தி நிவர்த்தியே ஞானமாம்; அதாவது மோட்சமாம். இதை "பிறந்தது உண்டானால் அன்றோ பிறகு சாகுவதுதான் உண்டாம்" என்றும், "சித்து நான் நிறைந்தோன் என்ற திடம் மறவாதிருந்தால் எத்தனை எண்ணினாலும், ஏது செய்தாலும் என்னே" என்று கைவல்யம் கூறுவது "ஞான சொரூபமான நாம் நிறைபொருள்.

அந்த நிறைபொருள் ஜெனன மரணமற்றது என்னும் நிச்சயத்துடன் எத்தொழிலேயும் பற்றின்மையோடு செய்வாயாக.

மேலும் படித்து அறிந்தபோது பலகலே, ஆகமங்கள் எல்லாம் எடுத்து எறிந்துவிட்டேன். என்னேவிட வேறு இல்லே என்றே என்று தத்துவராய சுவாமிகள் கூறி இருப்பதன் நிச்சயித்தை கண்டுகொள்க. மெய்யுணர்வு என்று ஒரு அதிகாரத்தை வரையறுத்து கூறினர் திருவள்ளுவரும் மெய்யுணர்வு என்றபோது பொய்யுணர்வு ஒன்று இருக்க வேண்டுமே? என்று ஐயப்படா அறிவுக்கு அறிவு என்றும் கூறி குழப்பத்தை அடைந்தனர் பலர். இது நமக்கு உடன்பாடன்று. ஒரே அறிவு உலக விஷயத்தை பற்றும் போது பொய்யுணர்வு என்றும், அது தன்னே பற்றும்போது மெய்யுணர்வு என்றும் கூறுவதே சாலச் சிறந்ததாம். இந்த அறிவின் இயற்கை நிலே ஆனந்தமாகும். ஏனெனில் சுழுச்தியில் தோன்றும் ஆனந்தத்தில் நின்று தோன்றிய அறிவுக்கு ஆனந்தமே உபாதான காரணமாம். அதாவது முதற் காரணம் இது பற்றியன்றே? சுழுத்தி, "ஆனந்தம் ஸ்மிருதி வடிவாதலால் அவ்வானந்தமே அறிவாம்" வேறு அங்கில்லே என்று கைவல்யம் கூறியிருப்பதால், அறிவு சொரூபம் ஆனந்தமேயாம். ஆகுமாயின் இப்பொழுது நாம் யார்? ஆனந்த சொரூபிகள் அல்லவா? இவ்வறிவானந்த சொரூபத்தை முன்னிலே சுட்டுப் பொருளாய் அறிய முடியுமா? முடியாது. ஏனெனில் அறிபடுபொருள் அசத்து என்பது நிச்சயமாம். "முன்னிலே சுட்டு ஒழிதி என பல்காலும் நெஞ்சே நான் மொழிந்தேன்" என்று தாயுமான சுவாமிகளும், "உணர்வுரு அசத்து" என்று சிவஞானபோதம் ஆரும் சூத்திரத்திலும், "தோன்றுவதெல்லாம் அசத்து" என்று தேவிகாலோத்திரத்திலும், "சுட்டு போதம் கழன்ற" என்று கண்ணுடைய வள்ளலாரும், "கூடுதலுடன் பிறிதல் அற்று" என்று தாயுமான சுவாமிகளும், "புணர்ந்தன பிரியும், பிரிந்தன புணரும்" என்று பட்டினத்து சுவாமிகளும் கூறியிருப்பதால், அறிவானந்தமான பேரின்பத்தை கொடுக்க

ஒரு கடவுளாலும் முடியாது. உதாரணமாக: "கண்ணபிரான் அர்ச்சுனனுக்கு பேரின்பத்தை ஒரு மூட்டையாகக் கட்டி கொடுத்தாரா? இல்லையே! கீதை எழுநூறு. சுலோகத்தைச் சொன்னார் அல்லவா? ஸ்ரீ ராமபிரானுக்கு விசிஷ்டமாமுனிவர் பேரின்பமான மோட்சத்தை மூட்டையாகக் கட்டி கொடுத்தாரா? இல்லையே! மாருக ஞானவாசிட்டம் வடமொழியில் ஆறாயிரம் சுலோகமாகவும், அருந்தமிழில் இரண்டாயிரத்து ஐம்பத்தைந்து செய்யுளாக மொழிபெயர்த்து அருளினார் வீரைஆளவந்த முனிவர். இதன் பொருளை தக்கார்பால்கேட்டு உணர்வதற்கு எத்தனை காலமாகும்? யாம் அறியோம், வசிஷ்டமாமுனிவரும், கண்ணபிரானும் தக்கார் பால் கேட்டு உணர்க என்று அருளினார்கள். இவைகளை எல்லாம் சிந்தித்து பார்க்காத அவர்களுக்கு இது ஒரு கதை போலும். இவ்வாறு அறிவானந்த சொரூபமே நமது எதார்த்த சொரூபம் என்று ஐயம்திரிபுஅற உணர்ந்து அமைதியுருவாராக!

"பாரதம் உத்திர கீதை இரண்டாம் அத்தியாயத்தில் எதனாலும் என்ன? வேத சாஸ்திரங்கள் நன்றாக படித்திருந்தும் நானே பிரமம் என்று அதாவது, நானே பேரறிவு சொரூபன் என்று அறியாதுபோனால் அவனுக்கு படித்த பிரயாசை மாத்திரமே பலன் என்றார். கண்ணபிரானும் இனி வேதாகம, புராணஇதிகாசாதி சகல நூல்களும் தன்னை அறிந்து இன்புறுவதே முடிவாக முடிந்த நிலையாகும். மேற்கோளாக "தன்னை அறிந்து இன்பமுறு வெண்ணிலாவே" என்றார் இராமலிங்க அடிகளும், "தன்னை அறியில் தனக்கொரு கேடில்லை" என்றார் திருமூலர் திருமந்திரத்திலும், "தன்னையும் தனக்காதார தலைவனையும் கண்டானேல், பின்னை அத்தலைவன் தானாகி, பிரமமாகி, பிறப்பு தீருவன்" என்றார் கைவல்யக்காரரும், இதில் தன்னை என்னவென்று அறிவது? ஜடப்பொருளில் ஒன்றாக அறிவது தன்னை அறிவதாகுமா? ஆகுமாயின், ஜடப்பொருளில் இச்சை, ஞானம், முயற்சி காணவேண்டுமே? காணமுடியாதல்லவா? இதுபற்றி அன்றோ? "ஆயிதலிற் தேர்ந்தது, அறிவன்றோ நீ அதுகாண் ஓய்விடம் வேறன்று உணர்த்தினார்" என்றார் ஈசூர் சச்சிதானந்த சுவாமிகளும், "உணர்வே பிரமம் என்று

ஊதடா காளம்" என்ருர் தத்துவராய சுவாமிகளும், "அறிவே நோக்கிடில் அதற்கு தாய் தந்தை இல்லை" என்ருர் சூதமாமுனிவரும், "உத்தமங்களெல்லாம் உணர்வேதாம் பேணும்" என்ருர் சிவஞான வள்ளலாரும், இதனுல் உத்தமர்களே! இந்த உண்மையே அறிவார்கள், மத்திமர்கள் அறிய மாட்டார்கள் என்பதாயிற்று. இவ்வாறு துருவி, துருவி ஆராய்ந்துப் பார்த்தால், சைதன்னிய சொரூபமான அறிவு ஒன்றே முக்காலத்தும் உள்ளது என்றும், அது தன் வாஸ்தவ சொரூபம் என்றும், அந்த சொரூபம் பிறளய வெள்ளக்கடல் போல் நிறைந்தது என்றும் அறிந்து, பிரமவித்துக்களாக வாழ்வார்களாக.

முன்னிலைச் சுட்டுப் பொருள் அனித்தியமாம் என்பதற்கு சான்ருக சிவஞான வள்ளலாரின் சாஸ்திரம் நிராமய அந்தாதி ஆருவது வெண்பா: "அறிவாலறியப்படும் பொருளேயாகிற் பொறியாலறியப் புகாவோ" பொறியாரக் கண்டதெல்லாம் மாயை எனக் கண்டித்தான் மெய்ஞானம் உண்ட திருச்செவ்வாயான் ஊற்று" இதன் பொருள்: மெய்பொருள் முன்னிலைச் சுட்டுப் பொருளாக அறியக் கூடுமெனில், கட்புலனுக்கு தென்படாதா? வேதக்கட்டளை யாதோ எனின் கட்புலனுக்கு தென்படுவது எல்லாம் மாயாக் காரியமான நாம ரூபப் பொருள்கள், அவை அநித்தியமாம் என கண்டித்துக்கொண்டே வந்தார் மெஞ்ஞானத்தை உண்ட திருஞானசம்பந்த சுவாமிகள் என்பதாம்.

சுவாமி வாசுதேவானந்தா,
நாங்கூர்.

குறிப்பு.

பிழை திருத்தம்.

★

பக்கம்	வரி	பிழை	திருத்தம்
3	6	ஆதாவது	அதாவது
4	28	எனப்	(நீக்கிவிடுக)
7	19	சற்குருவடிவமென்னும்	சற்குருவடிவமென்றும்
10	2	ஒரு திணையளவும்	ஒரு தினையளவும்
18	17	ஆனத்தம்	ஆனந்தம்
20	26	அது. இந்த்	அதுவும் இந்த
24	20	மற்று நாலும்	மற்ற நான்கும்
24	22	மற்று நாலும்	மற்ற நான்கும்
27	2	ஜகனத்தாக	ஜகத்தாக
42	16	சொஸ் சொரூப	சொற் சொரூப
45	21	வேண்டுமெனின் ?	வேண்டுமெனின்
54	29	வேடரிடந்தே	வேடரிடத்தே
58	36	வினக்குவதாற்	விளக்குவதாற்
65	2	விருதாசல	விருத்தாசல
65	26	பிரமானங்களையும்	பிரமாணங்களையும்

தமிழ்நாட்டுத் தத்துவஞானி,

ஸ்ரீகுரு கிணகர் சுவாமிகள் அருளிய

தத்துவ ஞான தாலாட்டு.

[ராகம்: நீலாம்பரி]

ஆராரோ ஆரிரரோ — என் கண்ணே
ஆரிரரோ ஆராரோ.

1. சாந்தம் தவழ சன்மார்க்கம் மேலோங்க
வேந்தர் மகிழவந்த வித்தகமே கண்வளராய் [ஆ]

2. எங்கும் நிறைந்துலகம் எல்லாமா யல்லதுமாய்
துங்கம் பெற இலங்கும் சுயஞ்சோதி கண்வளராய் [ஆ]

3. உள்ளம் மகிழநல்ல உருவாயமைந் தெனக்கு
பிள்ளை யெனப்பிறந்த பேரறிவே கண்வளராய் [ஆ]

4. தாயும் தகப்பன்பந்து தாரம் முதலியன
மாயை யெனவிளக்கும் மறையமுதே கண்வளராய் [ஆ]

5. தாவரமும் ஜங்கமும் ஜகஜீவ தோற்றமெல்லாம்
மேவஒன்றுய் வியாபித்தமேம் பொருளே கண்வளராய் [ஆ]

6. தாயாகித் தந்தையுமாய் தனயன் உருவமுமாய்
நீயாகி யுள்ளபர நிராமய கண்வளராய் [ஆ]

7. சாரமில்லா சம்சார ஜகவாழ்வில் எங்கள் — மன
பாரம் குறையவந்த பரமஹம்சா கண்வளராய் [ஆ]

8. சிவனும் உமையவளும் சேர் முருகன் விநாயகனும்
அவனும் இவனும் எல்லாம் ஆனவனே கண்வளராய் [ஆ]

9. நினைவு இல்லாமல் தேகநிகட்சிகளத்தனையும்
துணையாய் நிகழ்த்துகின்ற தூயவனே கண்வளராய் [ஆ[

10. அணுவுள் அணுவாகி ஆகாயமும் கடந்து
நினைவுள் நினைவறியா நிற்பவனே கண்வளராய் [ஆ]

11. மோக உலகசுகம் முழுதும் முடிவிலொரு
சோகம் என உணர்த்தும் துரையே நீ கண்வளராய் [ஆ]

12. அண்டாண்ட கோடியெல்லாம் அணுபோன்று தன்னிடத்தில்
உண்டாக்கியே ஒடுக்கும் ஒரு பொருளே கண்வளராய் [ஆ]

13. சாகும் உடல்களிலே சாகாமல் நித்தியமாய்
ஏகம் பரம்பொருளாய் இருப்பவனே கண்வளராய் [ஆ]

14. ஜாதி மதப்பிடிப்பில் சார்ந்தோர் அறியவொண்ணு
போதப் பழம்பொருளாம் பூரணனே கண்வளராய் [ஆ]

15. கர்ப்பா சயத்தில் கருவை உருவாக்கி
தற்காத்து சிருஷ்டி செய்யும் சத்பொருளே கண்வளராய் [ஆ]

16. கர்ப்பா சயமின்றி கருவின்றி ஜீவர்களை
உற்பத்தி செய்கின்ற உயிர்க்குயிரே கண்வளராய் [ஆ]

17. வித்தில் விருட்சம் விரிவாய் உருவடைய
வித்துக்குள் வித்தாய் இருப்பவனே கண்வளராய் [ஆ]

18. வித்தேயில்லாத விருட்சம் பல தோன்ற
வைத்த பூதாதீத வைதீகா கண்வளராய் [ஆ]

19. யோகாதி வல்லுணர்கள் உணர்தற்கும் எட்டாத
சாகாச் சிரஞ்சீவி சத்தியமே கண்வளராய் [ஆ]

20. கர்த்தன் உனைப்பலதாய் கற்பித்து போற்றுகின்ற
பக்தர் அறியவொண்ணு பரமாத்மா கண்வளராய் [ஆ]

21. கற்பிதமாய் பக்தர்குழாம் கருதுதற்கு தக்கபடி
அற்புதமாய் காட்சிதரும் அருளுருவே கண்வளராய் [ஆ]

22. கடவுளே இல்லையென்று கருதுகின்ற நாஸ்திகரின்
உடலில் ஒளிர்உயிருள் உள்ளவனே கண்வளராய் [ஆ]

23. நான்யார் என்றுணரும் நாட்டமுள்ள நல்லவரில்
தான்தோன்றித் தம்பிரானய் சமைந்தவனே
கண்வளராய் [ஆ]

24. ஆணுகி பெண்ணுகி அலியாய் அலியுமல்லா
தானுகி நின்றபர தற்பரனே கண்வளராய் [ஆ]

25. துணையாய் சர்வஜீவருள் துலங்குகின்ற தெய்வமய
கிணகர் சுவாமிகளெனும் கிரகஸ்தனே கண்வளராய் [ஆ]